304

# தமிழ் இலக்கிய மணி மாலை

## முதல் மாலை

(1949-ம் வருடத்திய புதிய பாடத்திட்டத்தைத் தழுவியது)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JAN 1950
MADRAS

304/1-50

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம்.ஏ.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
...ண்டி செட்டித் தெரு, சென்னை-1.

T.B
031(9)
N49
87020

# தமிழ் இலக்கிய மணி மாலை

## முதல் மாலை

[1949-ம் வருடத்திய புதிய பாடத் திட்டத்தைத் தழுவியது]

தொகுப்பாசிரியர்:
டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ.,
தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 1950
MADRAS

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கோண்டி செட்டித் தெரு, சென்னை—1
1949
[ரூ. 1—8—0

பதிப்புரிமை]

முதற் பதிப்பு 1948
திருந்திய பதிப்பு 1949

87020

Printed at The Jupiter Press Ltd., Madras.—7-49.

# பதிப்புரை

தமிழ்ச் செய்யுள்மணிகளும் உரைமணிகளும் சேர்க்கப்பெற்ற இத் தமிழ் இலக்கிய மணி மாலை நான்காம் பாரத்திற்கு உரியது. 'இதன்கண் இருக்கத் தகுவன இவை இவை' என்று கல்வித் துறையினர் அண்மையில் வெளியிட்ட புதிய பாட இயலிற் (Syllabus) குறிப்பிட்டவற்றைத் துணையாகக் கொண்டே இம் மாலை தொகுக்கப்பெற்றது.

நான்காம் பார மாணவர் அனைவரும் வாரத்தில் நான்கு பிரிவேளை தாய்மொழி கற்கின்றனர். அவர்கட்குச் செய்யுட் பகுதி ஏறத்தாழ **400** வரிகளும் உரைநடைப் பகுதி இராயல்-**50** பக்கமும் (டெம்மி 70 பக்கம்) இருத்தல் வேண்டும் என்பது கல்வித் துறையினர் கருத்து. தாய்மொழியை வாரத்தில் எட்டுப் பிரிவேளை படிக்கும் மாணவர்க்குச் செய்யுட் பகுதியில் முன் சொன்ன 400 வரிகளுடன் **200** வரிகள் மிகுதியாகவும், உரைநடைப் பகுதியில் முன் சொன்னவற்றுடன் **20** முதல் **30** இராயல் பக்கங்கள் (டெம்மி 30 முதல் 40 பக்கங்கள்) மிகுதியாகவும் இருத்தல் வேண்டும் என்பதும் அக்கல்வித் துறையினர் கருத்தாகும். ஆகவே, இந்நூல் மேற்சொல்லப்பட்ட இருவகை மாணவர்க்கும் வேண்டும் பாடப்பகுதிகளைக் குறைவறக் கொண்டதாக இருத்தல்வேண்டும் என்பது கருத்து. மாணவர்க்கு வேண்டும் அளவினைவிடக் கூடுதலான பகுதிகள் தொகுதியின்கண் இருத்தல் வேண்டும் என்பது நல்ல கருத்து. இச் சிறப்பு நோக்கத்தை நன்கு உளங் கொண்டே இந்நூலில் (1) ஏறக்குறைய 700 வரிகளைக் கொண்ட செய்யுட்பகுதியும், (2) ஏறக்குறைய 100 பக்கங்கள் கொண்ட உரைநடைப் பகுதியும் தரப்பட்டுள்ளன. இத்தொகுதியின் கண்ணே நான்காம் பார மாணவர்க்கு உரிய எண்பது திருக்குறட் பாக்களும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நூலின் இறுதியில் செய்யுட்பாடங்களின் ஆசிரியர் வரலாறுகளும் குறிப்புரையும் தரப்பட்டுள்ளன.

இந்நூலில் தத்தம் செய்யுட்பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் சேர்த்துக்கொள்ள அன்புடன் இசைவு தந்த ஆசிரியர்க்கும் பதிப்பாளர்க்கும் என் நன்றி உரியதாகும்.

இந்நூலில் சேர்க்கப்பெற்றுள்ள செய்யுள் மணிகளையும் உரை மணிகளையும் மாணவர் கற்றுப் பயன்பெறுவர் என நம்புகிறேன்.

அண்ணாமலைநகர்,<br>15-7-'49.

அ. சிதம்பரநாதன்

# உள்ளுறை

செய்யுள்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I. | கடவுள் வாழ்த்து .... .... .... | 1 |
| II. | காதை | |
| 1. | நளவெண்பா .... .... .... | 2 |
| 2. | வில்லி பாரதம் .... .... .... | 5 |
| 3. | குசேலோபாக்கியானம் .... .... | 6 |
| 4. | மனோன்மணீயம் .... .... .... | 8 |
| 5. | இரட்சணிய யாத்திரிகம் .... .... | 9 |
| 6. | ஆசிய ஜோதி .... .... .... | 11 |
| III. | வருணனை | |
| 1. | இசைப் பயன் .... .... .... | 13 |
| 2. | யாறு .... .... .... | 13 |
| 3. | தாமரைத் தடம் .... ... .... | 14 |
| 4. | மரங்கள் .... .... .... | 14 |
| IV. | நீதி | |
| 1. | திருக்குறள் .... .... .... | 16 |
| 2. | நாலடியார் .... .... .... | 24 |
| 3. | சிறுபஞ்ச மூலம் .... .... .... | 25 |
| 4. | ஆசாரக்கோவை .... .... .... | 26 |
| V. | புகழ்ப் பாக்கள் | |
| 1. | தேவாரம் .... .... | 27 |
| 2. | பெருமாள் திருமொழி .... .... | 28 |
| 3. | திருப்புகழ் .... .... .... | 28 |
| 4. | திருவருட்பா விண்ணப்பம் .... .... | 28 |
| VI. | சிறு பிரபந்தங்கள் | |
| 1. | அற்புதத் திருவந்தாதி .... .... | 30 |
| 2. | நால்வர் நான்மணிமாலை .... .... | 31 |
| 3. | தேசிய கீதங்கள்—விடுதலை .... .... | 32 |
| 4. | சங்கொலி—புது வாழ்வு .... .... | 33 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| VII. | சிலேடை முதலியன ... .... .... | 34 |
| | உரைநடை | |
| 1. | இறையனுர் அகப்பொருள் உரை .... —நக்கீரர் | 36 |
| 2. | ஒரு பத்தினியின் கதை .... .... —பதிப்பாசிரியர்: திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் | 39 |
| 3. | தலைமைப் பேருரை .... .... —நாவலர், பண்டித திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் | 42 |
| 4. | நப்பசலையார் ... .... .... —வித்துவான் திரு. க. நயினுர் முகம்மது அவர்கள் | 47 |
| 5. | மதுரை ஆயிரக்கால் மண்டபம் .... .... —திரு. கா. அப்பாத்துரை அவர்கள், எம். ஏ., எல். டி. | 52 |
| 6. | புள்ளியும் பொருளாதாரமும் .... .... —டாக்டர் திரு. பி. நடராஜன் அவர்கள், எம். ஏ., டி. லிட். | 57 |
| 7. | செந்தமிழ் போற்றிய சேரன் .... .... —வித்துவான் திரு. த. கி. குப்புசாமி ஆழ்வார் அவர்கள் | 62 |
| 8. | காந்தியடிகளும் சமூகத் தொண்டும் .... —பண்டித, வித்துவான் திரு. தி. இராமானுசன் அவர்கள் | 68 |
| 9. | ஒரு கடிதம் .... .... .... —டாக்டர் திரு. மு. வரதராசனுர், எம். ஓ. எல். | 74 |
| 10. | ஒன்று பட்டால் உண்டு வாழ்வு .... .... —டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், எம். ஏ. | 80 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 11. | சர்வதேசக் கோர்ட்டு .... .... —திரு. வே. சாமிநாத சர்மா அவர்கள் | 86 |
| 12. | நோபெல் பரிசு பெற்ற அறிஞர் .... .... —பேராசிரியர் திரு. P. இராமநாதன் அவர்கள், M. A. | 92 |
| 13. | கப்பற் பிரயாணம் .... .... .... —திரு. T. பதுமாவதி அம்மையார் அவர்கள் | 100 |
| 14. | களிமண் .... .... .... திரு. R. K. விசுவநாதன் அவர்கள், M. A. | 108 |
| 15. | உலகத்தின் தென்முனை கண்ட வீரர் .... —புலவர் திரு. பு. செல்வராஜன் அவர்கள் | 115 |
| 16. | சேரமான் கணைக்கால் இரும்பொறை (நாடகம்) —திரு. வா. சுப. மாணிக்கம் அவர்கள், M. O. L. | 124 |
| | குறிப்புரை .... | 135 |

## இசைவு பெற்றுப் பதிக்கப்படுபவை

| பாடம் | இசைவளித்தோர் |
|---|---|
| **செய்யுள்** | |
| ஆசிய ஜோதி | கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, |
| யாறு, தாமரைத் தடம் | திரு. வி. சூ. சாமிநாதன், மதுரை |
| மரங்கள் | முல்லைப் பதிப்பகம், சென்னை |
| விடுதலை | பாரதி பிரசுராலயம், சென்னை |
| புது வாழ்வு | தமிழ்ப்பண்ணை, தியாகராய நகர் |
| **உரைநடை** | |
| செந்தமிழ் போற்றிய சேரன் நப்பசலையார் | பழநியப்ப சகோதரர், திருச்சிராப்பள்ளி |
| ஒரு பத்தினியின் கதை | சி. ஆர். ந. குமாரர்கள், சென்னை |
| காந்தியடிகளும் சமூகத் தொண்டும் | A. T. N. நாகலிங்கம் கம்பெனி, மதுரை |
| சர்வதேசக் கோர்ட்டு | பிரபஞ்ச சோதி பிரசுராலயம், புதுக்கோட்டை |

# தமிழ் இலக்கிய மணி மாலை

---

## செய்யுட் பகுதி

---

## I. கடவுள் வாழ்த்து

### திருவருட்பா

இன்பப் பெருக்கே! அருட்கடலே!
இறையே! அழியா இரும்பொருளே!
அன்பர்க் கருளும் பெருங்கருணை
அரசே! உணர்வால் ஆம்பயனே!
வன்பர்க் கரிதாம் பரஞ்சோதி
வடிவே! வடிவேல் மணியே!என்
துன்பத் திடரைப் பொடியாக்கிச்
சுகந்தந் தருளத் துணியாயே.

---

# II. காதை

## 1. நள வெண்பா

### கலி தொடர் காண்டம்

#### நளன் காட்டில் தமயந்தியை விட்டுப் பிரிதல்

" தீக்கா னகத்துறையும் தெய்வங்காள்! வீமன்தன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்; —நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்(று)
ஏதிலன்போற் போகின்றேன் யான்." 1

#### நளனைக் காணாது தமயந்தி வருந்தல்

நீலம் அளவே நெகிழ நிரைமுத்தின்
கோல மலரின் கொடியிடையாள்—" வேல்வேந்தே!
எங்குற்றாய்!" என்னா இனவளைக்கை நீட்டினாள்
அங்குத்தான் காணா(து) அயர்ந்து. 2

உடுத்த துகில்அரிந்த(து) ஒண்டொடியாள் கண்டு
மடுத்த துயிலான் மறுகி—அடுத்தடுத்து
'மன்னா!' எனவழைப்பாள்; மற்றுமவ னைக்காணா(து)
'என்னேயிஃ தென்!' என்(று) எழுந்து. 3

வெய்ய தரைஎன்னும் மெல்லமளி யைத்தடவிக்
கையரிக்கொண் டெவ்விடத்தும் காணாமல்—'ஐயகோ!'
என்னப்போய் வீழ்ந்தாள் இனமேதி மென்கரும்பைத்
தின்னப்போம் நாடன் திரு. 4

அழல்வெஞ் சிலைவேடன் அம்புருவ ஆற்றா(து)
உழலும் களிமயில்போல் ஓடிக்—குழல்வண்(டு)
எழுந்தோட வீழ்ந்தாள் இருகுழைமேற் கண்ணீர்க்
கொழுந்தோட வீமன் கொடி. 5

'செய்தபிழை யேது?' என்னும்; 'தேர்வேந்தே!' என்றழைக்கும்;
'எய்துதுய ரக்கரைகா ணேன் !' என்னும் ;—பையவே
'என்னென்னா தென் ?' என்னும்; ' இக்கானின் விட்டேகும்
மன்!' என்னா வாடும் அயர்ந்து. 6

அல்லியந்தார் மார்பன் அடித்தா மரையவள்தன்
நல்லுயிரும் ஆசையும்போல் நாறுதலும்—" மல்லுறுதோள்
வேந்தனே !" என்னா விழுந்தாள் விழிவேலை
சாய்ந்தநீர் வெள்ளத்தே தான். 7

' வெறித்த இளமான்காள் ! மென்மயில்காள் ! இந்த
நெறிக்கண் நெடிதாழி வாழ்வீர் !—பிரித்தெம்மைப்
போனாரைக் காட்டுதிரோ ?' என்னாப் புலம்பினாள்
வானாடர் பெற்றிலா மான். 8

## தமயந்தியைப் பாம்பு விழுங்குதல்

வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியால்
மோட்டு வயிற்றரவு முன்தோன்ற—மீட்டதனை
ஓரா தருகணைந்தாள் உண்தேன் அறல்கூந்தல்
போரார் விழியாள் புலர்ந்து. 9

அங்கண் விசும்பின் அவிர்மதிமேல் சென்றடையும்
வெங்கண் அரவுபோல் மெல்லியலை—மார்புக்கு
மேலெல்லாம் தோன்ற விழுங்கியதே வெங்கானின்
பாலெல்லாம் தீயுமிழும் பாம்பு. 10

## பாம்பின் வாய்ப்பட்ட தமயந்தி புலம்பல்

'வாளரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவ ! நின்
தாளடைந்து வாழும் தமியேனைத்—தோளால்
விலக்காயோ !' என்றழுதாள் வெவ்வரவின் வாய்க்கிங்(கு)
இலக்காகி நின்றாள் எடுத்து. 11

'வென்றிச் சினஅரவின் வெவ்வாய் இடைப்பட்டு
வன்துயராற் போய்ஆவி மாள்கின்றேன் !—இன்றுன்
திருமுகம்நான் காண்கிலேன் தேர்வேந்தே !' என்றாள்
பொருமுகவேல் கண்ணாள் புலர்ந்து. 12

'மற்றெடுத்த தோள்பிரிந்தும் மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த மக்காள்! பிரிந்தேகும்—கொற்றவனை
நீரேனும் காண்குதிரோ!' என்றழுதாள் நீள்குழற்குக்
காரேனும் ஒவ்வாள் கலுழ்ந்து. 13

'அடையுங் கடுங்கானில் ஆடரவின் வாய்ப்பட்(டு)
உடையும்உயிர் நாயகனே, ஓகோ!—விடைஎனக்குத்
தந்தருள்வாய்,' என்னுத்தன் தாமரைக்கை கூப்பினுள்
செந்துவர்வாய் மென்மொழியாள் தேர்ந்து. 14

அந்நிலையில் அவளை வேடன் காணுதல்

'உண்டோர் அழுகுரல்!' என்(று) ஒற்றி வருகின்ற
வெண்தோடன் செம்பங்கி வில்வேடன்—கண்டான்
கழுகுவாழ் கானகத்துக் கார்அரவின் வாயில்
முழுகுவாள் தெய்வ முகம். 15

தமயந்தி வேடனை வேண்டுதல்

'வெய்ய அரவின் விடவாயின் உட்பட்டேன்!
ஐயன்மீர்! உங்கட்(கு) அபயம்யான்;—உய்ய
அருளீரோ?' என்னு அரற்றினுள், அஞ்சி
இருள்ஈரும் பூணுள் எடுத்து. 16

சங்க நிதிபோல் தருசந் திரன்சுவர்க்கி
வெங்கலிவாய் நின்றுலகம் மீட்டாற்போல்—மங்கையைவெம்
பாம்பின்வாய் நின்று பறித்தான் பகைகடிந்த
காம்பின்வாய் வில்வேடன் கண்டு. 17

தமயந்தி நன்றி கூறல்

'ஆருயிரும் நானும் அழியாமல் ஐயா! இப்
பேரரவின் வாயில் பிழைப்பித்தாய்;—தேரில்
இதற்குண்டோ கைம்மா(று)?' எனவுரைத்தாள் வென்றி
விதர்ப்பர்கோன் பெற்ற விளக்கு. 18

# 2. வில்லி பாரதம்

## போர்

### நால்வகைப் படைகள் போர் புரிதல்

சென்று தேர்களுந் தேர்களுஞ் சேர்ந்தன ;
வென்றி வேழமும் வேழமும் ஊர்ந்தன ;
நின்ற வாசியும் வாசியும் நேர்ந்தன ;
வென்றி வீரரும் வீரரும் மேவினர். 1

பார வாளமும் வாளமும் பாய்ந்தன ;
கூர வேல்களும் வேல்களும் குத்தின ;
வீர சாபமும் சாபமும் வீக்கின ;
தூர வாளியும் வாளியுந் தோய்ந்தவே. 2

### அரசர் போர்

இட்ட தார்முடி மன்னவ ரோடெதிர்
இட்ட தார்முடி மன்னவர் எய்தினர் ;
பட்ட வர்த்தனப் பார்த்திவர் தம்முடன்
பட்ட வர்த்தனப் பார்த்திவர் எய்தினர். 3

### வீரர் போர்

கையில் வாளி தொலைந்தபின் காய்ந்துதம்
மெய்யில் வாளிகள் வாங்கிவில் வாங்கினர்
பொய்யி லாமொழிப் பூபதி சேனையின்
மையி லாண்மையி னர்சில மன்னரே. 4

வலக்கை அற்று விழவும் மனத்தொரு
கலக்கம் அற்றவெங் கார்முகத் தார்சிலர்
துலக்கெ யிற்றுக் கணைதொடுத் .தார்தொடை
இலக்கம் அற்ற படையிலக்(கு) ஆகவே. 5

தாள்இ ரண்டுடைச் சிங்கமன் னர்சிலர்
வாள்இ ரண்டொர்தொ டையினில் வாங்கினர்
கோள்இ ரண்டும்எ னக்குறு கார்தடம்
தோள்இ ரண்டும்து ணிந்தெதிர் வீழவே. 6

### நால்வகைப் படைகளின் கதி

ஓடி முட்டலின் தேர்கள் உடைந்தன ;
நாடி முட்டலின் நாகங்கள் வீழ்ந்தன ;
கூடி முட்டலிற் கொய்யுளை மாய்ந்தன ;
சாடி முட்டலின் ஆள்களுஞ் சாய்ந்தனர். 7

### வீரர் செய்த போர்

பற்றி நின்றொரு வன்படை வாளெதிர்
உற்ற வன்தலை சிந்திட ஓச்சினான் ;
அற்ற தன்தலை கொண்டவ னுந்தனைச்
செற்ற வன்தலை சிந்திட வீசினான். 8

வாளி ஆயிரந் தைத்த வழியெலாம்
ஒளி யாக ஒழுகுங் குருதியால்
தாள்இ லான்நடத் துந்தடந் தேருடை
மீளி யாமென நின்றனர் வீரரே. 9

வெட்டி னார்படை மெய்யிற் படாமைநின்(று)
ஒட்டி னார் இமைப் போதினில் ஓடியே
தட்டி னாருட லைத்தழு விக்கொடு
கட்டி னார்விழுந் தார்சில காளையர். 10

## 3. குசேலோபாக்கியானம்

### சுசீலையின் தன்மை

மாசிலாக் குலத்து வந்தாள்,
 வருவிருந் துவப்ப ஊட்டும்
நேசமிக் குடையாள், கொண்கன்
 நினைப்பறிந் தொழுகும் நீராள்,
தேசுறு வாய்மை உள்ளாள்,
 சினந்திடல் என்றும் இல்லாள்,
பேசுதிண் கற்பு வாய்ந்தாள்,
 பெற்றதே கொண்டு வப்பாள். 1

### சுதாமர் இரத்தலை வெறுத்தல்

'பல்லெலாம் தெரியக் காட்டிப்
பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித்
துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல வோட்டி
மானமென் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ!
இழிவிழி வெந்த ஞான்றும்.' 2

### சுதாமரின் எளிய வாழ்க்கை

இருநிலத் தியாவர் கண்ணும்
'ஏற்பதை யிகழ்ச்சி' யென்ன
ஒருவிய உளத்தான், காட்டில்
உதிர்ந்துகொள் வாரு மின்றி
அருகிய நீவா ரப்புல்
தானியம் ஆராய்ந் தாராய்ந்
துருவவொள் நகத்தாற் கிள்ளி
எடுத்துடன் சேரக் கண்டு. 3

வந்துதன் மனைகைந் நீட்ட,
வாங்கிமற் றவற்றைக் குற்றி
அந்தமெல் லியல்பா கஞ்செய்(து)
அதிதிக்கோர் பாகம் வைத்துத்
தந்ததன் பங்க யின்று
தவலரும் உவகை பூத்து
மந்திர மறைகட் கெட்டா
மாலடி நினைந்தி ருப்பான். 4

### மக்கள் உணவு பெறத் துன்புறுதல்

ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு
கைந்நீட்டும்; உந்தி மேல்வீழ்ந்(து)
இருமகவுங் கைந்நீட்டும்; மும்மகவும்
கைந்நீட்டும்; என்செய் வாளால்!

பொருமிஒரு மகவழும் ;கண் பிசைந்தழுமற்
றொருமகவு ; புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமக(வு)எங்
ஙனம்சகிப்பாள் பெரிதும் பாவம்! 5

' அந்தோஎன் வயிற்றெழுந்த பசிஅடங்கிற்
றில்லை !'என அழுமால ஓர்சேய் ;
' சிந்தாத கஞ்சிவார்க் கிலைஎனக்கன்
னாய்' எனப்பொய் செப்பும் ஓர்சேய் ;
முந்தார்வத் தொருசேய்மி சையப்புகும்போ
தினில்ஓர்சேய் முடுகி ஈர்ப்ப,
நந்தாமற் றச்சேயும் எதிரீர்ப்பச்
சிந்துதற்கு நயக்கும் ஓர்சேய் ; 6

' அடுத்தமனைச் சிறுனொருவன் ' இன்றுநும
தகம்கறியென் அட்டார் ?' என்று
தொடுத்துவினா யினானால் ; அச் சொற்பொருள்யா (து)?
அதுதான்எச் சுவைத்(து)? அன்னாய் ! நீ
எடுத்துரை'என் றிடும்மகவுக் குரைக்கில்அது
செய்யெனில்என் செய்வாம் என்று
' மடுத்தவஃ தறிந்திலேன்,' எனமற்றொன்
றுரைத்ததனை மறக்கச் செய்வாள். 7

## 4. மனோன்மணீயம்

[சீவக வழுதியும் வாணியும் உரையாடல்]

**சீவக :**

அருங்கலை ஆய்ந்தநின் தந்தைசொல் மதியும்
உன்புத்தி யும்உகுத்(து) உழல்வதென் வம்பில் ?
நலமே சிறந்த குலமே பிறந்த
பலதேவ னாம்ஒரு பாக்கிய சிலாக்கியன்
தன்னைநீ விடுத்துப் பின்னையோர் பித்தனை
நச்சிய தென்னை ! சிச்சீ !
நகையே யாகும் நீசெயும் வகையே.

வாணி :

அகலிடந் தனிபுரந் தாளும் வேந்தே!
நிகழும்என் சிறிய நினைவெலாம் விரித்து
விநயமாய் நின்பால் விளம்ப எனது
நாணம் நாவெழா(து) அடக்கு மாயினும்,
பேணி ஒருமொழி பேசுவேன் :
நேசமில் வதுவை நாசகா ரணமே.

சீவக :

புதுமைநீ புகன்றாய்! வதுவைமங் கையர்க்குப்
பெற்றார் ஆற்றுவர். ஆற்றிய வழியே
தையலார் மையலாய் நேயம் பூண்டு
வாழ்வது கடமை ; அதனில்
தாழ்வது தகுதியோ? தருமமோ? சாற்றே.

வாணி :

கற்பனைக்(கு) எதிராய் அற்பமும் மொழியேன் ;
ஆயினும், ஐயமொன் றுண்டு : நேயமும்
ஆக்கப் படும்பொருள் ஆமோ ?

சீவக :

ஆமோ அன்றோ யாம்அஃ(து) அறியேம்.
பிஞ்சிற் பழுத்த பேச்சொழி ; மிஞ்சலை.

## 5. இரட்சணிய யாத்திரிகம்

ஏசுநாதரைப் பகைவர் கட்டிக் கொண்டுபோதல்

செவ்வங்கி யைக்களைந்து தேவர்பிரான் முன்றரித்த
அவ்வங்கி யைத்தரித்தே ஆகடியம் பலபேசித்
தெவ்வர் குழுமிச் சிலுவை தனைச்சுமத்திக்
கவ்வை நகர்கலுழக் கட்டிக் கொடுபோனார். 1

நோக்கிலனா ஒவ்வொன்றும் நூறாயி ரங்கோடி
மாக்கயத்தின் சும்மை மலிந்தபா வந்திரட்டி
ஆக்கு சிலுவை அமலன் சிரத்தேந்தக்
காக்கை கடனாகக் கல்வாரி நோக்கினார். 2

தத்துநீர் வேலித் தராதலத்தோர் செய்தவினை
அத்தனையுந் தாக்கி அலமந்தும் ஆங்கமைந்து
சத்தமிடா தேகுந் தகன பலிமறியாம்
உத்தமருஞ் சாந்தமாய் ஊரூடு செல்கின்றார். 3

### ஏசுநாதரைக் கண்ட ஊரார் வருத்தம்

கல்லியல்வன் னெஞ்சவஞ்சக் கண்ணிலாப் பாதகராம்
புல்லியரே யன்றியிந்தப் பொல்லாங்கு போந்தமைகண்(டு)
எல்லவருந் தத்தம் உயிர்க்கிறுதி ஏய்ந்தனபோல்
அல்ல லுழந்தலமந் தாக்கை நிலைதளர்ந்தார். 4

'மாதருக்குள் ஆசிபெற்ற மங்கலையாம் அன்னைமரி
காதலனுக் கோவிக் கதிநேர்ந்த' தென்றுமன
வேதனைப்பட் டாற்றாது மெல்லியலார் தாங்குழுமி
வீதி யிருமருங்கும் மொய்த்தார்வாய் விட்டழுது. 5

பெண்டிரெலாம் அழுதரற்றப் பிள்ளைகளெ லாங்கதறக்
கண்டுகேட் டவரிரங்கிக் கரைந்துருகிக் கருத்தழிய
மண்டுதுயர் எனுந்தீயால் வயிறெரியக் கடிநகரம்
பண்டெரிவீழ்ந் தழிசோதோம் பதிபோலப் பதைத்தேங்க. 6

### கொலைக்களத்தில் ஏசுநாதர்

இப்பரிசு பெருந்துக்கக் குறிமல்கி எவ்வுயிருஞ்
செப்பரிய துயருழப்பச் செருசலையப் புறம்போக்கி
ஒப்பரிய முதுமூலத் தொருபொருளைக் கொண்டுய்த்தார்
மெய்ப்படுவன் மனக்கொலைஞர் வதைபுரிவான் கொலைக்களத்தில்.

### ஏசுநாதர் சிலுவையில் அறைபட்ட நிலை

ஈண்டினியான் புகல்வதெவன் எம்பெருமான் திருமேனி
தீண்டினார் சிலுவையொடு சேர்த்தினார் செங்கையிலுங்
காண்டகுசே வடியிலும்வெவ் விருப்பாணி கடாவினார்
நீண்டசிலு வையையெடுத்து நிறுத்தினார் நிலங்கீண்டு. 8

மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்தும் இடப்புறத்துஞ்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயலொழியச்
சொற்றமறைத் திருவசனந் துலக்கமுறச் சுருதிமுதல்
குற்றவா ளிகளோடு நடுநின்றார் குருசுமிசை. 9

பகைவரை மன்னிக்கும் மாண்பு

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்(து) 'எந்தாய் !
இன்னதென அறிகில்லார் தாஞ்செய்வ திவர்பிழையை
மன்னியும்!' என் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல். 10

'உலக இரட்சகர்'

நீண்டிருப்பு முளையுடலைக் கிழித்துருவி வதைப்புண்டு
மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியுமென் றுரைத்தமொழி
ஈண்டிவரே யுலகினுக்கோர் இரட்சகரென் றெடுத்துரைக்கும் ;
வேண்டுமோ இனிச்சான்றும் இதைவிடுத்து வேறென்றே ? 11

## 6. ஆசிய ஜோதி

புத்தர் இடைச் சிறுவனோடு உரையாடல்

ஆடுகள் மேய்த்துவரும்—ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்
வாடிக் கிடந்தவனைச்—செல்லும்
வழியின் மீதுகண்டான். 1

நிலத்தில் கிடந்தஐயன்—மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
" கலத்தினி லேகொஞ்சம்—பாலைக்
கறந்து தருவாய்," என்றான். 2

" ஐயையோ ! ஆகா "தென்றான்—சிறுவன்
" அண்ணலே ! யானும்உனைக்
கையினால் தீண்டவொண்ணா—இடையன்ஓர்
காட்டுமனிதன்," என்றான். 3

உலகம் புகழ்பெரியோன்—இந்த
உரையினைக் கேட்டந்நாள்
அலகில் கருணையினால்—சொன்ன
அமுத மொழி இதுவாம் : 4

### சாதிவேறுபாடு வேண்டா என்று காரணங் காட்டிக் கூறுதல்

“ இடர்வ ரும்போதும்—உள்ளம்
இரங்கி டும்போதும்
உடன்பி றந்தவர்போல்—மாந்தர்
உறவு கொள்வரப்பா ! 5

“ ஓடும் உதிரத்தில்—வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும்—சாதி
தெரிவ துண்டோ அப்பா ! 6

“ எவர்உ டம்பினிலும்—சிவப்பே
இரத்த நிறமப்பா !
எவர்வி ழிநீர்க்கும்—உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா ? 7

“ பிறப்பி னில்எவர்க்கும்—உலகில்
பெருமை வாராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில்—நல்ல
செய்கை வேண்டுமப்பா ! 8

### ஒழுக்கமே உயர்வு தாழ்வுகட்கு அடிப்படை

“ நன்மை செய்பவரே—உலகம்
நாடும் மேற்குலத்தார் ;
தின்மை செய்பவரே—அண்டித்
தீண்ட ஒண்ணாதார்.” 9

நிலத்து யர்ஞானி—இவை
நிகழ்த்தி, “ என்தம்பி !
கலத்தினி லேகொஞ்சம்—பாலைக்
கறந்து தா,” என்றான். 10

ஆயர் சிறுவனும்—கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு
தாயி னும்இனியன்—கொண்ட
தளர்ச்சி நீங்கினனே. 11

# III. வருணனை

## 1. இசைப்பயன்

பைத்தலை விடவாய் நாகம் பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாய் வல்லியம் மருட்கை யெய்தித்
தத்தமா றறியா ஆகித் தலைத்தலை மயங்கிச் சோர
இத்தகை மாவும் புள்ளும் இசைவலைப் பட்ட அம்மா ! 1

வன்றரை கிழிய வீழ்போய் வான்சினை கரிந்து நின்ற
ஒன்றறி மரங்கள் எல்லாஞ் செவிப்பறி வுடைய வாகி
மென்றளிர் ஈன்று போது விரிந்துகண் ணீரும் சோர
நன்றறி மாந்தர் போல நகைமுகம் மலர்ந்த மாதோ ! 2

வாழிய வுலகின் வானோர் மனிதர்புள் விலங்கு மற்றும்
ஆழிய கரண மெல்லாம் அசைவற அடங்க ஐயன்
ஏழிசை மயமே யாகி இருந்தன உணர்ந்தோ ருள்ளம்
ஊழியில் ஒருவன் தாள்புக் கொடுங்கிய தன்மை யொத்த. 3

கண்ணிறை நுதலோன் சாம கண்டத்தின் எழுந்த முல்லைப்
பண்ணிறை தேவ கீதஞ் சராசர வுயிரும் பாரும்
விண்ணிறை திசைக ளெட்டும் விழுங்கித்தன் மயமே யாக்கி
உண்ணிறை யுயிரும் மெய்யும் உருக்கிய திசைவல் லானே. 4

## 2. யாறு

யாறே ! தீம்புனல் யாறே ! ஓவா(து)
இழுமெனும் ஓதையின் ஒழுகிடும் யாறே !
முகிற்குழாம் உறங்கும் நகத்தினிற் பிறந்து
தவழ்தரல் உற்று நவமணி யோடு
வேழவெண் மருப்புங் காழகிற் றுணியும்
கழங்கென எறிந்து தழங்கொலி மேவிச்
செல்கதி மிகுத்துப் பல்பொழில் ஓடி
மரம்பெய் மலர்களை விரும்பி யணிந்து
குளம்பல நிறைத்து வளம்பெற வைத்துப்
பொன்னினைக் கொழித்து மன்னுறும் நங்காய் !

என்னே நின்வினை யாட்டுமற் றம்ம!
கொன்னே யொன்றுங் குயிற்றல் ஒருப்படாய்;
எவர்சிறை செய்திடர் இயற்றினும்
அவர்தமைப் புரக்குநின் அன்பென் சொல்கோ!

## 3. தாமரைத் தடம்

தண்ணீர் அருகில் தனிச்சென்றேன் தாமரையின்
உண்ணீர்மை கண்டேன் உளத்துவகை கொண்டேன்தம்
கண்ணீர் வடித்தவவை கண்ணுற்ற யானுமின்பக்
கண்ணீர் வடித்தேன் களிகூர்ந்து நின்றேனல். 1

'என்னே இயற்கைநலம்! என்னே இறைமகிமை!
என்னேஎன் னே!' என்ன இன்பக்கூத் தாடினேன்;
கொன்னே இராதுகரங் கூப்பித் துதித்தேன்யான்
தன்னே ரிலாத தனிக்கருணை வள்ளலையே. 2

கூடிவாழ் வோரே குறையா வலிவினர் மற்(று)
ஓடிவில கிட்டார் உறுவ துறுகணென்றே
நாடி யறியா நமரங்கள் தேரவன்றோ
பீடுடைய தாமரைகாள்! பெட்பின் ஒருங்குறைவீர்? 3

## 4. மரங்கள்

### தென்னை

தலைவிரித்தாய்; உடலினைத்தாய்; ஒற்றைக்கா
லால்நின்றாய்; தமிழ்நாட் டார்க்குக்
குலைவிரித்துத் தேங்காயும் குளிர்இளநீ
ரும்கூரைப் பொருளும் தந்தாய்;
'கலைவிரித்த நல்லார்கள் தாம்பசித்தும்
பிறர்பசியைத் தவிர்ப்ப தற்கே
இலைவிரித்துச் சோறிடுவார்,' என்பதற்கோர்
எடுத்துக்காட் டானாய் தெங்கே! 1

## பனை

ஊர்ஏரிக் கரைதனிலே என்னிளமைப்
பருவத்தில் இட்ட கொட்டை
நீரேதும் காப்பேதும் கேளாமல்
நீண்டுயர்ந்து பல்லாண் டின்பின்
'வாராய்' என்(று) எனைஓலை விசிறியினால்
வரவேற்று, நுங்குஞ் சாறும்
சீராகத் தந்ததெனிற் பனைபோலும்
நட்புமுறை தெரிந்தார் உண்டோ? 2

## மாதுளை

குவிப்புடைய விற்கோல்போல் புதல்எடுத்த
கோடெல்லாம் பூவும் பிஞ்சும்
உவப்படையச் செய்கின்ற மாதுளையின்
உதவியினை என்ன சொல்வேன்!
சிவப்புடைய மணிபொறுக்கிச் செவ்வானின்
வண்ணத்துச் செம்பி லிட்டுச்
சுவைப்பார்கள் எடுத்துண்டால் சுறுக்கென்று
தித்திக்கச் செய்த தன்றோ? 3

# IV. நீதி

## 1. திருக்குறள்

### கடவுள் வாழ்த்து

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்(கு)
யாண்டும் இடும்பை இல. 1

### வான் சிறப்பு

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது. 2

### நீத்தார் பெருமை

இருமை வகைதெரிந்(து) ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. 3

### அறன் வலியுறுத்தல்

சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்(கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு? 4

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். 5

### இல்வாழ்க்கை

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின், புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்? 6

### வாழ்க்கைத் துணைநலம்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்? 7

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. 8

### புதல்வரைப் பெறுதல்

தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. 9

### அன்புடைமை

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார் ;
மறத்திற்கும் அஃதே துணை. 10

### விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 11

### இனியவை கூறல்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 12

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 13

### செய்ந்நன்றி அறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்றல் அரிது. 14

### நடுவு நிலைமை

கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின். 15

### அடக்கம் உடைமை

காக்க பொருளா அடக்கத்தை ; ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு. 16

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் ; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 17

### பொறை உடைமை

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே ; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 18

### அழுக்காறாமை

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து. 19

வெஃகாமை

அஃகாமை செல்வத்திற்(கு) யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 20

ஒப்புரவு அறிதல்

ஒப்புரவி னல்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 21

ஈகை

வறியார்க்கொன் றீவதே ஈகை ;மற் றெல்லாம்
குறிஎதிர்ப்பை நீர துடைத்து. 22

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. 23

அற்றார் அழிபசி தீர்த்தல் ; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. 24

புகழ்

ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில். 25

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். 26

புலால் மறுத்தல்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் ? 27

தவம்

வேண்டிய வேண்டியாங்(கு) எய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 28

கூடா ஒழுக்கம்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின். 29

வாய்மை

வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 30

### வெகுளாமை

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க ; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 31

### இன்னா செய்யாமை

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் ; நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 32

### நிலையாமை

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. 33

### மெய் உணர்தல்

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய். 34

### ஊழ்

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன் ? 35

### இறை மாட்சி

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். 36

### கல்வி

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 37

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 38

### கல்லாமை

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 39

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 40

## கேள்வி

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது. 41

## அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 42

எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. 43

## பெரியாரைத் துணைக் கோடல்

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. 44

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும். 45

## தெரிந்து செயல்வகை

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். 46

நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. 47

## வலியறிதல்

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்(து) ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும். 48

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. 49

## காலம் அறிதல்

அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்? 50

கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. 51

### இடன் அறிதல்

அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின். 52

### தெரிந்து வினை ஆளுதல்

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. 53

### சுற்றம் தழால்

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. 54

### பொச்சாவாமை

அச்சம் உடையார்க் கரணில்லை ; ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 55

### செங்கோன்மை

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். 56

### வெருவந்த செய்யாமை

அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம் 57
பேஎய்கண் டன்ன துடைத்து.

### கண்ணோட்டம்

கண்ணோட்டத் துள்ள துலகியல ; அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. 58

### ஊக்கம் உடைமை

உரமொருவற் குள்ள வெறுக்கை;அஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. 59

### ஆள்வினையுடைமை

தாளாண்மை யென்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு. 60

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 61

அமைச்சு

அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன். 62

வினைத்தூய்மை

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 63

வினைத்திட்பம்

வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்;
மற்றைய எல்லாம் பிற. 64

குறிப்பறிதல்

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 65

படைச்செருக்கு

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து. 66

நட்பு

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 67

நட்பு ஆராய்தல்

ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். 68

பழைமை

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின். 69

சூது

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். 70

மானம்

புகழின்றால், புத்தேள்நாட் டுய்யாதால், என்மற்(று)
இகழ்வார்பின் சென்று நிலை? 71

சான்றாண்மை

கொல்லா நலத்தது நோன்மை ; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 72

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு ? 73

நாணுடைமை

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கஃ தின்றேற்
பிணியன்றோ பீடு நடை ? 74

குடி செயல் வகை

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 75

உழவு

இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். 76

நல்குரவு

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 77

இரவச்சம்

இரவுள்ள உள்ளம் உருகும் ; கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். 78

கயமை

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான். 79

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். 80

## 2. நாலடியார்

### ஊக்கம்

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும், நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான். 1

உறுபுலி யூனிரை யின்றி ஒருநாள்
சிறுதேரை பற்றியும் தின்னும்—அறிவினல்
காற்றெழில் என்று கருதற்க ; கையினல்
மேற்றெழிலு மாங்கே மிகும். 2

பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ றூர்வர் கயவர் ;—கருனையைப்
பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும். 3

ஆற்றுந் துணையும் அறிவினை உள்ளடக்கி
ஊக்கம் உரையார் உணர்வுடையார் ;—ஊக்கம்
உறுப்பினல் ஆராயும் ஒண்மை யுடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு. 4

தீங்கரும் பீன்ற திரள்கால் உளையலரி
தேங்கமழ் நாற்றம் இழந்தாஅங்—கோங்கும்
உயர்குடி யுட்பிறப்பின் என்னும், பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை ? 5

ஊக்கித்தாங் கொண்ட விரதங்கள் உள்ளுடையத்
தாக்கருந் துன்பங்கள் தாந்தலை வந்தக்கால்
நீக்கி நிறூஉம் உரவோரே நல்லொழுக்கம்
காக்குந் திருவத் தவர். 6

### நட்பு

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. 7

நளிகடல் தண்சேர்ப்ப நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
அல்கு நிழற்போல் அகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு. 8

நல்லா ரெனத்தான் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினும் அடக்கிக் கொளல்வேண்டும்.
நெல்லுக் குமியுண்டு ; நீர்க்கு நுரையுண்டு ;
புல்லிதழ் பூவிற்கு முண்டு. 9

## 3. சிறுபஞ்ச மூலம்

### கற்றவர்—கல்லாதவர்

1. தேவரே கற்றவர், கல்லாதார் தேருங்கால்
பூதரே, முன்பொருள் செய்யாதார்—ஆதரே,
துன்பமிலேம் பண்டு யாமே வனப்புடையேம்
என்பார் இருகால் எருது.

### ஒருவர்க்கு ஒன்றே எளிது

2. வான்குருவிக் கூடரக்கு வால்உலண்டு கோல்தருதல்
தேன்புரிந்தி யார்க்கும் செயலாகா—தாம்புரிஇ
வல்லவர் வாய்ப்பன என்னார் ஒரோவொருவர்க்(கு)
ஒல்காதோர் ஒன்று படும்.

### பெண்டிர் சிறப்பு

3. வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பி—திருவாக்கும்
தெய்வதையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு.

### கடமை உணர்வு

4. தான்பிறந்த இல்நினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ரால்கருதற் பாடுணர்ந்து—தான்பிறரால்
சாக எனவாழான் சான்றோரால் பல்யாண்டும்
ஆக எனவாழ்தல் நன்று.

அறிவுடையார்—அறிவில்லார்

5. பூத்தாலும் காயா மரமுமுள ; நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றுதார்—பாத்திப்
புதைத்தாலும் நாறுத வித்துள ; பேதைக்(கு)
உரைத்தாலும் செல்லா துணர்வு.

## 4. ஆசாரக் கோவை

காலைக் கடமைகள்

1. வைகறை யாமம் துயில்எழுந்து ; தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து ; வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை.

நீராடும் நீர்மை

2. நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்
நீந்தார் ; உமியார் ; திளையார் ; விளையாடார் ;
காய்ந்த தெனினும் தலைஒழிந் தாடாரே
ஆய்ந்த அறிவின் அவர்.

மாலையில் செய்யத் தகாதவை

3. அந்திப் பொழுது கிடவார் ; நடவாரே ;
உண்ணார் ; வெகுளார் ; விளக்கிகழார் முன்அந்தி
அல்குண்(டு) அடங்கல் வழி.

எப்போதும் செய்யத் தகாதவை

4. சுடரிடைப் போகார் ; சுவர்மேல் உமியார் ;
இடர்எனினும் மாசுணி கீழ்தம்மேற் கொள்ளார் ;
படைவரினும் ஆடை வளியுரைப்பப் போகார் ;
பலரிடை ஆடை உதிராரே என்றும்
கடனறி காட்சி யவர்.

தந்நமக்குத் தக்கன செய்தல்

5. உடைநடை சொற்சோர்வு வைதல்இந் நான்கும்
நிலைமைக்கும் கல்விக்கும் ஆண்மைக்கும் தத்தம்
குடிமைக்கும் தக்க செயல்.

# V. புகழ்ப் பாக்கள்

## 1. தேவாரம்

நாமார்க்கும் குடியல்லோம் ; நமனை யஞ்சோம் ;
　　நரகத்தில் இடர்ப்படோம் ; நடலை யில்லோம் ;
ஏமாப்போம் ; பிணிஅறியோம் ; பணிவோம் அல்லோம் ;
　　இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை ;
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
　　சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
　　கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே. 1

நறுமா மலர்கொய்து நீரின் மூழ்கி
　　நாடோறும் நின்கழலே ஏத்தி வாழ்த்தித்
துறவாத துன்பந் துறந்தேன் தன்னைச்
　　சூழ்உலகில் ஊழ்வினைவந் துற்றால் என்னே !
உறவாகி வானவர்கள் முற்றும் வேண்ட
　　ஒலிதிரைநீர்க் கடல்நஞ்சுண்(டு) உய்யக் கொண்ட
அறவா ! அடியேனை அஞ்சேல் என்னாய் ;
　　ஆவடுதண் துறையுறையும் அமரர் ஏறே ! 2

ஏயவன்காண், எல்லார்க்கும் இயல்பா னான்காண்,
　　இன்பன்காண், துன்பங்கள் இல்லா தான்காண்,
தாயவன்காண், உலகுக்கோர் தன்ஒப்(பு) இல்லாத்
　　தத்துவன்காண், உத்தமன்காண், தானே எங்கும்
ஆயவன்காண், அண்டத்துக் கப்பா லான்காண்
　　அகங்குழைந்து மெய்வருந்தி அழுவார் தங்கள்
வாயவன்காண், வானவர்கள் வணங்கி யேத்தும்
　　வலிவலத்தான் காண்அவன்என் மனத்து ளானே. 3

## 2. பெருமாள் திருமொழி

### விற்றுவக்கோட்டம்மான் விஷயம்

தருதுயரம் தடாயேல்உன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் விற்றுவக்கோட் டம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன் றிருந்தேனே. 1

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் விற்றுவக்கோட் டம்மானே!
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. 2

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும் விற்றுவக்கோட்(டு) அம்மா! உன்
புக்கிலங்கு சீரல்லாற் புக்கிலன்காண் புண்ணியனே! 3

## 3. திருப்புகழ்

காமியத்த ழுந்தி யிளையாதே
காலர்கைப்ப டிந்து மடியாதே;
ஓமெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்தி லந்த மருள்வாயே;
தூமமெய்க்க ணிந்த சுகலீலா!
சூரனைக்க டிந்த கதிர்வேலா!
ஏமவெற்பு யர்ந்த மயில் வீரா!
ஏரகத்த மர்ந்த பெருமாளே!

## 4. திருவருட்பா – விண்ணப்பம்

### இறைவனைத் துணைபுரிய வேண்டுதல்

மடுக்கும் நீருடைப் பாழ்ங்கிண றதனுள்
வழுக்கி வீழ்ந்தவன் வருந்துறு வண்ணம்
எடுக்கின் றோர்என இடையிற்கை விடுதல்
இரக்கம் உள்ளவர்க்(கு) இயல்பன்று கண்டீர்!

தடுக்கி லாதெனைச் சஞ்சல வாழ்வில்
தாழ்த்து கின்றது தருமமன் றுமக்கு
நடுக்கி லார்தொழும் ஒற்றியூர் உடையீர் !
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 1

அரந்தை யோடொரு வழிச்செல்வோன் தனைஓர்
ஆற்று வெள்ளமீர்த்(து) அலைத்திட, அவனும்
பரந்த நீரிடை நின்றுஅழு வானேல்,
பகைவர் ஆயினும் பார்த்திருப் பாரோ ?
கரந்தை அஞ்சடை அண்ணல்! நீர் அடியேன்
கலங்கக் கண்டிருக் கின்றது கடனோ ?
நரந்தம் ஆர்பொழில் ஒற்றியூர் உடையீர் !
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 2

பிறவிக் கண்ணிலான் கைக்கொளும் கோலைப்
பிடுங்கி வீசுதல் பெரியவர்க்(கு) அறமோ?
மறவிக் கையுறை மனத்தினேன் உம்மேல்
வைக்கும் அன்பைநீர் மாற்றுதல் அழகோ ?
உறஇக் கொள்கையை உள்ளிரேல் இதனை
ஓதிக் கொள் இடம் ஒன்றிலை கண்டீர்
நறவிக்கு ஓங்கிய ஒற்றியம் பதியீர் !
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 3

வலிய வந்திடும் விருந்தினை ஒழிக்கார்
வண்கை உள்ளவர், மற்றது போலக்
கலிய நெஞ்சினேன் வஞ்சக வாழ்வில்
கலங்கி ஐயநும் கருணையாம் அமுதை
மலிய உண்டிட வருகின்றேன், வருமுன்
மாற்று கிற்பிரேல் வள்ளல்நீர் அன்றோ ?
நலியல் நீக்கிடும் ஒற்றியம் பதியீர் !
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 4

# VI. சிறு பிரபந்தங்கள்

## 1. அற்புதத் திருவந்தாதி

### இறையன்பு

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்? 1

### மன உறுதி

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறிபணியா ரேனும்—சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. 2

அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கேநாம் அன்பாவ தல்லாற்—பவர்ச்சடைமேற்
பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்(கு)
ஆகாப்போம் எஞ்ஞான்றும் ஆள். 3

### குறை யிரத்தல்

ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டால்
கேளாத தென்கொலோ கேளாமை—நீளாகஞ்
செம்மையா னாகித் திருமிடறு மற்றொன்றும்
எம்மையாட் கொண்ட இறை. 4

### இறைவன் சிறப்பு

இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான்; தோற்றி
இறைவனே ஈண்டிறக்கச் செய்வான்;—இறைவனே
எந்தா யெனவிரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தா லதுமாற்று வான். 5

# 2. நால்வர் நான்மணி மாலை

நேரிசை வெண்பா

மகிழ்ச்சி மிகவுண்டு போலுமெதிர் வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது—நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டிரையும் தண்புகலிச் சம்பந்தா !
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு. 1

கட்டளைக் கலித்துறை

தாயிலி யாகுஞ் சிவபெரு மான்றனைத் தானெனுமோர்
கோயிலி னுறறி வாகிய நாமமுன் கொண்டிருந்த
வாயிலி னுணவ மாகுங் கபாடமு மன்றிறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவ னோக்குதற்கே. 2

ஆசிரிய விருத்தம்

நோக்குறு நுதலோன் நின்னிடை விருப்பால்
நூற்பக வன்ன நுண் மருங்குல்
மாக்கநல் மதிசால் மகளிர்தம் புலவி
மாற்றுவான் சென்றனன் என்றால்,
கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்
கொண்டதே துக்கு ? நீ புகலாய் ;
காக்கரு மதலை விழுங்கிய முதலை
கான்றிடத் தோன்றுநா வலனே ! 3

நேரிசை ஆசிரியப்பா

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசகன் எனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனமெனும் ஒண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா

வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே. 4

## 3. தேசிய கீதங்கள்

### விடுதலை

விடுதலை! விடுதலை! விடுதலை!

1. பறையருக்கு மிங்குதீயர்
புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை;
திறமைகொண்ட தீமையற்ற
தொழில்புரிந்து யாவரும்
தேர்ந்தகல்வி ஞானமெய்தி
வாழ்வமிந்த நாட்டிலே, (விடுதலை)

2. ஏழையென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை ஜாதியில்;
இழிவுகொண்ட மனிதரென்ப
திந்தியாவில் இல்லையே;
வாழிகல்வி செல்வமெய்தி
மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர்
சமானமாக வாழ்வமே. (விடுதலை)

3. மாதர்தம்மை யிழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம்;
வையவாழ்வு தன்னிலெந்த
வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமைமாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வமிந்த நாட்டிலே. (விடுதலை)

# 4. சங்கொலி

## புது வாழ்வு

தமிழ்நாட்டின் மனைதோறும்
புதுவாழ்வு வந்து
தனியான தருமத்தின்
சுகமுற்றும் தந்து
அமிழ்தான மொழிபேசி
அகிலத்தில் காணும்
அனைவோரும் உறவாக
அதுசெய்ய வேணும்;
நமதான இந்நாடு
நமதாக வென்றே
நாணோடு கோணாத
பணிசெய்து நின்றே
சமமாக எல்லாரும்
நல்வாழ்வு பெறவே
சரியான வழிகாண
உபகாரம் அதுவாம். 1

அறிவோடும் திறனோடும்
அன்போடும் கூடி,
அருளோடும் உறவான
புதுவாழ்வை நாடி,
செறிவோடு நிறைவாக
இந்நாட்டில் யாரும்
சிறியவாழ் விதுபோகப்
பெருவாழ்வு சேரும்
துறவோடு பொதுவாழ்வின்
துயர்போக மிக்க
துணிவோடு பணிசெய்து
துணையாக நிற்கும்
குறியோடு புதியவாழ்
வதுபெற்று விட்டால்,
குறையேதும் இனியில்லை
சுகமுற்று விட்டோம்! 2

# VII. சிலேடை முதலியன

## பாம்பு ஆகும் வாழைப்பழம்

நஞ்சிருக்குந் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டான் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம். 1

## பாம்பு எள்ளென ஓது

ஆடிக் குடத்தடையும் ; ஆடும்போ தேயிரையும் ;
மூடித் திறக்கின் முகங்காட்டும் ;—ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் ; பாரிற்பிண் ணாக்குமுண்டாம் ;
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது. 2

## கரும்பிற்காகச் சீட்டுக்கவி

எத்திசையு மேபரவு தக்கணா சலமுனி
யெதிர்த்தபா வலர்குடாரி
இராமாய ணக்கவியை நாடகஞ் செய்தவன்
இலக்கண முணர்ந்தபுலவன்
முத்தமிழ்க் காழியரு ணாசலக் கவிராய
முகில்வர விடுக்குமோலை,
முந்துபுகழ்த் தென்குளத் தூர்முத்து வீரப்பன்
முகமலர்ந் தினிதுகாண்க ;
வித்துவ சனங்களுக் காதார மாகியவர்
வேண்டிய வெலாமக்கணம்
விரகுடன் அளித்தனையெ னக்கேட்டு நாமுமுனை
மேவினோங் கவியெழுதினோம் ;
உத்தம சிகாமணி நீயாத லாலிவிட
மூன்றுபெரு மழைதொடருமுன்
ஓராயி ரங்கரும் பதுவேண்டும் ; நீமன
முவந்துவர விடல்வேண்டுமே. 3

## இஃது என்ன?

முற்பாதி போய்விட்டால் இருட்டே யாகும்;
முன்னெழுத்தில் லாவிட்டாற் பெண்ணே யாகும்;
பிற்பாதி போய்விட்டால் ஏவற் சொல்லாம்;
பிற்பாதி யுடன்முன்னெ ழுத்தால் மேகம்;
சொற்பாகக் கடைதலைசின் மிருகத் தீனி,
தொடர்இரண்டாம் எழுத்துமா தத்தில் ஒன்றும்:
பொற்பார்திண் புயமுத்துச் சாமி மன்னா!
புகலுவாய் இக்கவியின் புதையல் கண்டே. 4

## உரைநடைப் பகுதி

# 1. இறையனார் அகப்பொருள் உரை*

[நக்கீரர்]

அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடம் சென்றது. செல்லப் பசி கடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாம் கூவி, 'வம்மின்; யான் உங்களைப் புரந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை உள்ளி வம்மின்,' என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றை, அரசன், 'இனி நாடு நாடாயிற்று; ஆகலின், நூல் வல்லாரைக் கொணர்க,' என்ன எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, 'பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேம்,' என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, 'என்னை! எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே? பொருளதிகாரம் பெறேமெனின், இவை பெற்றும் பெற்றிலேம்!' எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழனிறக் கடவுள் சிந்திப்பான்; 'என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அது தானும் ஞானத்திடையது ஆகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்,' என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து, மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின்கீழ் இட்டான்.

இட்ட பிற்றை ஞான்று, தேவர்குலம் வழிபடுவான் தேவர் கோட்டத்தை எங்குந் துடைத்து நீர் தெளித்துப் பூவிட்டு, பீடத்தின்கீழ்ப் பண்டென்றும் அலகிடாதான்

---

* பவானந்தர் கழகத்தார் இசைவு பெற்றுப் பதிப்பிக்கப்பெற்றது.

அன்று தெய்வத் தவக்குறிப்பினன், 'அலகிடுவன்,' என்று உள்ளங் குளிர அலகிட்டான். இட்டார்க்கு அவ் வலகினேடும் இதழ் போர்தன. போதரக் கொண்டு போந்து நோக்கினற்கு வாய்ப்புடைத்தாயிற்றேர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்ட, பார்ப்பான் சிந்திப்பான்: 'அரசன் பொருளதிகாரம் இன்மையின் கவல்கின்றான் என்பது பட்டுச் செல்லாநின்றதுணர்ந்து நம் பெருமான் அருளிச்செய்தானகும்!' என்று தன் அகம் புகாதே கோயிற்றலைக்கடைச் சென்று நின்று, கடைகாப்பார்க்குணர்த்த, கடைகாப்பார் அரசற்குணர்த்த, அரசன், 'புகுதருக,' என்று பார்ப்பானைக் கூவ, சென்று புக்குக் காட்டக் கொண்டு நோக்கி, 'இது பொருளதிகாரம்! நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்தான் ஆகற்பாலது!' என்று அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவித்து, 'நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம்! இதனைக் கொண்டுபோய்ப் பொருள் காண்மின்,' என, அவர்கள் அதனைக் கொண்டுபோந்து, கனமாப் பலகை ஏறியிருந்து ஆராய்வுழி, எல்லாரும் தாம் தாம் உரைத்த உரையே நன்றென்று சில நாளெல்லாம் சென்றன. செல்ல, 'நாம் இங்ஙனம் எத்துணை உரைப்பினும் ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச் சென்று நமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும் என்று கொண்டுபோந்து, அவனல் பொருளெனப் பட்டது பொருளாய், அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக் காண்டும்,' என, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றார். செல்ல, அரசனும் எதிர் எழுந்து சென்று, 'என்னை? நூற்குப் பொருள் கண்டீரோ?' என, 'அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்,' என, 'போமின்! நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று; நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையினின்றே!' என்று அரசன் சொல்லப்போந்து, பின்னையும் கனமாப் பலகை ஏறியிருந்து, 'அரசனும் இது

சொல்லினன்; யாம் காரணிகனைப் பெறுமாறு என்னை கொல்!' என்று சிந்தித்திருப்புழி, 'சூத்திரம் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே! அவனையே, காரணிகனையும் தரல் வேண்டும் என்று சென்று வரங் கிடத்தும்,' என்று சென்று வரங்கிடப்ப, இடையாமத்து, 'இவ்வூர் உப்பூரிகுடிகிழார் மகனுவான் உருத்திரசன்மன் என்பான், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப் பிள்ளை உளன்; அவனை அன்னனென்று இகழாதுகொண்டுபோந்து, ஆசனமேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தால், கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளா இருக்கும்; அவன் குமாரதெய்வம்! அங்கோர் சாபத்தினல் தோன்றினன்,' என மூக்கால் இசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர் குலத்தை வலங் கொண்டு போந்து, உப்பூரிகுடிகிழாருழைச் சங்கமெல்லாம் சென்று, இவ்வார்த்தையெல்லாம் சொல்லி, 'ஐயனுவான் உருத்திரசன்மனைத் தரல் வேண்டும்,' என்று வேண்டிக் கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச்சூட்டி, வெண் சாந்தணிந்து, கனமாப் பலகையேற்றி இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப, எல்லாரும் முறையே உரைப்பக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனர் உரைத்த இடத்து ஒரோ வழிக் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனர் மகனர் நக்கீரனர் உரைத்த இடத்துப் பதந்தொறும் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப ஆர்ப்பெடுத்து, 'மெய்யுரை பெற்றும் இந்நூற்கு!' என்றார்.

## 2. ஒரு பத்தினியின் கதை*

[பதிப்பாசிரியர், திரு கா. நமச்சிவாய முதலியார் அவர்கள்]

'செய்வன திருந்தச் செய்' என்பதுபோல, நாம் மேன்மை பெறுவதற்கு ஒரே வழியுண்டு; அவ்வழியாவது, நம்முடைய வேலையை நாம் லோபமின்றித் திருந்தச் செய்வதாம். ஒரு வேலையினுடைய தாழ்மையை எண்ணி, அவ்வேலை செய்பவரை நாம் ஒருபோதும் தாழ்வாகக் கொள்ளலாகாது. தாழ்ந்த வேலை செய்பவரைவிட உயர்ந்த வேலை செய்பவர் சிறந்தவரென மதிப்பதும் தவறு. செய்யும் வேலையைக் கொண்டு ஒருவனை நாம் மதிக்காமல், அவன் அவ்வேலையை எவ்வாறுகச் செய்கிருன் என்பதையே ஆராய வேண்டும். ஒரு வேலையைச் செய்யும் விதமும், திறமும் ஆகிய இவ்விரண்டுமே செய்வோனை அறியுங்கருவியாம். தன் குல விதிப்படி சொற்ப காலத்தில் அழுத்தமும் அழகுங் கூடிய செருப்பைத் தைக்கும் சக்கிலி, சாரமற்ற விஷயங்களைப் பேசித் திரியும் உயர்குலத்தோனைக் காட்டிலும் மேலானவனுவான். எங்ஙனமெனில்,

முன்னொருகால், யௌவன சந்நியாசி யொருவர் ஒரு காட்டில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அரிய தவஞ்செய்து கொண்டிருக்கையில் ஒருநாள், அவர் தலைமேல் சில சருகுகள் விழுந்தன. அவர் கண்களை விழித்து அண்ணாந்து பார்த்தபோது, அம்மரத்து உச்சியில் ஒரு காக்கையும் கொக்கும் சண்டை யிட்டுக்கொண்டிருந்தன; உடனே அவருக்கு அதிகக் கோபம் பிறந்தது. 'இச்சருகுகளை என் தலையில் எறிந்தீர்கள் அல்லவா? ஆ! உங்களுடைய ஆண்மையை யறிகிறேன்!' என்று சொல்லி, அவர் தம் பற்களைக் கடித்துப் புருவத்தை நெரித்துக் கோபாவேசத்தோடு அவைகளை ஏற்றுநோக்கவே, யோக பலத்தால். அவர்

---

* விநோதரச மஞ்சரியிலிருந்து எடுக்கப்பட்டது.

தலையிலிருந்து நெருப்புப் பொறி எழுந்து அப்பட்சிகளைச் சாம்பராக்கிற்று.

பின்னர், அவர் காட்டைவிட்டு நாட்டிற் புகுந்து ஒரு வீட்டின் தெருக் கதவருகில் நின்றுகொண்டு, 'அம்மணீ, கொஞ்சம் அன்னந் தா' என்றார். 'குழந்தாய், கொஞ்சம் பொறு' என்று அவ்வீட்டுக்குள்ளிருந்து ஓர் ஒலி கேட்டது. உடனே இவர், 'பெண் பேதாய், என் வல்லமை இன்னதென்பதை நீ யறியாய்; நீ எப்படி என்னைக் காக்க வைக்கலாம்?' என்று தன்னுள் எண்ணினார். இவர் இவ்வாறு மனத்தில் எண்ணுகையில், உள்ளே அந்த ஒலி திரும்பவும் கிளம்பி, 'பிள்ளாய், உன்னை நீ அதிகமாக மதித்துக்கொள்ளாதே; இங்குக் காக்கையேனும் கொக்கேனும் இல்லை' என்றது. அதுகேட்டு, தவசிக்கு ஆச்சரியம் உண்டாகிப் பின்னும் சற்றுநேரம் நிற்கலானார். கடைசியில் ஒரு மாது வெளியில் வரக்கண்டு, 'அம்மா, அதை நீ எவ்விதம் அறிவாய்?' என்று கேட்டார். 'மதலாய், நீ செய்த யோகமும் அறியேன்; யாகமும் அறியேன். நான் ஓர் எளிய பெண். உடம்பு குணமில்லாமலிருக்கும் என் கணவரை உபசரித்துக்கொண்டிருந்ததால் நான் உன்னைக் காக்கும்படி செய்தேன்; என் காலமெல்லாம் எனது வேலையைச் செய்வதிலேயே கழித்து வந்தேன்; கலியாணமின்றிக் கன்னிகையாய் இருந்த காலையில் கன்னியர்க்கு உரிய என் கடமையைச் செய்தேன்; எனக்குக் கலியாணமானபிறகு மனைவியருடைய கடமையைச் செய்கிறேன். நான் பண்ணும் யோகம் இவ்வளவேயாம். இவ்வித யோகத்தினாலேயே நான் ஞானம் அடைந்தேன். இப்போது உனது மனத்திலுள்ளதையும் நீ காட்டிற் செய்ததையும் நான் நன்கறிந்து சொல்லக்கூடும். இதைவிட நீ அதிகம் அறிய விரும்பினால், அடுத்த பட்டணத்திலுள்ள கடைவீதிக்குப் போய், அங்குள்ள கசாப்புக்காரனைப் பார். நீ தெரிந்துகொள்ள வேண்டும் சில முக்கிய செய்திகளை அவன் உனக்கு உணர்த்துவான்' என்று சொன்னாள்.

தான் என்னும் அகந்தை கொண்ட அச்சந்நியாசி அதைக் கேட்டதும் வெட்கமடைந்து, 'ஆடு மாடு அறுக்கும் கசாப்புக்காரனே கடைசியில் நமக்குக் குருவானுன்!' என்று சற்றுத் தலை குனிந்து யோசித்தானெனினும், சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் செய்த நல்வினை அவ்வெண்ணத்தை மாற்றிக் கசாப்புக்காரனைக் காண வேண்டுமென்னும் ஆசையைத் தந்தது. அவ்வாசையால் அவன் அவ்வூரை அடைந்து, கடைவீதியே போய்க்கொண்டிருந்த போது, சிறிது தூரத்தில் தடித்த தேகமும், உயர்ந்த உருவமுமுள்ள ஒரு கசாப்புக்காரன் வலது கையில் ஒரு பெரிய கத்தியைப்பற்றிக்கொண்டு அநேக பிராணிகளைக் கொன்று மாமிசத்தை வருபவரிடத்தில் விற்பனை செய்வதைக் கண்ணுற்ருன். அப்போது சந்நியாசி, 'தெய்வமே, நான் ஞானத்தை யுணர்வது இக்கொலைப்பாதகனிடத்திலேயோ! நன்ருயிருக்கிறது! இவனைப் பார்த்தால் பூதமே மனிதரூபம் எடுத்து வந்ததுபோலுமிருக்கிறதே!' என்றெண்ணினுன். கசாப்புக்காரன் தலையை நிமிர்த்தி, 'சுவாமீ, அந்த அம்மையாரா உம்மை யனுப்பியது? நான் என் வேலையை முடிக்குந்தனையும் இங்கே உட்கார்ந்துகொண்டிரும்' என்ருன். பின்னர் மாமிசமனைத்தும் விற்ருனதும், கசாப்புக்காரன் விற்ற பணத்தை யெடுத்துக்கொண்டு, 'வாரும் ஐயா, வீட்டிற்குப் போகலாம்' என்று சொல்லிச் சந்நியாசியை யழைத்துச் சென்ருன். அங்கே கசாப்புக்காரன் சந்நியாசிக்கு ஓர் ஆசனம் தந்து, 'கொஞ்ச நேரம் பொறும்' என்று வெளியிலுட்காரச் சொல்லி, வீட்டில் நுழைந்து, உள்ளிருந்த தன் தாய் தந்தையரைத் தூக்கிவந்து உட்காரவைத்து நீராட்டி, அன்னம் படைத்து மற்றும் வேண்டிய பணிவிடைகளைச் செய்து, திரும்பி வந்து சாமியார் எதிரில் உட்கார்ந்து, 'ஐயா, தாங்கள் என்னைப் பார்க்க வந்தீர்கள் போலும்! தங்களுக்கு என்னுல் ஆகவேண்டும் உதவி யாது?' என்று கேட்டான். சந்நியாசி, ஆத்துமத்தைப் பற்றியும், கடவுளைப்பற்றியும் சில கேள்விகள் கேட்டார்.

அவற்றிற்குக் கசாப்புக்காரன் கூறிய விடைகள் பெரிய புத்தகமாகி வியாச கீதை என்று பெயர்பெற்று யாவராலும் மதிக்கப்பட்டு வருகின்றன. வேதாந்தத்தின் இரகசியங்களெல்லாம் அதில் விளக்கப்பட்டிருக்கின்றன.

கசாப்புக்காரன் தன் பிரசங்கத்தை முடித்ததும் சந்நியாசிக்கு உண்டாகிய ஆனந்தத்தின் அளவை நம்மாற் சொல்ல முடியாது. அவர், 'இவ்வளவு ஞானத்தோடு கசாப்புக்காரனெனப் பெயர் பூண்டு ஈனமான வேலை புரிய வேண்டுவதென்ன?' என்று கேட்க, அவன், 'மகனே, நாம் செய்யும் எந்த வேலையும் அவலக்ஷணமும், அசுத்தமும் ஆனதன்று. நான் குலத்தில் கசாப்புக்காரனாகப் பிறந்தேன்; நான் இளம்பருவத்தில் கசாப்புத் தொழிலிற் பழகினேன். உலகத்தவரைப்போல நான் ஆசை வையாமல் என் அலுவலைச் செவ்வனே செய்ய முயலுகிறேன். இல்லறத்தானுக்கு விதித்துள்ளபடி நான் என் கடமையை நடத்தி, என் பெற்றோர்களை மகிழ்விக்க என்னாலியன்ற மட்டும் முயலுகிறேன். நான் உன்னுடைய யோகவித்தையைக் கற்றிலேன்; நாட்டை நீங்கிக் காட்டிலும் புகுந்திலேன். ஆயினும் நான் அறிந்தது, ஆசையை அறவே வெறுத்து, என் தொழிலைப் பழுதுவராமல் செய்து வருவதனால் உண்டாகியதாம்' என்றான்.

## 3. தலைமைப் பேருரை*

[நாவலர் பண்டித திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்]

தமிழின்பால் உள்ள அன்பு மிகுதியால் இங்குக் கூடியிருக்கும் உடன்பிறப்பாளர்களே! உங்களால் இக்கூட்டத்திற்குத் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற யான்

* இது 1936-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 21, 23-ஆம் நாட்களில் குழித்தலை—கம்பர் செந்தமிழ்ச் சங்கத்தின் 11-ஆம் ஆண்டு விழாவின்போது நாட்டார் அவர்கள் தலைமை தாங்கிப் பேசிய தலைமைப் பேருரை.

வழக்கம்போல் முன்னுரையாகச் சில பேசவேண்டும் என்றும், பேசுவேன் என்றும் நீங்கள் விரும்புவதும் எதிர்பார்ப்பதும் இயல்பே. இச்சங்கத்தின் பெயரையே பற்றுக்கோடாகக் கொண்டு, எனக்குத் தோன்றும் கருத்துக்கள் சிலவற்றை இப்பொழுது வெளியிட விரும்புகின்றேன்.

## தமிழின் பெருமை

இக்கழகம் 'கம்பர் செந்தமிழ்ச் சங்கம்' எனப் பெயரிடப் பெற்று வழங்கி வருகிறது. செந்தமிழ் என்பது யாது? ஆன்றோர் பலரும் நம் தமிழ்மொழியின் பெயர் கூறும்பொழுது செந்தமிழ், பைந்தமிழ், இன்றமிழ், மென்றமிழ், வண்டமிழ், ஒண்டமிழ் என்று இங்ஙனம் சிறந்த அடைமொழிகளோடு சேர்த்துரைப்பது வழக்கமாக உள்ளது. அவ்வடைமொழிகள் எல்லாம் தமிழின் சிற்சில சிறப்பியல்புகளைக் குறிப்பனவாகவுள்ளன. 'செந் தமிழ்' என்பது 'திருந்திய தமிழ்' என்னும் பொருளுடையதாகும். தமிழ் மொழியானது நெடுங்காலத்திற்கு முன்பே திருத்தமான நிலையை அடைந்துளது. திருத்தமாவது, இலக்கண வரையறை செய்யப்பெற்றுப் பெரும்பாலும் அவ்விதிகளுக்கு இணங்கி நடைபெற்று வருவது. மொழியானது ஆதியில் வழக்கும் செய்யுளுமாக வளர்ச்சியுற்று வரும்பொழுது அவற்றின் சொற்கள் இடந்தோறும் நாள்தோறும் வடிவு திரிந்தும் பொருள் வேறுபட்டும் செல்வது இயல்பு; ஆதலின் அவற்றை அங்ஙனமே விட்டுவிடின் எண்ணிறந்த மாறுதல்கட்கு உட்பட்டு முன்பின் தொடர்பு இன்றி ஒழியும். இதனைக் கருதி அக்காலத்து நன்மக்களின் வழக்கினையும் செய்யுளினையும் நன்கு ஆராய்ந்து பேரறிஞர்கள் இலக்கணம் வகுத்தனர். தென் இந்திய மொழிகளில் தமிழ் ஒன்றே நெடுங் காலமாக இலக்கண வரம்புடையது. அதனாற்றான் அது எப்பொழுதும் உருச் சிதையாது வழங்கி வருகின்றது.

இலக்கியம்

தமிழ் மொழியிலே பண்டை இலக்கியங்களாக விளங்குவன கடைச் சங்கப் புலவர்கள் இயற்றிய (1) எட்டுத்தொகை,* (2) பத்துப் பாட்டு† முதலியன. அவை இற்றைக்கு ஏறக் குறைய ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்டவை. தொல்காப்பியம் என்னும் தமிழ் இலக்கணம் அவற்றிற்குப் பலநூறு ஆண்டுகட்கு முற்பட்டது. அந்நூல் வழக்கும் செய்யுளும் ஆராய்ந்து முந்துநூல் கண்டு இயற்றப் பெற்றது என்பது கூறப்படுகிறது. தொல்காப்பியர் தமக்கு முன்னர் இலக்கண ஆசிரியர் பலர் இருந்தனர் என்பதைத் தமது நூலிற் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார். இவற்றை நோக்க, பழந் தமிழ் செந்தமிழாகத் திருத்தமுற்றதும் எத்தனையோ பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு என்பது பெறப்படும்.

கம்பர் பெருமை

இனி, இச்சங்கத்தின் பெயரோடு தொடர்புற்றுள்ள கம்பர் என்னும் புலவர் பெருமானைப்பற்றிக் காண்போம்: அவர் பெயர் அறியாதார் நாட்டில் இலர். 'கல்வியிற் பெரியர்' என்றும், 'கவிச் சக்கரவர்த்தி' என்றும் யாவரும் அவரைப் பாராட்டுவர். அவரது கவிபாடும் ஆற்றலைக் குறித்துக் 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என ஒரு பழமொழியும் வழங்கி வருகின்றது. அவரது இத்

---

* எட்டுத்தொகை - தொகுக்கப்பட்ட எட்டு நூல்கள். அவை (1) நற்றிணை, (2) குறுந் தொகை, (3) ஐங்குறு நூறு, (4) பதிற்றுப் பத்து, (5) பரிபாடல், (6) கலித்தொகை, (7) அக நானூறு, (8) புற நானூறு என்பன.

† பத்துப்பாட்டு – பத்துப் பாக்களைக் கொண்ட நூல். அவை (1) திருமுருகாற்றுப்படை, (2) பொருநர் ஆற்றுப்படை, (3) சிறு பாண் ஆற்றுப்படை, (4) பெரும்பாண் ஆற்றுப்படை, (5) முல்லைப் பாட்டு, (6) மதுரைக் காஞ்சி, (7) நெடுநல் வாடை, (8) குறிஞ்சிப் பாட்டு, (9) பட்டினப் பாலை, (10) மலைபடு கடாம்.

தகைய பெருமைக்குக் காரணம், அவர் இயற்றிய இராமாயணம் என்னும் ஒப்பற்ற பெருங் காவியமே ஆகும்.

### கம்பர் தமிழ்ப் பற்று

கம்பர் தம் தாய்மொழியாகிய தமிழில் பெரும் பற்றுக் கொண்டவர் என்பதை அவர் பாடிய இராமாயணச் செய்யுட்களால் அறியலாம்.

அகத்தியர் தமிழை வளர்த்தவர் என்ற கதையை மனத்திற்கொண்டு அவர் அம்முனிவரைக் குறிக்கும் இடங்களில், "தழற்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான்" என்றும், "நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்" என்றும், "என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்" என்றும் கூறுகின்றார். அவர் "செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்றமிழ்" என்று தமிழின் இனிமையையும் திருந்திய தன்மையையும் பாராட்டுகின்றார்; கோதாவரியாற்றையும் பம்பைப் பொய்கையையும் வருணிக்கும் இடங்களில் செந்தமிழ்ச் சான்றோர் இயற்றிய கவிதைகளை உவமையாகக் கூறுகின்றார்; சீதாபிராட்டியையும் "செஞ்சொற் கவியின்பம்" என்று கூறி மகிழ்கின்றார். இவற்றிலிருந்து தமிழின் சுவையும் சான்றோர் கவியும் அவர் உள்ளத்தை எவ்வளவு கொள்ளைகொண்டு விட்டன என்பது புலனாகின்றது.

தமிழ் நாட்டினிடத்தும் கம்பர்க்குள்ள பற்று மிகுதியாகும். அவர் கோசல நாட்டைக் கூறும்பொழுது, "காவிரி நாடன்ன கழனி நாடு" என்றும், கங்கை யாற்றைக் கூறும்பொழுது "தெய்வப் பொன்னியே பொருவுங் கங்கை" என்றும் கூறியுள்ளவை அவரது நாட்டின் பற்றை நன்கு விளக்குகின்றன அல்லவா?

உலகிற் பல மொழிகளிலும் உள்ள காவியங்களைக் கற்றுணர்ந்த அறிஞர் சிலர் பிறவற்றைவிடக் கம்பராமாயணமே சுவையில் விஞ்சியுள்ளது எனப் புகன்றுள்ளனர்.

இதனால், கம்பர் தமது காவியத்தால் தமிழுக்குப் பெருமை தந்துளர் என்பது பொருந்தும் அல்லவா? ஒன்பது வகைச் சுவையும்* ஒருங்கு பெய்து வைத்த பாத்திரம் போன்ற கம்பராமாயணத்தைக் கற்றுக் கவிச் சுவையை நுகர்ந்து இன்புறுதலும், அதில் வந்துள்ள நன்மக்களின் பண்புகளை அறிந்து பயன் எய்துதலும் யாவர்க்கும் கடனாகும்.

சங்கங்கள்

அன்பர்களே! இதுவரை, செந்தமிழ் இன்னது என்பதையும், கம்பருக்கும் தமிழுக்கும் உள்ள இயல்பினையும், கம்பரது பெருமையையும் ஒருவாறு கூறினேன். இனிச் 'சங்கம்' என்பது குறித்துச் சில செய்திகள் சொல்ல விரும்புகிறேன். பண்டை நாட்களில் சமயத்தைப் பரப்புதற்கும் மொழியை வளர்ப்பதற்கும் சங்கங்கள் இருந்தன. தமிழை வளர்ப்பதற் கென்று முன்பு மூன்று சங்கங்கள் நடைபெற்றன. அதனாலேயே நம் தமிழானது 'சங்கத்தமிழ்' என்றும் வழங்குகிறது. தமிழ்மொழி பழைய நாட்களில் தான் மிகவும் உயரிய நிலையில் இருந்தது. பின்பு காலத்துக்குக் காலம் அதன் பொலிவு சிறிதே குறைந்து வந்தது. பாட்டுக்களின் உண்மைத் தன்மை குறைந்து எல்லாவற்றையும் மிகைப்படுத்திக் கூறுதல் என்ற பொய்ம்மை மிகுந்தது. நம் தமிழ் வளம்பெற வேண்டுமாயின், சங்க காலப் புலவரது உண்மையுரைக்கும் நெறியைக் கடைப்பிடிக்கவேண்டும். அதற்குப் பழைய இலக்கிய-இலக்கண ஆராய்ச்சி தேவையாகும். சில ஆண்டுகளாக 'வித்துவான்' தேர்வு, 'பண்டிதர்' தேர்வு இவை குறித்துத் தொல்காப்பியப் பயிற்சியும் சங்க இலக்கியங்களின் பயிற்சியும் ஏற்பட்டு வருதல் மகிழ்ச்சிக்கு உரியது. எனினும் ஊர் தோறும் சங்கங்கள் நிறுவி, தமிழை வளர்த்தற்கு யாவரும்

* ஒன்பது வகைச்சுவை – நவரஸம். அவை – சிருங்காரம், ஆசியம், கருணை, கோபம், வீரம், பயம், அருவருப்பு, அற்புதம், சாந்தம் என்பன.

முயலுதல் வேண்டும். நம் முன்னோர்களைப் பற்றியும் மொழியைப்பற்றியும் பெருமிதமான உணர்ச்சி உண்டாகு மாறு பேசுவதும் எழுதுவதுமே தமிழர் செய்கையாதல் வேண்டும்.

## 4. நப்பசலையார்

[வித்துவான் திரு. க. நயினர் முகம்மது அவர்கள்]

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னல் உறை யூரைத் தலைநகராகக் கொண்டு, சோழ நாட்டைக் கிள்ளி வளவன் என்ற சோழ வேந்தன் ஆண்டு வந்தான். அவன் சிறந்த போர்வீரன்; போரிற் சிறப்புற்றாற்போலவே கொடையிலும் சிறந்த வீரனாய் இருந்தான். அவன் தமிழ் மொழியைத் தன் உயிர்போலக் கருதியவன்; அதனல், தமிழ்ப்புலவர்களைப் பேரன்புடன் வரவேற்று உபசரித்து, அவர் விரும்பியவற்றை விரும்பியவாறு வழங்கி மகிழும் வள்ளலாய் விளங்கினன். அவனது அரண்மனையைப் புலவரும் பாணரும் கூத்தரும் தமது தாயகமாகக் கருதினர் என்னல் தவறாகாது. இங்ஙனம் கொடை வள்ளலாய் இருந்த கிள்ளிவளவன், புலவர் பலரால் பாராட்டப் பட்டான்.

புலவரால் ஏத்தெடுக்கப்பெற்ற கிள்ளிவளவனது பெரும்புகழ் பாண்டிநாட்டிற் பரவியது. அதுகேட்ட நப்பசலையார் என்னும் பெண்பாற்புலவர், சோழர் பெரு மானைக் காண அவாக்கொண்டார்; கொண்டு பாண்டி நாட்டைவிட்டு உறையூருக்குப் பிரயாணமானர்.

கிள்ளிவளவன் கருவூரை முற்றுகையிட்டுச் சேரனைத் தோற்கடித்துப் பெருமிதத்துடன் வாகைசூடி, உறையூரில் வெற்றிவிழாக் கொண்டாடிக்கொண்டிருந்தான். அவ்வமயம் நப்பசலையார் உறையூரை அடைந்தார். "பெண்பாற் புலவர் ஒருவர் நமது அரண்மனை வாயிலில் வந்துளர்; அவர் பாண்டிநாட்டிலிருந்து வந்திருக்கிறார்," என்று காவலர்

கூறினர். வளவன் உடனே தன் ஆசனத்திலிருந்து எழுந்து, "அவரை உடனே வரவிடுங்கள்," என்றான். அரசன் மனநிலை உணர்ந்த மதியுள்ள காவலர் ஓடிச்சென்று அம்மையாரைப் பணிந்து, உள்ளே செல்லவிட்டனர். முழு நிலாப் போன்ற முகமும், செவ்வரி படர்ந்த கண்களும், முத்துக் கோத்து வைத்தாற்போன்ற வெண்மையான பல் வரிசையும் உடைய மெல்லியலார் ஒருவர் உள்ளே வருவதைக் கண்ட வளவன் எழுந்து, "அம்மையாரே, வருக! வருக! நுமது வரவு நல்வரவாகுக! நீர் பாண்டிநாட்டிலிருந்து இங்கு எழுந்தருளியது என் முன்னோர் செய்த தவப்பயனாகும்!" என்று கூறி உபசரித்தான். அம்மையார் அவன் காட்டிய ஆசனத்தில் அமர்ந்தார்.

அரசன் அம்மையாரை நோக்கி, "பாண்டி நாட்டு அரசனான பெருமான் சுகமாய் இருக்கின்றானா? அவனது அரசியல் எங்ஙனம் இருக்கின்றது? நீர் எப்பதியினீர்" என்று ஆவலோடு கேட்டான். அம்மையார் தமது மதி நுட்பம் என்னும் அளவு கருவியால் அவனது உள்ளப் பாங்கினை அளந்து அகமகிழ்ந்து, "சோழர் பெருமானே, எம் பாண்டியர்கோன் சுகமாய் இருக்கின்றான். அவன் அரசு செங்கோல் அரசு. அவன் நின்னைப்போல மறம் கடிந்து அறம் வளர்க்கும் அண்ணல். அவனது பெருநாட்டில் கொற்கையைச் சூழ்ந்த நாடு 'மாறோக்கம்' எனப் பெயர் பெறும். நான் அந்த நாட்டினேன்; இளமையில் நல்லாசிரியரை அடுத்துக் கல்வி பயின்றேன்; கவிபாடும் ஆற்றல் உடையேன். நினது பரந்த புகழ் எமது பாண்டிநாடு முழுவதும் பரந்திருக்கிறது. நீ நமது தாய் மொழியை உயிர் போலக் கருதுபவன் என்றும், தமிழ்ப்புலவரைப் பெரிதும் ஆதரிப்பவன் என்றும் வல்லார் சொல்லக் கேட்டேன்; அதனால் நினது வளநாடு நோக்கி வந்தேன். நினது பெறற்கரிய நட்பொன்றே எனக்குப் போதுமானது. நல்லார் இணக்கமே துறக்கத்திலும் சிறந்தது என்பது என் கருத்து," என்று அழகாகப் பேசினர்.

பாண்டிநாட்டிலிருந்து பெண்பாற்புலவர் ஒருவர் வந்து வளவர்பெருமானிடம் உரையாடிக்கொண்டிருக்கிறார் என்ற செய்தி அந்தப்புரத்திற்கு எட்டியது. உடனே கோப்பெருந்தேவி, தன் சேடியர் சூழ, அரசனும் அம்மையாரும் பேசிக் கொண்டிருந்த இடத்தை அடைந்தனள். அவள் முக மலர்ச்சியுடன் வருவதைக் கண்ட வளவன் எழுந்து, "அம்மையீர், இவள் என் கோப்பெருந்தேவி. இனி உம்மைக் கவனித்துக்கொள்ள இவள் வந்துவிட்டாள். நீவிர் அந்தப்புரம் சென்று வசதியாக இருக்கலாம்." என்றான்.

கோப்பெருந்தேவி அம்மையாரை அழைத்துச் சென்றாள்; அவரை நீராடச் செய்து, பட்டாடைகள் அணிவித்தாள்; அறுசுவை உண்டி அகமகிழ ஊட்டினள்; பசும் பொன்னால் இயன்ற அணிகள் பலவற்றை அம்மையார்க்கு வழங்கினள். கோப்பெருந்தேவியின் அளவிறந்த அன்பைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் விட்ட அம்மையார், "கோப்பெருந்தேவி, நின்போன்ற கற்பரசியர் காணக் கிடைத்தல் அருமை அருமை! நீ கொண்கன் நினைப்பறிந்து ஒழுகும் நீர்மை உடையை; வளவனுக்கேற்ற வாழ்வரசியாய் விளங்குகின்றாய். கணவனுக்கு இசைந்த காரிகையாகிய நீ வாழ்வாயாக!" என்று மனமார வாழ்த்தி, அவளுடன் அளவளாவிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் மாலைநேரத்தில் வளவன் தன் கோப்பெருந்தேவியுடன் அரண்மனைப் பூந்தோட்டத்தில் இடப்பட்ட ஆசனத்தில் அமர்ந்திருந்தனன். அவர்கட்கு எதிரில் மாசற்ற மலர்முகத்துடன் கலைமகளே உருவெடுத்தாற் போன்ற நப்பசலையார் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அரசனும் அரசமாதேவியும் ஒருங்கிருக்கும் அச்சமயமே அவர்களைப் பாராட்டத்தக்க சமயமாகும் என்பதை எண்ணிய அம்மையார், அரசர்பெருமானைப் பார்த்து, "சிறந்த வேற்படையை உடையவனே, பண்பட்ட படை வீரரை உடைய பெருமானே, நினது கருவூர் வெற்றியைப் பற்றிக்

கேள்விப்பட்டேன். 'கருவூர்க் கோட்டை மிக்க காவலை உடையது; கோட்டையைச் சூழ ஆழமான அகழி உண்டு. அந்த அகழியில் பல பெரிய முதலைகள் வாழ்கின்றன. கோட்டை மதிற்சுவர் பருமையும் வன்மையும் உடையது; பகைவரால் ஏற முடியாதது,' என்று பலர் சொல்லக் கேட்டதுண்டு. அத்தகைய தாண்டற்கு அரிய அகழியைத் தாண்டி, ஏறற்கரிய மதிலை ஏறிக் குதித்து, கோட்டைக்குள் இருந்த சேர வீரரைப் புறங்காணச்செய்து வாகை மாலை சூடிய வளவர் பெருமானது வீரத்தை யான் என்சொல்லிப் புகழ்வேன்! நீ புகழ் படைத்த செம்பியர் மரபில் வந்தாய். ஓர் அஃறிணைப் பொருளான புறவினது வருத்தத்தைக் களைவதற்காக யானைத் தந்தத்தாற் செய்யப்பட்ட தராசில் தன்னை நிறுத்த செம்பியன் பெருமையை அறியாதார் உளரோ? அத்தகைய அருளாளன் மரபில் வந்த நீ, எம் போன்ற இரவலர்க்கு ஈதல் இயல்பே அன்றிப் புகழன்று. அசுரர்க்குப் பிறவிப் பகைவராகிய தேவர் நெருங்குவதற்கும் அஞ்சிய, மிக்க வலியுடைய, ஆகாயக் கோட்டைகளை அழித்த நின் முன்னோன் ஒருவனது பேராண்மையை நினைக்க, நீ பகைவரை வென்றடக்குதல் பாராட்டுக்குரிய செயலாகாது. நினது உறையூரில் உள்ள அறங்கூறு அவையம், நியாயம் ஒன்றையே நெடுங்காலமாக வழங்கி வழங்கித் தமிழ்நாடெங்கும் பெயர்பெற்ற அறமன்றமாய் விளக்கம் உற்றிருப்பதால், நீ அறத்தில் சிறந்தவன் என்று கூறலும் புகழாகாது. ஆதலின், கணையமரத்தோடு மாறுபடும் தசைசெறிந்த தோளை உடையாய்! கண்ணிற்குக் குளிர்ச்சியைத் தருகின்ற ஆத்திமாலையை அணிந்த அண்ணலே! வானளாவிய இமயமலையில் விற்பொறி பதித்த சேரனது சிறப்பு அழிய அவனது கருவூரை வென்ற நினது திறத்தை யான் என் சொல்லிப் பாடுவேன்!'' என்னும் பொருள்கொண்ட பைந்தமிழ்ப் பாடல் ஒன்றினைப் பாடினர்.

இதனால், அம்மையார் சோழ அரசரின் கொடைச் சிறப்பும், வெற்றிச் சிறப்பும், அறங்காக்கும் சிறப்பும்

விளக்கி, வளவனது கருவூர் வெற்றியையும் வாயாரப் புகழ்ந்து பாராட்டினர். இப்பாடலைக் கேட்ட அரசனும் அரசியும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். இங்ஙனம் அம்மையார் அமயம் வாய்க்கும்பொழுதெல்லாம் வளவனைப் பொருள் வளமுடைய பாக்களால் பாராட்டி மகிழ்ந்திருந்தார்.

நப்பசலையார் கிள்ளிவளவனைத் தம் இனிய பாக்களால் மகிழ்வித்து வருகையில், ஒருநாள் அவன் நோய் வாய்ப்பட்டுப் படுத்தான். அங்ஙனம் படுத்தவன் மீண்டும் எழுந்திருக்கவே இல்லை. வரவர நோய் மிகுதிப்பட்டது. மருத்துவப் புலவர் பலர் வந்து பார்த்தும் பயனில்லை. ஒரு நாட்காலை வளவர்பெருமகன் விண்ணக வாழ்வை மருவினன். உடனே அவன் மனைவியர் தீக்குளித்தனர். இத்துயரச் செய்தியைக் கேட்டுப் புலவர் பலர் சோழன் அரண்மனைக்கு வந்தனர். அப்பொழுது பெருந்துயருற்ற அம்மையார், "எங்கள் வளவர் கோமான் பொன்னால் இயன்ற மாலையை அணிந்தவன்; மண்டிய போரில் எதிர் நின்று வெல்லும் படையினையும் உறுதியான வேலினையும் உடையவன். அப்பெருமகனைக் கூற்றுக் கவர்ந்துகொண்டது. அஃது எங்ஙனம் அவனைக் கொண்டிருத்தல் வேண்டும்? அது வெளிப்பட நின்று வெகுண்டு அவனைக் கொண்டிருத்தல் இயலாது. அவனது மெய்யைத் தீண்டி வருத்திக் கொண்டிருத்தலும் இயலாது; இவற்றுள் எதனைச் செய்திருப்பினும், அக்கூற்றம் தப்பிப் போதல் அரிது; எம் வள்ளலும் இறந்திரான். அறிவுடைய அக்கூற்றம் பாடுவாரைப்போலத் தோன்றிநின்று, கையால் தொழுது வாழ்த்தி இரந்து, அவனது ஆருயிரைக் கொண்டிருத்தல் வேண்டும்," என்று பாடிப் புலம்பினர். பின்னர் அவர் உறையூரை விட்டுச் செல்வாராயினர்.

## 5. மதுரை ஆயிரக்கால் மண்டபம்

[திரு. கா. அப்பாத்துரை அவர்கள், M. A., L. T.]

தமிழ்நாட்டை ஆட்சிசெய்த அரசர்பெருமக்களால் கட்டப்பட்ட பெருங்கோவில்கள் எல்லாவற்றிலும் பல மண்டபங்கள் அமைந்துள்ளன. அம்மண்டபங்களில் திருவிழாக் காலங்களில் மக்கட்கு அறிவுதரும் புராணக் கதைகள் படிக்கப்பட்டன; அங்கு இசையும் நடனமும் வளர்க்கப்பட்டன; அத்தகைய காலங்களில் ஆன்ம அமைதியைத் தரும் இனிய பாடல்கள் பாடப்பட்டன; விறல்பட நடனமும் ஆடப்பட்டது. இராஜராஜன் போன்ற சிறந்த பேரரசர்களின் வரலாறுகள் நாடகங்களாக எழுதி நடிக்கப்பட்டன. திருவிழாக் காலத்தில் மட்டுமன்றி, மற்ற எல்லா நாட்களிலும் அங்கு எளிய மாணவர்க்கு உணவும் அறிவும் கொடுக்கப்பட்டன. இவையேயன்றி அரசர்கள் விசேட காலங்களில் அறிஞருடன் கூடிப் பேசுவதற்கும் மண்டபங்கள் பயன்பட்டன. இங்ஙனம் அரசர்கள் பயன்படுத்திய பெரிய மண்டபங்களே இன்றும் தில்லை முதலிய இடங்களில் 'ராஜ சபை' என்னும் பெயருடன் விளங்குகின்றன.

மதுரையை ஆண்ட மன்னர்களுக்குப் பயன்பட்ட மண்டபம் ஒன்று மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் இருக்கிறது. இதனைக் கட்டிய பெருமை தளவாய் அரியநாத முதலியார்க்கே உரியது. இம்மண்டபத்தில் ஆயிரம் தூண்கள் இருக்கின்ற காரணம்பற்றி இம்மண்டபம் 'ஆயிரக்கால் மண்டபம்' என்னும் பெயர் பெற்றது. இம்மண்டபம் கீழ்வாயிலுக்கு அண்மையில் இருக்கிறது.

இம்மண்டபம் இரண்டு யானைகளால் இழுக்கப்படும் ஒரு தேர்போன்ற அமைப்பில் அமைந்துள்ளது. மண்டபத்தில் உள்ள தூண்கள் வரிசைவரிசையாகவும், எங்கிருந்து பார்ப்பினும் ஒரே வரிசையாகவும் காட்சியளிக்கின்றன. ஒருவன் இம்மண்டபத்தில் எந்த இடத்தில் நின்று

லும், மண்டபத்தின் நடுவில் அமைந்திருக்கும் கூத்தப் பிரான் திருவுருவத்தினைக் கண்டு களிக்க முடியும்.

ஆயிரக்கால் மண்டபத்திற்குள் நுழையும் வாயிலில் ஏறக்குறைய ஆறு சிலைகள் காட்சி தருகின்றன. அவற்றுள் ஒவ்வொன்றும் உயிருடன் இருப்பதுபோலவே காணப்படுகின்றது. அவற்றுள் தலைசிறந்தன அரியநாத முதலியார் சிலையும், அரிச்சந்திரன் சிலையுமாம். அரியநாதரின் சிலை அமைப்பைக் காணும்போது, 'இவ்வுருவத்தை அமைப்பதற்கென்றே இதனைச் செய்த சிற்பி பிறந்தானே!' என்னும் எண்ணம் உண்டாகிறது; குதிரையின் மேல் அமர்ந்திருக்கும் தளவாயின் தோற்றம், அவருடைய அஞ்சா நெஞ்சம், உழைப்பு, எடுத்த காரியத்தைச் செவ்வனே செய்வதில் உள்ள ஆர்வம், முகப் பொலிவு இவற்றை நமக்கு உணர்த்துகிறது. அரியநாத முதலியார் ஏறி நடத்தும் குதிரை, நாற்காற் பாய்ச்சலில் ஓடுவதுபோலக் காணப்படுகிறது. முதலியார் அதன் கடிவாளத்தை மிகவும் உறுதியாக இழுத்துப் பிடித்துள்ளார். எனினும், அக்குதிரை அதனைப் பொருட்படுத்தாது போவதுபோலக் காணப்படுகிறது.

நாம் அரியநாதர் சிலைக்கு அண்மையில் கண்ணப்பர் வரலாற்றைச் சிற்பங்களின் மூலமாகக் காணலாம். அங்குள்ள சிற்பங்களைக்கொண்டே கண்ணப்பர் வரலாறு முழுவதும் உணரத்தக்க முறையில் அவற்றைச் சிற்பி அமைத்துள்ளான்.

வாயிலின் மறுபக்கத்தில் அரிச்சந்திரன் உருவச்சிலை காணப்படுகிறது. அதன் பக்கத்தில் இறந்த தன் மைந்தனைத் தன்னுடைய இரு கைகளிலும் ஏந்திய வண்ணம் சந்திரமதியின் சிலை தோன்றுகின்றது. அவ்விடத்தில் அரிச்சந்திரன், சந்திரமதி ஆகியவர் முகத்தில்மட்டும் உணர்ச்சியை வெளிப்படுத்தாது, அவர்களின் நிலைக்கேற்ப உடை, அணி முதலியவற்றைக் கற்பனை செய்துள்ளமை, சிற்பியின்

உயர்ந்த கலைப்பண்பைக் காட்டுவதாகும். அவர்கள் உருவத்தில், அவர்கள் தங்கள் கொள்கையை நிலைநாட்ட அடைந்த துன்பமும், அக்காலத்திலும் அவர்கள் கொண்டுள்ள அமைதியும் இலங்குகின்றன.

முன் சொல்லப்பட்ட சிலைகளுக்குப் பக்கத்தில் இரு தூண்களில் குறவன் குறத்தி இவர்தம் சிலைகள் காணப்படுகின்றன. குறவன் உடல் கட்டமைப்பு வாய்ந்தது. அவன் மார்பு அகன்று காணப்படுகிறது; உடல் தடித்து வளமுடையதாகத் தோற்றுகிறது; பார்வை சற்றுக் கடுமையாகத் தோற்றுகிறது. அவ்வுருவம் அங்குச் செல்வார் அனைவர் உள்ளத்தையும் தன்வயப்படுத்துந் தன்மை வாய்ந்ததாகவே விளங்குகிறது. அவன் உடலமைப்பும் முகத்தோற்றமும், 'இவன் நன்றாக உழைத்து வாழ்பவன்,' என்னும் கருத்தை எழச் செய்கின்றன. அவன் அணிந்துள்ள அணிகளோ அளவற்றவை.

இனி, குறத்தியின் சிற்பத்தைக் காண்போம்: சிற்பி இக்குறத்தியை நான்கு பிள்ளைகளுடன் தோற்றுவித்துள்ளான். ஒரு குழந்தை குறத்தியின் முதுகின்மீது இருக்கிறது; மற்றொன்று கூடைக்குள் காணப்படுகிறது; மூன்றாம் குழந்தை அவள் மார்பில் துணியால் கட்டப்பட்டுத் தொங்கிக்கொண்டிருக்கிறது; ஒரு குழந்தை அவள் கையைப் பற்றிக்கொண்டு நிற்கிறது. குழந்தை இருக்கும் கூடையைச் சிற்பி எவ்வளவு அழகுறச் செய்துள்ளான் என்பதை நேரிற் காண்பவரே அறிந்துகொள்ள வல்லவர் ஆவர்.

பூதவுருவம் ஒன்று குறவன் குறத்தி உருவங்களுக்குப் பக்கத்தில் காணப்படுகிறது. பரமசிவன் பாதத்தில் விழுந்துகிடக்கும் பூதத்தின் முகத்தோற்றம், தனக்கு யாதொரு கதியும் இல்லை என்பதை உணர்த்துகிறது. அதனை மிதித்துள்ள சிவன் முகத்தில் அமைதியும் புன்னகையும் காணப்படுகின்றன.

நாம் மேலே கண்ட சிற்பங்கள் பலவும் மண்டபத்தின் வாயிலில் உள்ளவை. அங்கு மேலே கூறப்பட்ட சிற்பங்களேயன்றி, மேலும் பலவகைப்பட்ட சிற்பங்களும் உள்ளன. அம்மண்டபத்தின் சிறப்பை—அம்மண்டபத்தைத் தோற்றுவித்த அரியநாதரின் சிறப்பை — அவர் காலத்துச் சிற்பக்கலை வளர்ச்சியின் மேன்மையை உணர்த்தச் சிலவற்றைக் கூறினேம். இனி, மண்டபத்தின் உட்புறத்தில் உள்ள சிறந்த சிற்பங்கள் சிலவற்றைக் காண்போம்:

மண்டபத்தின் உள்ளே நுழைந்ததும், நம் கண்ணுக்குப் புலப்படும் சிற்பங்களுள் நம் கருத்தை ஈர்ப்பது கலைமகள் சிற்பமேயாகும். இவ்வுருவமும் சாதாரண மனித அளவுக்கு ஏற்பச் செய்யப்பட்டிருக்கிறது. கலைமகளின் மெல்லிய இடுப்பும், பிற அங்க அமைப்பும், வீணை வாசிப்பதில் திறமை வாய்ந்த மெல்லிய விரல்களை உடைய கைகளும் கண்கவர் வனப்புடையன. வீணையும் அவள் கைகளில் நன்ருய் அமைந்துள்ளது. வீணையிலுள்ள நரம்புகளும் தெளிவுறக் காட்டப்பட்டுள்ளன. கலைமகள் முகத்தில் அமைதியுடன் கூடிய இன்பம் தாண்டவமாடுகிறது. இந்த ஆயிரக்கால் மண்டபத்தில் உள்ள உருவங்களுள் இஃது ஒன்றே மிகவும் உயர்வுடையதாகும்.

பாலமுருகரின் உருவம் மயில்வாகனத்தின்மீது அமைந்துள்ளது. முருகர் தேவர்களின் படைத் தலைவராதலின், அத்தகுதிக்குத் தகுந்த நிலைமை இங்கே தரப்பட்டுள்ளது. இவர் முகத்தில் இளமையின் அழகு விளங்குகின்றது. இவர் அமர்ந்துள்ள மயிலின் சுறுசுறுப்பு அதன் மெல்லிய கால்களிலும் உடலிலும் காட்டப்பட்டிருக்கிறது.

நாம் மேலும் உட்செல்வோமாயின், இரு பக்கமும் சிலைகளால் அழகு செய்யப்பட்ட தூண்களுக்கிடையே உள்ள சில சிறந்த சிற்பங்களைக் காணலாம்.

நாம் பிற தென்னிந்தியக் கோவில்களில் இரதி தேவியின் உருவத்தைக் காண இயலாது. ஆனால், இங்கே அமைந்துள்ள இரதி தேவியின் உருவம், புதுமை உடையதாகவும், வியக்கத் தக்கதாகவும், ஒப்பற்றதாகவும் காட்சி தருகிறது. இரதி தேவி அமர்ந்துள்ள அன்னப்பறவை நடப்பதுபோலவே அமைக்கப்பட்டுள்ளது. இந்த இரதி தேவியின் உறுப்பு ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள அழகு நமக்கு வியப்பையும் இன்பத்தையும் தருவதாகும்.

மண்டபத்தில் நுழையும் ஒருவர் தமக்கு இடப் பக்கமாக உள்ள தூண் வரிசையில் காணத்தக்கது ஒன்று உண்டு. அதுவே யாளியின் உருவம். யாளியின் வாயில் ஓர் உருண்டைக் கல் இருக்கிறது. நாம் அதை வெளியே எடுக்க முடியாது. ஏனெனில், கல்லுருண்டை யாளியின் வாய்த் துவாரத்தினும் பெரிது. இங்ஙனம் சிறிய வாயில் பெரிய கற்குண்டைச் செய்தமைத்த சிற்பியின் திறமையை என்னென்பது! இந்த யாளியைப் போலவே கிளிக் கூண்டு மண்டபத்தில் விநாயகருக்கு வலப்பக்கத்தில் மற்றொரு யாளியும் இருக்கிறது.

மண்டபத்தில் உள்ள சிற்பங்களின் சிறப்பை உணர்த்தவே, மேற் சொன்ன சிற்பங்கள் விளக்கப்பட்டன. மண்டபத்தில் இன்னும் எண்ணிறந்த சிற்பங்கள் உள்ளன. அவற்றை எல்லாம் இவண் விரித்துரைத்தல் இயலாது. எனினும், நாம் மேலே கண்டவற்றைக் கொண்டு, 'இங்குள்ள சிற்பங்கள் சிற்பக் கலையறிவு படைத்த சிற்பிகளால் செய்யப்பட்டன; இக்கோவிலின் பிற பகுதிகளில் உள்ள சிற்பப் பெருமையை இம்மண்டபச் சிற்பங்கள் கொண்டே நன்கறியலாம்; தமிழ் நாட்டுச் சிற்பியின் திறமையும் சிற்பமும் பிற நாட்டார் போற்றும் தன்மை வாய்ந்தவை; இங்குள்ள சிற்பங்கள் அணிந்துள்ள ஆடை, அணி, செருப்பு, தலையணி முதலியன அச்சிற்பங்கள் தோற்றுவிக்கப்பட்ட காலத்தின் நாகரிகத்தை நன்கு உணர்த்துகின்றன,' என்பன போன்றவற்றை எளிதில் உணரலாம்.

## 6. புள்ளியும் பொருளாதாரமும்

[டாக்டர் திரு. பி. நடராஜன் அவர்கள், M. A., D. Litt.]

ஆங்கிலத்தில் வேடிக்கையாக ஒரு பழமொழி சொல்லுவதுண்டு. அதாவது, பொய் மூன்று வகைப்படும்: பொய், முழுப் பொய், புள்ளிகள் என.

புள்ளிகளைக் காட்டிப் புலவர் எதையும் நிறுவ வல்லர்; நாவலர் பொய்யை மெய்யாகவும் காட்டுவர்; மெய்யைப் பொய்யாகவும் காட்டுவர். நுண்ணறிவும் சொல்வன்மையுமே இவற்றிற்குக் காரணம்; புள்ளிகளல்ல. மூன்றும் மூன்றும் ஆறு என்பது புள்ளி. இது யாண்டும் எக்காலும் உண்மை.

அரசியல் நிருவாகத்துக்கும் சமூக வளர்ச்சிக்கும் புள்ளிகள் இன்றியமையாதன. புள்ளி அளவுகோல். 'மக்கள் தொகை சென்ற ஆண்டில் எவ்வளவு? இவ்வாண்டில் எவ்வளவு? பெருகி வருகின்றதா? குறைந்து வருகின்றதா? அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருளுற்பத்தி கூடி வருகின்றதா? குறைந்து வருகின்றதா? குறைந்தால், எவ்வளவு குறைவு? குறைபாட்டை நீக்க அயல் நாடுகளிலிருந்து எவ்வளவு இறக்குமதி செய்ய வேண்டும்? கூடினால் எவ்வளவு ஏற்றுமதி செய்தால், நாட்டில் பசிப்பிணி இல்லாதிருக்கும்? எந்தெந்தப் பொருள்களை இறக்குமதி செய்வது? எந்த அளவுக்கு?' என்னும் இவற்றையெல்லாம் புள்ளியென்னும் அளவுகோலால் அளந்து காணுவிட்டால், அரங்கின்றி வட்டாடல் ஒக்கும் அரசாங்க நிருவாகம். குருடன் பெருவழி நடத்தல் ஒக்கும் சமூகப் போக்கு.

'கண் அளக்காததை, கருவி அளக்குமா?' என்பார்கள். காண்பதெல்லாம் உண்மையா? சென்னைக் கடற்கரையில் ஒரு தலைவர் பேசினர். ஒரு பத்திரிகை நிருபர், ஐயாயிரம் பேர் குழுமி இருந்தனரென்றும், மற்றொருவர், பதினயிரம் பேர் என்றும், இன்னும் ஒருவர், இருபதினயிரம்பேர் என்

றும் குறிக்கிறார். அதே கூட்டத்தைக் கோகலே மண்டபத்தில் டிக்கெட்டு வைத்து அனுமதித்துக் கூட்டினால், உண்மையளவு தெரிய வரும். முன்னையது யூகம்; பின்னையது புள்ளி விவரம். கண்ணளக்காதது புள்ளி அளக்கும்.

மணியாச்சி இரயில் சந்திப்பிலிருந்து தென்காசி வரையிலும் ஒருவர் பிரயாணம் செய்தார்; இருபுறமும் பச்சைப் பசேலென்று நெற்பயிர் பரந்து கண்ணைக் குளிர்வித்தது; பொருநையாற்றின் வற்றாத வளத்தால் மூன்று போகம் விளைதலைக் கண்டார்; 'திருநெல்வேலி உணவுப்பொருள் மிகுதியாக உற்பத்தி செய்யும் ஜில்லா; ஏனைய ஜில்லாக்களிலிருந்து அதற்கு உணவுப்பொருள் அனுப்ப வேண்டுவதில்லை' என்று அவர் சொல்லிவிட்டார்; இரயிற்பாதை சாலி கொழிக்கும் மருதநில வழியே சென்றது. அவர் தாம் கண்டது முழு உண்மை என்று கொண்டார். பருத்தியே விளையும் கண்ணகன்ற கருங்காடுகள், பாழும் பாலைநிலச் சமவெளிகள் முதலியவற்றை அவர் கணக்கிலெடுக்கவில்லை. 'ஜில்லாவின் மக்கள் தொகுதியென்ன? உணவுப் பொருள் விளைக்கும் நிலப் பரப்பின் அளவென்ன?' என்பன போன்றவற்றை அளந்தறிந்து அதன் பிறகு நெல்லை ஜில்லா உணவுப்பொருள் குறைபட்டதா அல்லது மிகுதிப் பட்டதா என்று காண்பதுதான் புள்ளி முறை.

மக்கள், தூரத்தை அளப்பதற்குக் கருவியில்லாக் காலத்திலே, 'கூப்பிடு தொலை, நாழிகைத் தூரம்' என்றார்கள். 'ஒருவன் கூப்பிட்டால் எவ்வளவு தொலைவுக்குக் கேட்குமோ, அவ்வளவு தொலை; ஒருவன் ஒரு நாழிகை நேரம் வழி நடந்தால் எவ்வளவு நடப்பானோ, அவ்வளவு தூரம்' என்பது அதற்குப் பொருள். கூப்பிடுகின்றவன் குரல் சிங்கக் கர்ச்சனை போன்றிருந்தால், அல்லது குயிற் குரலாய் இருந்தால், நடப்பவன் கட்டிளைஞனயிருந்தால், அல்லது கழி ஊன்றித் தள்ளாடும் கிழவனயிருந்தால், இங்ஙனமாகிய தூரத்தைப் பற்றிய வருணனைகள் அழகிய

கற்பனையாகவும் இலக்கிய நயம் கொண்டதாகவும் இருக்கலாம்; விஞ்ஞானத்துக்கு ஏற்றனவல்ல. தூரத்தை அளந்து மைல் என்றும் பர்லாங்கு என்றும் வகுத்துக் கல்விட்டு வழி சமைப்பதே விஞ்ஞான முறை. காய்ச்சல் அடிக்கிறவனைத் தொட்டுப் பார்த்து, நெருப்புப்போலக் கொதிக்கிறதென்றும், பனிபோலக் குளிர்கிறதென்றும் சொல்லுவது நாடோடி முறை. '105 டிகிரி காய்ச்சல் அடிக்கிறது; 98 டிகிரிக்கு இறங்கிவிட்டது,' என்றெல்லாம் தெர்மா மீட்டர் வைத்துக் கண்டு சொல்லுவது அளவுமுறை.

'காக்கை ஏறப் பனம்பழம் விழுந்தது,' என்ற முறையில் பலர் வாதாடுவர்; 'மக்கள் தொகை பெருகியது; உணவுக் கஷ்டம் மிகுந்தது. ஆகவே, மக்கள் தொகையைக் குறைக்கவேண்டும்,' என்று முடிவு கூறுவர். 'மக்கள் தொகை எந்த அளவுக்குப் பெருகியது? எந்த அளவுக்கு உணவுப் பொருள்கள் சாகுபடியாகும்? நிலப் பரப்புப் பெருகியதா? அந்த நிலப் பரப்பின் விளைச்சல் மேனி முன்னுக்கு இப்பொழுது எப்படி? சாகுபடியாகும் தானியமெல்லாம் சந்தைக்கு வருகின்றனவா? அல்லது சந்துபொந்துகளில் பதுங்கிக் கிடக்கின்றனவா? பங்கீட்டு முறை வந்தபின் மொத்தத்தில் மக்கள் முன்னிலும் அதிக உணவை உட்கொள்ளவில்லையா? பங்கீட்டு முறை இல்லாதபோது, பலர் உணவே கிட்டாது மடிந்ததுண்டா? இப்போது அரை வயிற்றுக்கேனும் தின்று குற்றுயிரோடிருக்கவில்லையா? பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதியாகாதது பஞ்சத்துக்கு ஒரு காரணமா, அன்று?' என்ற பல விஷயங்களை ஒவ்வொன்றாகக் கணக்குப் போட்டு ஆராய்ந்து முடிவு காண்பதே புள்ளிப் பொருளாதார முறையாகும். புள்ளிகளைத் தொகுப்பதோடு அந்தப் புள்ளிகளை நூல் வழக்குப் பிறழாது பயன்படுத்துவதும் முக்கியம்.

'கைப்புண்ணுக்குக் கண்ணாடியா? மக்கள் வறுமை நிலையில் இருக்கின்றனர். இதைக் காண்பதற்கு விசா

ரணை எதற்கு? பொருளாதார விசாரணைகளும் புள்ளித் தொகுப்புக்களும் செல்வமிகுந்த மேனுடுகளுக்கு வேண்டும். ஏழைத் தேசங்களுக்கு ஏன்? வினை விதைத்தால் தினை விளையுமா? நன்மையான சட்டங்களை நிறைவேற்றி விட்டால் வறுமை தானுகப் போய்விடுகிறது. இந்த விசாரணைகளிற் செலவிடும் பணத்தை ஒரு பள்ளிக்கோ, ஆஸ்பத்திரிக்கோ செலவுசெய்தால் எவ்வளவோ பயனுகும்,' என்ற முறையிற் பலர் பேசி வந்ததுண்டு. இந்த முறையான நிஷ்காமிய கர்மப்பேச்சு,

> 'அளவறிந்து வாழர்தான் வாழ்க்கை உளபோல
> இல்லாகித் தோன்ருக் கெடும்,'

என்ற திருக்குறள் தோன்றிய நாட்டில், 'ஆற்றிற் போட்டாலும் அளந்து போடு,' என்ற ஆன்ரூேர் மொழி தோன்றிய நாட்டில், வேரூன்றவில்லை. பொருளாதாரத் துறைகளில் முன்னேறிய நாடுகளைவிடப் பிற்பட்ட நாடுகளில் சமூக நிலைகளைப்பற்றிய பொருளாதார ஆராய்ச்சிகளும் புள்ளி விவரங்களும் அதிகம் தேவை என்பதை அறிஞர் உணர்ந்து வருகின்றனர். சோழ, பல்லவர் ஆட்சிக் காலத்தே புள்ளி விவரங்கள் தொகுப்பதும், அவற்றின் உதவியால் ஆட்சி முறைக்கான திட்டங்களை வகுப்பதும் பழக்கமாயிருந்து வந்திருக்கின்றன. இன்று கணித நிபுணர்கள் 'பாயிண்டு நாட்டு நாட்டு நாட்டு' என்று எத்தனையோ சுன்னங்களிட்டுப் பின்ன எண்ணைக் குறிக்கும் மிகச் சிறிய பின்ன அளவுக்கு நிலத்தை அளந்து மதிப்பிட்டான் உலகளந்த சோழனுன இராஜராஜன். அக்காலத்தில் ஊர்தோறும் புள்ளி விவரங்களை நுட்பமாகத் திரட்டித் தர அதிகாரிகளிருந்தார்கள். கால அளவில் கணக்கப் பிள்ளை வகுப்பு என்ற வகுப்பே தோன்றிவிட்டது.

'நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே,' என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அன்னிய துரைத்தனத்தார் வர, அமைதி ஏற்படுவதே ஆட்சியின்

முக்கிய இலட்சியமாயிற்று. வரி போடுவதற்கும் ஆட்சிக் கட்டுப்பாடு குலையாமல் இருப்பதற்கும் வேண்டும் அளவு புள்ளிவிவரங்களைப் பெரும்பான்மையாகத் தொகுத்துக் கொண்டனரேயன்றி, தேச வளத்துக்கும் சமூக நன்மைக்கும் பொருந்திய சட்ட முறைகளை ஏற்படுத்துவதற்கோ, சூழ்நிலைகளை வருவித்துக்கொள்வதற்கோ, வேண்டும் புள்ளி விவரங்களைத் தொகுப்பதில் அவர்கள் கவலைகொள்ள வில்லை.

நாடு உரிமை பெற்றுவிட்டது. மதுவிலக்கு, கடன் குறைப்பு, ஜமீன் ஒழிப்பு, உழவு முன்னேற்றம், உழவர் முன்னேற்றம், தொழிலுயர்வு, தொழிலாளர் உயர்வு, கிராமச் சீர்திருத்தம் போன்ற பலவகைத் துறைகளில் மத்திய அரசாங்கத்தாரும் மாகாண அரசாங்கத்தாரும் மிக முக்கியமான சட்டங்களை வகுத்து வருகின்றனர். அந்தச் சட்டங்களை நடைமுறையிற் கொண்டு வருவதற்கு வரிகளை விதித்தும், இலாபமான தொழில்களை நடத்தியும், வேண்டும் பொருளைச் சேர்த்து வருகின்றனர். ‘இந்தச் சட்டங்களெல்லாம் எதிர்பார்த்த நன்மையைத் தருகின்றனவா? விதித்த வரி யாதாயினும் எதிர்பாராத தீமையை விளைவிக்கின்றதா?’ என்பனவற்றை ஆராய்ந்து காணப் புள்ளிவிவரங்களும் பொருளாதார விசாரணைகளும் வேண்டும். இவற்றின் முடிபுகள் ஆட்சிமுறைக்கு ஒரு வழிகாட்டியாக அமையவேண்டுவதோடு பொது மக்களும் நாட்டின் பொருளாதார நிலை மாதந்தோறும் ஆண்டுதோறும் எவ்வாறிருந்து வருகிறதென்று உணரும் முறையிலும் வெளிவருதல் வேண்டும். இதற்குப் போதிய வசதிகள் நாட்டில் இன்னும் இல்லை. எல்லாப் புள்ளி விவரங்களும் ரெவினியூ இலாக்கா அதிகாரிகளாலேயே சொல்லப்படுகின்றன. பொறுப்பான ரெவினியூ அதிகாரிகள் அட்டமாசித்தி வல்லவர்களானாலன்றி, அனைத்தையும் சரிவரக் கவனித்துக் கொள்வது இயலாது. எனவே, பெரும்பாலான புள்ளிக்

கணக்கெல்லாம் தலையாரியும் வெட்டியானும் தொகுத்த தொகுப்பே. இந்தக் குறைகளை நீக்கிச் சரியான முறையில் நுண்ணிய புள்ளிக் கணக்குகளைத் திரட்டவும், பொருளாதார விசாரணைகளை நடத்தவும் சென்னை அரசாங்கம் அடிகோலி இருப்பது முக்கியமான செய்தியாகும்.

## 7. செந்தமிழ் போற்றிய சேரன்

[வித்துவான் திரு. த. கி. குப்புசாமி ஆழ்வார் அவர்கள்]

பெருஞ்சேரல் இரும்பொறை என்பவன் வஞ்சி மாநகரிலிருந்து அரசாண்டு வந்த சேரமன்னன்; வீரத்திலும், கொடையிலும், நியாயத்திலும் சிறந்தவன்; மும்முரசங்களை உடையவன்; பேருபகாரி; புலவர்களைப் போற்றுபவன்.

இவன் திருவுடையாரைவிட அறிவுடையாரையே பெரிதும் மதித்து வந்தான்; அவர்களிடம் அளவற்ற அன்பு காட்டி ஆதரித்து வந்தான். ஆதலால், பழுத்த மரங்களை நாடிச் செல்லும் பறவைகளைப்போலப் பல புலவர் இவனை நாடி வந்தனர்; பரிசு பெற்று மகிழ்ந்தனர்.

இவன் சபைக்குப் பாண்டி நாட்டுப் புலவர் ஒருவர் வந்திருந்தார். அவர் பெயர் மோசி கீரனர். இரும்பொறை மன்னன் புலவரை அன்புடன் வரவேற்று உபசரித்தான். அரசனுடைய நல்லியல்புகளை அறிந்து மகிழ்ந்த புலவர், "அரசே, உமது அன்பைக் கண்டு அகமகிழ்கிறேன். உமது அன்பு நிறைந்த அரசாட்சியில் குடிகளுக்கு ஒரு குறைவும் இராது என்பதில் ஐயமில்லை. குடிகளுக்கு நெல்லும் நீரும் இன்றியமையாதவை. ஆயினும், உண்மையில் நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று. அவற்றை அவர்கள் வருத்தமின்றிப் பெற்று அனுபவிக்குமாறு செங்கோல் செலுத்துகின்ற அரசனே உயிராவான்," என்பன போன்ற பல அறிவுரைகளைக் கூறினர்.

அரசன், புலவருடைய பொன்னுரைகளைக் கேட்டு மகிழ்ந்து, அவருக்கு வேண்டிய பொருள்களை விருப்புடன் கொடுத்தான்; சிறந்த கல்விமான் ஆகையால், புலவரின் நுண்ணறிவைக் கண்டு வியந்து அவருடன் நட்புரிமை கொண்டான். ஆதலால், புலவர் அடிக்கடி இவனது அவைக்களத்திற்கு வந்து அரிய பல செய்யுட்களைப் பாடி அறிவுரைகளைத் தெரிவித்து வந்தார்.

ஒருநாள் மோசி கீரனார் நெடுந்தூரத்திலிருந்து சேரனைக் காணும்பொருட்டு அரண்மனைக்கு வந்தார். அப்பொழுது அவைக்களத்தில் ஒருவரும் இல்லை. ஆகையால், அவர் அரசன் வரும்வரையில் காத்திருக்க வேண்டியவர் ஆனார். புலவர் பயணத்தினால் களைத்துப்போயிருந்தார். 'சற்று இளைப்பாறலாம்,' என்று எண்ணிய அவர், சுற்று முற்றும் பார்த்தார்; அங்கோரிடத்தில் ஓர் அழகிய ஆசனம் இருப்பதைக் கண்டார்; உடனே அதில் ஏறி அமர்ந்து சாய்ந்து படுத்தார்; சிறிது நேரத்திற்கெல்லாம் அயர்ந்து உறங்கிவிட்டார். அவர் அவ்வாசனத்தில் அமரலாமா, கூடாதா என்றுகூட எண்ணவில்லை. அவர் உடம்பு அவ்வளவு களைத்துப் போயிருந்தது.

புலவர் உறங்கிய ஆசனம், அரசனுடைய வீர முரசம் வைக்கப்படும் முரசு கட்டில். வீர முரசத்தைப் பற்றியும், முரசு கட்டிலைப் பற்றியும் இங்கு அறிய வேண்டுவது அவசியமாகும்:

வீர முரசம், மும்முரசங்களுள் ஒன்று. அது போர்க் காலங்களில் போரை அறிவிப்பதற்கு முழங்கும்; வெற்றியைத் தெரிவிப்பதற்கும் வீறுடன் ஒலிக்கும்; பலியிடும் காலங்களிலும் பார் கிடுகிடுவிக்கும். அம்முரசத்தின் அமைப்பும், அரசர்கள் அதைப் போற்றிய முறையும், அவர்கள் அதனிடம் கொண்டிருந்த பெருமதிப்பும் வியக்கத் தக்கவை.

வீர முரசத்தின் சுற்றிலுமுள்ள விளிம்பு, கருமரத்தால் செய்யப்பட்டு மிகவும் உறுதியுடையதாயிருக்கும். அதன் மேல் போர்த்தப்பட்டிருப்பது, வீரம் பொருந்திய ஓர் எருதின் தோலாகும். அந்த எருது ஒரு புலியோடு போர் செய்து அதனைத் தன் கூர்மையான கொம்புகளால் குத்திக் கிழித்துக் கொன்றிருக்கும். அப்படிப்பட்ட வலி மிகுந்த காளை இறந்த பிறகு அதன் தோலை உரித்து மயிர் சீவாமல் முரசின்மேல் போர்த்துத் தக்க வார்களால் இழுத்து இறுகக் கட்டியிருப்பார்கள்.

அவ்வீர முரசத்தை அரசர் தம் உயிர் போன்ற அருமையான பொருளாக எண்ணினர்; தமது வெற்றித் தெய்வமாகவும் போற்றி வந்தனர்; அதனால் வீர முரசினை அடிக்கடி நீர்த்துறைக்குக் கொண்டு போய், மிகுந்த மரியாதையுடன் நீராட்டுவர்; பின்னர், மயில் தோகையும் உழிஞைத் தளிரும் சேர்த்துக் கட்டிய மாலையைச் சூட்டுவர்; வீரமொழிகளைச் சொல்லித் துதித்துப் பூசை செய்வர்; பிறகு அம் முரசினிடமாகவுள்ள வெற்றித் தெய்வத்திற்கு இரத்தமும் கள்ளும் கலந்த பயங்கரமான சோற்றுருண்டையைப் படைத்து வணங்குவர். அப்பிண்டத்தை அணுகப் பேயும் அஞ்சும். ஈ, எறும்பும் அதனை மொய்க்க மாட்டா; ஆனல், காக்கையும் கழுகுமே உண்ணும். அவ்விரு பறவைகளும் வெற்றித் தெய்வத்தால் அனுப்பப்பட்டவை என்பதும், அவை உண்டாற்றான் அரசனுக்கு வெற்றியுண்டாகும் என்பதும் அக்காலத்தவரின் நம்பிக்கை. அவ்வாறு அவை வந்து உண்ணாவிட்டால், அது தீமைக்கு அறிகுறி என்று அக்காலத்தவர் எண்ணினர்.

முரசத்திற்கு இவ்வாறு பலியிடும் காலங்களில், பேரொலி உண்டாகுமாறு முரசம் அடிக்கப்படும். பிறகு அஃது, அரண்மனைக்குக் கொண்டுபோய் வெண்மையான மெத்தை அமைந்து விளங்கும் முரசு கட்டிலில் வைத்து வணங்கப்படும்.

முரசு கட்டில், அரசன் வீற்றிருக்கும் சிங்காதனம் போன்ற பெருமையுடையது. ஆதலால், ஓர் அரசன் பகையரசனை வென்ற பிறகு, தோற்ற அரசனது முரசு கட்டிலின்மேல் எவரேனும் ஒருவரை உட்காரச் செய்து அவ்வரசனை அவமானப்படுத்துவது பண்டைய வழக்கமா யிருந்தது. இதனால், முரசு கட்டிலில் எவரேனும் ஏறினால், அஃது அரசனுக்குப் பெரிய அவமானம் என்று கருதப் பட்டு வந்த செய்தி நன்கு விளங்கும். ஆகையால், யாரே னும் முரசு கட்டிலில் ஏறினால், ஏறியவரை உடனே வாளால் வெட்டி வீழ்த்திவிடுவர்.

புலவர் மோசி கீரனர் வந்தபொழுது, முரசம் வழக்கம் போல நீர்த்துறைக்குக் கொண்டு போகப்பட்டிருந்தது. அதனல், முரசு கட்டில் முரசமின்றி இருந்தது. அதை அறியாத புலவர், ஏதோ ஆசனம் என்று நினைத்து, வந்த களைப்பினல் ஆராய்ந்து பாராமல், அதில் அமர்ந்து உறங்கி விட்டார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஆற்றிலிருந்து மிக்க மரி யாதையுடன் முரசம் கொண்டு வரப்பட்டது. அதனுடன் அரசனும் வந்தான். முரசு கட்டிலை நோக்கி முன்னல் சென்ற சேரன், அதில் யாரோ ஒருவர் உறங்கிக்கொண் டிருப்பதைக் கண்டான். அவர் யார் என்பதைப்பற்றி அறிய அவன் எண்ணவில்லை; கண்களில் கோபக் கனல் வீச, வாளை உருவினன்; விரைந்து கட்டிலின் அருகிற் சென்றான். பின்னல் வந்த யாவரும் திகைத்து நின்றுவிட் டனர். மறு நொடியில் புலவரது உடல் இரு துண்டுகளாக விழுந்திருக்க வேண்டும். ஆனல், அவ்வாறு நிகழவில்லை. அதற்கு மாருக வேருேர் அற்புத நிகழ்ச்சியைக் கண்டு எல்லாரும் திகைப்பு நீங்கி வியப்பில் மூழ்கினர்.

இரும்பொறை மன்னன், முரசு கட்டிலின் அருகிற் சென்றதும் சிறிது தயங்கிப் படுத்திருப்பவரின் முகத்தைப் பார்த்தான். பார்த்தவுடன் அவனுடைய கோபமெல்லாம்

எங்கோ பறந்து போய்விட்டது. பொங்கிய கோபத்திற்குப் பதிலாக இரக்கம் சுரந்தெழுந்தது. நெடுந்தூரத்திலிருந்து வந்த களைப்பினல் புலவர் அயர்ந்து உறங்குகிருர் என்பதை அரசன் உடனே உணர்ந்துகொண்டான்; அவர் தூக்கத்திற்கு இடையூறு உண்டாக்கலாகாது என்று அன்புடன் நினைத்தான்; புலவர் நன்ருய்த் தூங்கிக் களைப்பு நீங்க வேண்டும் என்னும் ஆசை கொண்டான்; ஆதலால், வாளை உறையில் போட்டுவிட்டு, சாமரையைக் கையிலெடுத்துப் புலவர் அருகில் நின்று அவர் உடம்பு குளிர வீசிக்கொண்டிருந்தான்.

நீண்ட நேரம் தம்மை மறந்து தூங்கிக்கொண்டிருந்த மோசி கீரனர், மெல்லக் கண் விழித்தார்; அருகில் நிற்கும் அரசனையும் அவன் செயலையும் கண்டார்; திடுக்கிட்டு எழுந்திருந்தார்; சிறிது தூரத்தில் வீர முரசமும் அதனைச் சுற்றிலும் அரசனுடைய பரிவாரங்களும் இருப்பதைப் பார்த்தார். அவர் மனத்தில் தாம் ஏதோ பெருந்தவறு செய்துவிட்டது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது; பரபரப்புடன் ஆசனத்தை விட்டு இறங்கி நின்ருர்.

தூக்கத்தினல் களைப்பு நீங்கித் தெளிந்திருந்த அவரது அறிவில், அப்பொழுதுதான் தாம் உறங்கியது முரசு கட்டிலில் என்பதும், அதில் ஏறியிருந்தது அரசனுக்குச் செய்த பெருந்தவருகும் என்பதும் விளக்கமாய்த் தோன்றின. அத்தவறு செய்தார் அடையும் தண்டனையையும் அவர் நன்கறிவர். ஆகையால், அரசன் தம்மைக் கொல்லாமல் விட்டதுமன்றித் தமது தூக்கத்திற்கு உதவியாகச் சாமரையால் வீசியதையும் நினைக்க நினைக்க அவர் மனம் அன்பால் கரைந்துவிட்டது. அவர் தாம் அவசரத்தில் அறிவிழந்து செய்துவிட்ட செயலுக்கு மிக வருந்தினர். அரசனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று அவர் மனம் துடித்தது. ஆனல், அவர் அரசனுடன் தாம் பழகும் நட்புரிமைக்கு அஃது ஏற்றதன்று எனப் பேசாதிருந்தார். மனம் குழம்

பிய அந்நிலைமையில் என்ன பேசுவது என்பது அவருக்குத் தோன்றவில்லை.

அரசன், புலவரது நிலைமையை உணர்ந்தான்; அருகிற்போய் அவரைத் தழுவிக்கொண்டு, "அறிஞரே, நீண்ட தூரத்திலிருந்து வந்திருக்கிறீர்போலும்! களைப்பு மிகுதியாயிருந்தால், இன்னும் சற்று நேரம் கண்ணுறங்கலாமே! ஏன் எழுந்துவிட்டீர்?" என்று ஆதரவுடன் வினவினன்.

அரசன் அன்புரைகளைக் கேட்டு அகங்களித்த புலவர், "அரசரே, உமது பேரன்பை எம்மொழிகளால் எடுத்துரைப்பேன்! யான் உம்முடைய அன்பு வெள்ளத்தில் பல நாட்கள் நீந்தி மகிழ்ந்தது உண்டு; ஆனல், இன்று முழுகிக் களிக்கிறேன்; இதனை முரசு கட்டில் என்று அறியாது இதன்மீது ஏறி உறங்கிவிட்டேன்; இச்செயல் உம்மைப் புண்படுத்தக்கூடியது என்பதை உணர்வேன். என் செயலுக்கு நீர் சினங்கொண்டு என்னை இரு கூறாக்கியிருக்கலாம். ஆயினும், நீர் அவ்வாறு செய்யவில்லை. மேலும், நீர் சாமரை கொண்டு வீசினீர்! இதை நான் எவ்வாறு புகழ்வேன்! நட்பின் சுவையுணர்ந்த நல்லார் உம்மைப்போல வேறொருவர் உலகில் உண்டோ! நீர் தமிழிற் கொண்டிருக்கும் பேரன்பு அன்றோ உம்மை இவ்வாறு கோபத்தை மறக்கச் செய்து சாமரை வீசுமாறு தூண்டியது! நீர் செய்த செயல் செந்தமிழ்க்குச் செய்த சிறப்பேயாகும். உலகமுழுவதும் பரவுவதற்கு உரிய புகழ் பெற்ற நீர் தேவருலகத்திலும் சிறப்புற வாழ்வீர்," என்று புகழ்ந்து வாழ்த்தினர்.

இரும்பொறை வேந்தனது இனிய செயல் என்னே! தமிழினிடத்துள்ள பெரும்பற்று, புலவரது பிழையைப் பொறுத்துக்கொள்ளச் செய்தது! அதனின் மேலாக எளியவனைப்போல்ச் சாமரையைக் கையில் தாங்கி வீசச்செய்தது! இரும்பொறை புகழ் நின்று நிலவுக!

# 8. காந்தியடிகளும் சமூகத் தொண்டும்

[பண்டித வித்துவான் திரு. தி. இராமானுசன் அவர்கள்]

'மக்கள் வாழ்விறுதி நோக்கமே இன்பப் பேறு' என்பதனை மறுப்பவர் எவரும் இரார். அவ்வின்பப் பேறு, மக்கள் வேற்றுமை இன்றி, மனங் கலந்து உயருவதிலேயே உள்ளது. மக்களிடையே சாதி, சமயம், பிறப்பு முதலிய பல வேறு காரணங்களால், வேற்றுமையுணர்வு அரும்பி விடுகிறது. ஓரளவு வேற்றுமைப் பிரிவு உலகியற்கையே என்றாலும், அதனை நீக்கி ஒற்றுமை காண விழைவதே அறிவுடையார் கடன் ஆகும். அவ்வழியில் முயன்ற பெரியாரில் காந்தி அடிகளுக்குத் தலைசிறந்த இடம் உண்டு.

"விடுதலைக்கு உரிய வழி தேச ஊழியத்தில் மட்டும் இல்லை; சமூக ஊழியத்திலும் பெரிதும் பொருந்தியிருக்கிறது" என்பது காந்தி அடிகளார் சொல்லிய பொன்மொழி. அவர் பல துறைகளிலே ஈடுபட்டுச் சமூகத் தொண்டு புரிந்து நின்றார். எனினும், நாம் சுருக்கம் குறித்துச் சிற்சில தலைப்புக்களின் கீழ் அதனை வரையறுத்துக் கொள்ளல் தகும். அத்தலைப்புக்களாவன: தீண்டாமை, பெண்டிர் விடுதலை, தாய் மொழிக் கல்வி, சமய ஒற்றுமை என்பன.

'தீண்டாமை' தமிழ் நாட்டில் இடைக் காலத்தில் வந்து புகுந்த தீய பழக்கங்களுள் ஒன்று. கடவுள்மாட்டு அன்பு உடையார்க்குத் தீண்டாமையும் இல்லை; வேற்றுமையும் இல்லை. நம் நாட்டில் தோன்றிய இராமானுசர், சங்கரர், நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்றவர்கள் எல்லாம் அதனை ஒழிக்கவே புவியிடை அரும்பாடுபட்டார்கள். அடிகளாரும் அவ்வழி நின்று அதனை ஒழிக்கப் பாடுபட்டார். "தீண்டாமை சமயத்தின் விளைவன்று; சாத்தானது சூழ்ச்சி," என்பதை அடிகளார் நாடெங்கும் சென்று முழக்கினர்.

தீண்டாதாராகிய கணக்கர் மட்கலத்தைத் தீண்டிக் கழுவுவது கூடாது என்று கருதிய தம் மனைவியாரை அடிகளார் வெளியே தள்ளினர்; சபர்மதிப் பயிற்சி நிலையத்தில் தீண்டாதாரை உடன் சேர்த்துக் கொண்டார்; தீண்டாதார் தனித் தொகுதி முறை ஒழிப்புக்குத் தம் உயிரையே பணயம் வைத்து நாட்டில் பட்டினி நோன்பு நோற்றார். "அவர்கட்குக் கோயில் நுழைவு வேண்டும்," என்று நாடெங்கும் கிளர்ச்சி நடத்தினர்; தீண்டாதார்களுக்கு ஹரிஜனங்கள் என்னும் புதுப் பெயரைச் சூட்டிச் சாதி மாற்றம் காட்டினர். இங்ஙனம் அடிகளார் வாழ்வு தீண்டாமையைப் பூண்டறுக்க வந்த பெரு வாழ்வாய் விளங்கிற்று என்பதிற் பிழை இல்லை.

'பெண் பிறவி இழிந்தது,' எனக் கருதும் மடமையுணர்வும் நம் நாட்டில் இடைக் காலத்தில் தோன்றிய தொன்று. "மன்பதையின் ஒரு பகுதியாகிய பெண் இனத்தைச் சிறுமைப் படுத்துவது, ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு உகந்தது அன்று. பெண்ணை அடிமை கொள்ளும் சமுதாயம் வளர்வதே யில்லை. அது தன்னைத் தானே விலங்கு நிலைக்குத் தாழ்த்திக் கொள்ளும்," என்பது அடிகளார் எண்ணம். பெண்டிரும் ஆடவரும் ஒத்த நிலையினராய் நாட்டிடை வாழவேண்டும் என்று அடிகளார் எழுதியும் பேசியும் வந்தார்; பெண் கல்விக்குப் பெரிதும் ஆதரவு காட்டினர்; விடுதலை இயக்கங்களில் ஆடவர்களோடு ஒப்பப் பங்கெடுத்துக் கொள்ளப் பெண்களுக்கும் வாய்ப்பு நல்கினர். கவியரசியாகிய சரோஜினி அம்மையாரை, 'இந்தியக் குயில்' என்று அடிகளார் ஒரு முறை சொல்லிப் பாராட்டினர். பெண்களை இளமையிலேயே மணம் செய்து கொடுக்கும் வழக்கத்தினை அறவே நீக்க, மக்களைத் தூண்டி வேண்டுகோள் விடுத்தார். "பெண்டிர் அணிகலன்களின்மீது பெருவேட்கை உடையராய் அலைதல் தகாது," என்று அவர்கட்கும் அறிவுறுத்தினர்.

இங்ஙனம் பலவாறாகப் பெண்களைப் பெருமைப்படுத்தி, "அவர்களை மதித்து ஏற்று வாழ்வதே இயற்கை வாழ்வு," என்பதை நடைமுறையில் நடந்து காட்டிப் பெண்டிர் விடுதலைக்கு வழிகோலினார்.

1901-ஆம் ஆண்டு அடிகளார் கல்கத்தாவில் நடைபெற்ற தேசியக் காங்கிரசின் கூட்டத்திற்குக் கோகலேயுடன் சென்றார். அப்போது அங்கு நடைபெற்ற நிகழ்ச்சி முறைகள் எல்லாம் ஆங்கில மயமாகவே இருந்தன. அது கண்ட அடிகளார் கலங்கிநின்றார். "ஆங்கிலம் எவ்வளவு வீறுடன் நம்மீது ஆட்சி செய்து நிற்கிறது என்பதனை நான் அன்றே வருத்தத்துடன் நோக்கினேன்," என்று அந்நிகழ்ச்சிபற்றிப் பின்னர் அடிகளார் வருந்திக் குறிப்பிட்டுள்ளார். அடிகளாருக்கு ஆங்கிலத்தின்மீது வெறுப்பு இல்லை. "தாய்மொழி வழியாகவே இயற்கை வாழ்வு நடத்த முடியும்," என்பதும், "அதன் மூலமே நமது பழம் பண்பாட்டை அழியாது வளர்க்க முடியும்," என்பதும் அடிகளார் கண்டறிந்த உண்மைகள். அடிகளார் தென்னாப்பிரிக்காவில் கலைக்கூடம் ஒன்று அமைத்து மக்களுக்கு அறிவூட்டியபோது நாட்டு மொழிகளையே முதலிற் பயிற்றினார்.

"ஐம்பது ஆண்டுகளாக நாம் பிறமொழி கற்றதே நம் அடிமை வாழ்வின் அழியாத குறி. அப்பிறமொழி தான் நம்மை மீளா அடிமையில் இருத்தி வைத்திருக்கிறது. ஆங்கிலக் கல்வி நம்மவரை நம் நாட்டிலேயே வேற்றவர்களாகச் செய்துவிட்டது. பிறமொழி வாயிலாகக் கற்ற புதுப் புதுக் கருத்துக்கள் பாமரர்க்குப் பயன்படாதபடி சிறைப்பட்டுக் கிடக்கின்றன. கடந்த ஐம்பதாண்டுகள் தாய்மொழி வாயிலாக நாம் கற்றிருப்பின், நம்மவரான போசும், இராயும் கண்ட புதுமைகள் வீட்டுக்கு வீடு இராமாயண பாரதங்கள்போலப் பரவி நம் செல்வங்களாய் இருக்கும்" என்னும் இவ்வுண்மைகளைத் தெளிவாக உணர்ந்து, அடி

களார் தாய்மொழி ஆக்கத்திற்கு எத்தனையோ துறைகளில் ஊக்கம் காட்டினர்.

காந்தி அடிகளார் தமது வரலாற்றைக் கூர்ஜர மொழியின் வாயிலாகவே எழுதி வெளியிட்டார்: தாய்மொழிக்கு முதலிடம் தரும் 'வார்தாக் கல்வித் திட்டத்தை' உருவாக்கித் தந்தார். "கல்வி, ஒழுக்கத்தோடு இயைபு பெறுமாறு மாற்றி அமைக்கப்பெறவேண்டும்," என்று நாட்டவருக்கு மீட்டும் மீட்டும் சுட்டிக் காட்டினர். காங்கிரசுப் பேரவை அடிகளார் ஆணையின்கீழ் அடங்கி நடந்த காலந்தொட்டே, அதில் தாய்மொழி மணம் கமழ வழி கண்டார். சுருங்கச் சொன்னல், ஆங்கில மயக்கிலே சிக்குற்றுத் தமிழை அறவே மறந்து திரிந்த தமிழன், இன்று விழித்தெழுந்து, பழம் பெருமை பேணுதற்கு அடிகளார் செய்த மொழித் தொண்டு சிறந்த காரணம் எனல் தகும்.

மனிதன் கடவுளோடு உறவுபூண்டு வாழும் வாழ்வு, "சமய வாழ்வு" எனப்படும். எல்லாச் சமயங்களும் ஒரே கடவுளைத்தான் சுட்டுகின்றன. கடவுளுக்கு வெவ்வேறு பெயர்வடிவங்களையும் நாமே கற்பித்துக்கொண்டு பிணங்குகின்ருேம். சிறந்த மெய்யடியார்கள் எம்மதத்தோடும் பிணங்குவதில்லை. பிறமத உண்மைகளையும் இகழாது கேட்டறிந்து, உண்மைதேறி, எல்லாரையும் ஒரே கடவுளின் பிள்ளைகளாகப் பாவிப்பதே அறிவுடைய நெறி. நம் இந்திய நாட்டில் சமயப் போர், அறியாமையின் காரணமாக நிகழ்ந்து வந்தது உண்டு. காந்தி அடிகளார் அவ்விதம் நிகழும் போர்கள் நாட்டு நலத்தினைக் குலைக்கும் என்பதை உணர்ந்தார். 'சமய ஒற்றுமை ஏற்படுவதுதான், விடுதலை வழியினை எளிதாக்கும்,' என்னும் உண்மை அவருக்குப் புலப்பட்டது. பல்லாற்ருனும் அத்துறையில் நாட்டம் கொண்டு அடிகளார் தொண்டு செய்தார். "சமயம் இன்றி அரசியல் இல்லை; சமயத்துக்கு அரசியலும் ஒரு துணை;

சமயம் அற்ற அரசியல் கூற்றுவனை ஒத்தது'', என்று அடிகளார் எழுதியுள்ளார். "கடவுள் ஒருவரே. வேதங்கள் ஒரே கடவுளைத்தான் குறிக்கின்றன; அக்கடவுளே நம் வாழ்வை உறுதுணையாயிருந்து நடத்துகின்றார். சத்தியம் என்பது ஒரு சமய வேதத்திற்குமட்டும் உரியதன்று; நாம் அனைவரும் 'சத்திய நெறியே சமயம்' என்பதை உணர வேண்டும்,'' என்று அடிகள் அருளிச்செய்த கருத்துக்கள், அவரது சமய ஒற்றுமை குறித்த மனப் பண்பினை நமக்கு நல்ல முறையில் எடுத்துக் காட்டும். இப்படிச் சொல்லளவில்மட்டும் அன்றிச் செயல் முறையிலும் அப்பண்பை அவர் மேற்கொண்டு ஒழுகினர். இஸ்லாம் மதத்தின்மீது கொண்டிருந்த அன்பே, அடிகளைக் கிலாபத்து இயக்கத்தில் சேர்ந்து பாடுபடச் செய்தது. அடிகளார் ஒருமுறை உரோமாபுரிக்கு எழுந்தருளினர்; போப்பாண்டவரைக் காண வேண்டும் என்ற பேரவாவால், அவ்வாண்டவர் இருந்த நிலையம் நண்ணினர். அங்கே ஏசுநாதர் அறையப் பெற்ற அற்புதச் சிலுவை ஓவியம் ஒன்றைக் கண்டதும் அவர் கண்ணீர் பெருக்கி, அன்புவடிவாய் மாறி, அச் சிலுவைக் கோலத்தினை வலம் வந்து வணங்கினர். 1924-ஆம் ஆண்டு மே மாதம் ஜாவுகுவில் கொண்டாடப்பெற்ற 'புத்தர் பிரான் பிறந்த நாட் பெரு விழா'வில் அடிகளார் சென்று தலைமை தாங்கினர். அடிகளார் பிறப்பால் வைணவராயினும், சிவபரஞ் சுடரினை நாடோறும் காலையில் தொழுவதிலிருந்து தவறுவதில்லை. கோயில்களைச் சமய ஒற்றுமை நிலவுவதற்கு வழி செய்யும் வகையில் சீர்திருத்திச் செப்பனிட வேண்டும் என்று அவர் கருதினர்.

அடிகளார் முற்காட்டியபடி சமூக முன்னேற்றத் துறைகளை வகுத்து, அவற்றைச் சீர்திருத்தி, அரசியல் துறைக்குப் பயன்படுத்தினர்; சமூகத்தில் நிலவி வந்த பிற குறைபாடுகளையும் சீர்திருத்தினர் என்பதனையும் நாம் காணல் வேண்டும்.

கண்மூடி நம்பும் பழக்கவழக்கங்களை அப்படியே ஏற்க விரும்பும் மூடநம்பிக்கை அடிகளாரிடம் இல்லை. சமயத்தின் பெயரால் கோவில்களில் வேசையர்களைத் தேவதாசியராகக் கொண்டு பேணிவரும் வழக்கத்தினை அடிகளார் கண்டித்தார்; தாசிகள் கோவில்களில் கலைவளர்ச்சித் திரையின் கீழ் நடனமாடும் காட்சிகளை வெறுத்தார். அவர் ஓய்வு நேரங்களில் இராமாயண பாரத நூல்களைப் படிப்பது உண்டு. துளசிதாசர் இராமாயணத்தில் அடிகளாருக்கு அளவிறந்த ஈடுபாடு உண்டாயினும், அதில் சொல்லிய "பெண் மக்கள் மூடர்கள்; அவர்கள் அடிபடப் பிறந்தவர்கள்," என்ற கருத்தினைக் கண்டித்து ஒதுக்கவே செய்தார்; அக்கருத்துடைய பாடல்களை நூலினின்று நீக்கிவிட வேண்டும் என்றும் அஞ்சாது சொன்னார்.

"குழந்தை மணத்தினை ஒழிக்க வேண்டும். இளங் கைம்பெண்களின் துயர் களைந்து, விரும்பினால் அவர் நோக்குப்படி மீண்டும் மணம் செய்துகொள்ளச் சமுதாயத்தில் வழி விட வேண்டும்; நன்னெறியில் ஒழுகும்படி தூண்டி, விலை மகளிரைக் குல மகளிராக்க வகைசெய்தல் வேண்டும்; கட் குடியினை ஒழித்தல் வேண்டும்; மணத்தின்போது வரதட்சிணை வாங்கும் வழக்கமும் அறவே ஒழிக்கப்படல் வேண்டும்" என்னும் அடிகளாரின் சீர்திருத்தக் கருத்துக்களை நாம் காணுதல் வேண்டும். இத்தீமைகள் எல்லாம் நீங்கின சமூகமே வளர்ச்சியடைந்து நல்வாழ்வு பெறும் என்ற நாட்டம் காந்தி அடிகளாருக்கு இருந்தது. இக்கருத்துக்களை அவர் அடிக்கடி வற்புறுத்தி வந்தார்.

# 9. ஒரு கடிதம்*

(உடன் படித்தான் ஒருவன் எழுதியது போல எழுதியது)

[டாக்டர் திரு. மு. வரதராசனர், M. O. L.]

நண்ப,

நலம் என்று எழுதிப் பாசாங்கு செய்யமாட்டேன். துன்பம் என்று வேண்டுமானல், குறிப்பேன்.

உன்னிடத்தில் தவிர, வேறு யாரிடத்தில் வெளிப் படையாக எழுதுவேன்? யாரிடத்தில் சொல்லுவேன்? எண்ணிப் பார்த்தால், உன்னிடத்திலேதான் உண்மை பேசுகின்றேன்; உலகத்தாரிடம் நடிக்கின்றேன்.

என் வாழ்க்கை நாளுக்கு நாள் தாங்க முடியாதது ஆகின்றது. தற்கொலே கோழையின் செயல் என்னும் கொள்கைதான் நான் இன்னும் உயிருடன் இருப்பதற்குக் காரணம். ஒவ்வொரு நொடியும் வாழ்க்கை எனக்குத் திணறலாகவே உள்ளது.

நான் எப்போதோ துறவியாகிவிட்டிருப்பேன். ஆனல், 'உலகத்திற்கு அஞ்சி ஓடுவது தகாது,' என்னும் அறிவுரைதான் அதைத் தடுத்து நிற்கிறது. ஆனல், இன்று துறவறத்தைப் போற்றுகிறேன். என்னைப் போன்ற எத் தனையோ மக்கள் படும் தொல்லேயைக் குறைக்கும் வகை யில் உலகத் தொண்டு செய்வதற்காகத் துறவறம் வேண் டும் என்று போற்றுகிறேன்.

நீயும் நானும் மாணவர்களாகக் கல்லூரி உணவு விடுதி யில் தங்கியிருந்த போது வாழ்ந்தது ஒன்றுதான் வாழ்க்கை! அது போய்விட்டது. பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. அந்த வாழ்க்கையை நினைந்து ஏங்குகின்றேன். அன்று கடமைகளையும் செய்தோம்; கவலே இல்லாமலும் இருந்

* 'கி. பி. 2000' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

தோம். அது போல எப்போதும் வாழுமாறு உலகம் திருந்தக் கூடாதா?

இன்று என் வாழ்க்கையை நினைக்கிறேன்; குடும்பச் சேற்றில் நெளியும் ஒரு புழுவாகவே இருக்கின்றேன். உலகத்தில் பெரும்பாலார் இவ்வாறுதான் இருக்கின்றனர். பலர் உணர்வதில்லை; உணர்ந்த சிலர் உண்மையைச் சொல்வதில்லை. நான் உணர்கின்றேன்; உணர்ந்த உண்மையை எழுதுகின்றேன்.

குடும்பத்தைச் 'சேறு' என்றதும் உன் மனம் வருந்தும் என்பதை அறிவேன். நான் மட்டும் குடும்பத்தைப் பழிப்பவனா? திருவள்ளுவர் போற்றிய குடும்பத்தை நான் பழிக்க முன் வருவேனா? இன்றுள்ள உலக அமைப்பில் குடும்பம் சேறு என்றும் சொல்லலாம்; இன்னும் கடுமையாகவும் சொல்லலாம். ஆனால், அஃது அருமை மனைவியின் குற்றமும் அன்று; ஆருயிர்க் குழந்தைகளின் குற்றமும் அன்று; "உலகம் எப்படிப் போனால் என்ன? நம்மால் ஆனவரைக்கும் நல்ல வழியில் வாழ்ந்து நாளைக் கழிக்கலாம்," என்று எண்ணிய கோழைகளாகிய என்னைப் போன்றவர்கள் குற்றமே! ஆனால், இப்போது என்ன செய்வேன்? என் முழு உதவியும் குடும்பத்திற்கே போதாதிருக்கும் நிலையில், நாட்டுக்கும் உலகத்திற்கும் நான் என்ன தொண்டு செய்வேன்? அதற்குத் துணையாக எத்தனை இளைஞர்கள் உடன் சேர்ந்து உழைக்க முன்வருவார்கள்? அவர்களுக்கு உலக நிலையைப் பற்றி எண்ணத் தெரியுமா? எண்ணத் தெரிந்தாலும், ஒரு மாறுதல் செய்யத்தான் முன் வருவார்களா? புதுமை என்றால் நூறு மைல் ஓட்டந்தானே!

இன்று காலை எனக்கும் என் மனைவிக்கும் பெரும் போர் உண்டாயிற்று. என் தொழில் முக்கியம் என்று சொல்லி இடையூறு செய்த குழந்தைகள் இரண்டையும்

நான் அடித்து ஓட்டினேன். சமையலறையில் சமையல் குறித்த நேரத்திற்கு ஆகவேண்டும்; சமையல் முக்கியம் என்று அங்கிருந்து அவள் அடித்துத் துரத்தினாள். குழந்தைகள் அழுது தேம்பியதைக் கண்டு நான் சினந்தேன். வீண் பேச்சும் வம்புமாக முடிந்து, என் தொழிலும் ஆகாமல், அவள் சமையலும் ஆகாமல் ஒழிந்தன. யாராவது ஐந்து ஆறு குழந்தைகளைப் பெற்று வளர்ப்பவரைக் கண்டால் அவரைத் தெய்வம் என்று கும்பிடலாம் என்று தோன்றுகிறது. சில சமயம் வெறுப்பு உண்டாகும். ஒரு நாள் கடவுளிடமும் வேண்டினேன். "இந்த இரண்டு குழந்தைகளும் எனக்கு ஏன்? ஆண்டவனே, பிறந்து இறந்து போன மூன்று குழந்தைகளைப் போல இவைகளும் இறப்பதே நல்லது. அழைத்துக்கொள். இந்த ஏழைக் குடும்பத்தில் இவை அல்லற்பட்டு வளர்வதைவிடச் செத்து வேறு எங்காவது பிறந்து வளரட்டும்," என்று மனமார வேண்டினேன். அன்று இரவே கம்பெனியிலிருந்து திரும்பிய பிறகு, குழந்தைகள் உறங்கும்போது, அந்த அழகிய முகங்களைக் கண்டு தாடையிற் புத்தி போட்டுக்கொண்டேன். ஓய்வு இல்லாத உழைப்புத்தான் எனக்கும் வெறுப்பு உண்டாக்குவது; அவளுக்கும் வெறுப்பு உண்டாக்குவது. வறுமைதான் அதற்குக் காரணமென்பது உனக்குத் தெரியாதா?

எனக்குப் போதுமான செல்வம் அளிக்காத கடவுள் எனக்குக் குழந்தைகளைமட்டும் ஏன் அளிக்கவேண்டும்? குழந்தை வளர்ப்புமுறைபற்றி உளநூல் வகுப்பில் கற்றதை எல்லாம் காற்றில் பறக்க விட்டுவிட்டேன். என் குழந்தைகளுக்கு வயிற்றுக்கும் போதிய உணவு இல்லை; மனத்துக்கோ, அதைவிடக் கேடான நிலையே. அடிக்கடி அவைகளுக்கு நோய் வருகின்றது. குழந்தைகளுக்காக இரவில் கண்விழித்து என் மனைவிக்கும் உடம்பு கெட்டுவருகின்றது. அவளும் துன்ப வடிவாக மாறிவிட்டாள். அவ

ளுக்கும் வாழ்க்கையில் சோர்வு வளர்ந்துவிட்டது. 'மதலை யைப் பெறுநாள் துன்பம்; வளர்த்திடு நாளுந் துன்பம்,' என்ற ஓர் அடியை விளக்கி ஒரு புத்தகமே எழுதிவிடு வேன். அவ்வளவு அனுபவம் பெற்றுவிட்டேன்.

கடன் வாங்குவதில்லை என்று விரதம் கொண்டிருந்த தெல்லாம் மலையேறிப் போய்விட்டது. குழந்தைகளுக்கு நோய் வந்தபோது சும்மா இருக்க முடியுமா? நெய்யும் பாலும வாங்குவதை நிறுத்திக் கடன்படுவதைத் தடுத் தேன்; பழமும் தின்பண்டமும் வாங்குவதை நிறுத்திக் கடன் படுவதைத் தடுத்தேன்; ஆனல், மருந்து வாங்காமல் நிறுத்த முடியுமா? வைத்தியரை நாடாமல் இருக்க முடி யுமா? அந்தக் கல்மனம் இன்னும் வரவில்லை. இறந்து போன மூன்று குழந்தைகளைப் போல இவைகளையும் பலி கொடுக்க இப்போது மனம் வரவில்லை.

கடன் தொகை மெல்லமெல்லப் பெருகிவிட்டது. இப் போது என்மேல் பிறருக்கிருந்த நம்பிக்கையும் போய்விட் டது. சொத்தில்லாதவனுக்கு எவ்வளவுதான் கடன் கொடுப்பார்கள்? இப்போது யாரிடம் போய்க் கேட்டா லும், கடன் கொடுப்பது முயற்கொம்பாய் இருக்கிறது. என்னைவிடத் தகுதி குறைந்தவர்கள் உருட்டல் மருட்டல் களால் மேலான நிலைக்கு வரவும், பொய்யாலும் புரட்டா லும் பணம் திரட்டவும் காண்கின்றேன். கடவுளையும் அறத்தையும் நம்பிய நான், நாள்தோறும் நரகத்துயர் படு வதையும் ஒப்பிட்டுக் காண்கின்றேன். எத்தனை நாள் பொறுப்பேன்! இந்த உடலிலிருந்து உயிர் தானகப் பிரி யும் வரையிலும் பொறுத்தே தீர்வேன்!

என் கம்பெனியோ, என்னை வதைக்கும் கம்பெனி. எங்காவது பெட்டிக்கடை வைத்திருந்தாலும் முன்னுக்கு வந்திருப்பேன். நல்லொழுக்கம், நல்வழி என்று நம்பிக்

கடைசியில் இந்தக் கம்பெனியில் வந்து சேர்ந்தேன். அந்தத் தலைமைக் கணக்கருக்கோ, இன்னும் என்மேல் பகை தீரவில்லை; நல்லெண்ணம் பிறக்கவில்லை. காரணம் உனக்கு நினைவிருக்கும் என்று நம்புகிறேன். அதுதான் ஐந்து ஆண்டுகளுக்குமுன் நடந்த தேர்தல் காலத்தில் ஏற்பட்ட பகை. அவருடைய நண்பர் ஒரு கட்சியில் இருந்தாரே, அந்தக் கட்சிக்கு எதிர்க்கட்சி அல்லவா நம் நண்பர் ஆ. மு.? நான் உண்மையாகவே ஆ. மு. பக்கமாக எந்த உதவியும் செய்யவில்லை. தேர்தல் முடிகின்ற வரைக்கும் அவர் வீட்டுக்கும் அடிக்கடி போகவில்லை. அப்படி இருந்தும், யாரோ கோள் சொல்லி, அவர் என் நண்பர் என்ற காரணத்தால், தலைமைக் கணக்கர் என்மேல் காரம் வைத்துக்கொண்டார்.

அதன் பயனை இன்னும் அனுபவிக்கின்றேன். நான் இறந்தால்தான் அந்தப் பகை தீரும்போல இருக்கிறது. என் முகத்தைப் பார்க்கும்போதெல்லாம், அவர் கண் எதிரில் ஓட்டுப் பெட்டிகள் வந்துவிடுமோ, என்னவோ, தெரியவில்லை. அவர் பார்வை என்மீது படும்போது அவ்வளவு கடுமையாய் இருக்கிறது! பாழும் குடும்பத்திற்காக அந்தப் பகைவரிடத்தில் நான் அடங்கி வேலை செய்ய வேண்டி இருக்கிறது.

நான் ஏழை ஆக ஆக, கடன் படப்பட, கொஞ்சம் வருவாய் உள்ளவர்கள், நண்பர்களைப்போல இருந்தவர்கள் எல்லாம் மெல்ல மெல்ல என்னை விட்டு விலகுகின்றார்கள். என்னோடு பழகினாலும் கைப்பொருளுக்குக் கேடுதான் என்பதை அவர்கள் எப்படியோ தெரிந்துகொண்டார்கள்.

நீ மட்டும் என்ன காரணத்தாலோ என்னை மறவாமல் கடிதம் எழுதி வருகின்றாய். நீயும் என்னைப்போல அறத்தை நம்பி, அருளை நம்பி, அன்பை நம்பிப் பாழாய்ப் போகின்றவர்களுள் ஒருவனோ? அறம் உன்னைக் காப்பாற்றுவதாக! என்னை அழித்தாலும் கவலை இல்லை.

நீ நான் கேட்காமல் அனுப்பிய முப்பது ரூபாய்க்காக மிகவும் நன்றி பாராட்டுகிறேன். நீயும் என்னைப்போல் ஏழை. உன்னிடமிருந்து உதவி பெறுவதற்கு எனக்குத் தகுதியில்லை. தவிர, இந்தத் தொகையை நீ எந்த நகையை விற்று அனுப்பினாயோ, தெரியவில்லை. அவ்வாறு செய்ய வேண்டா. நீயும் என்னைப்போல மனைவியிடம் நகை காரணமாகப் போரும் பிணக்குமாய்த் தொல்லையில் அகப் பட்டுக்கொள்ள வேண்டா.

இந்த முப்பது ரூபாயை நான் எப்படியும் திருப்பித் தருவேன் என்று எதிர்பாராதே. நா நயமாய்ச் சொன்ன சொற்படி நடந்துகொண்ட அந்தக் காலம் இனி வராது. ஆகையால், மேலும் பணம் அனுப்பி உன்னையே ஏமாற்றிக் கொள்ளாதே. உண்மையைச் சொல்லுகின்றேன்; என்னை விற்றாலும் காலணா கிடைக்காது. என் மனைவி கழுத்திலோ, தாலி தவிர வேறு பித்தளையும் இல்லை.

என்னவோ எழுதினேன்; ஆறுதல் பெற வேண்டும் என்று எழுதினேன்; எழுதியும், ஆறுதல் இல்லை. என் வாழ்வைப் பற்றி உனக்குக் கவலை வேண்டா; மறந்து விடுக!

உன் அன்புள்ள

ஆ. க.

## 10. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.'

[டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், M. A.]

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே,' என முழங்கினர் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். 'ஒற்றுமையாக உழைத்திடுவோம்; நாட்டில் உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்,' என்றார் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. இறக்கும் தறுவாயில் இருந்த ஒரு முதியவர் தம் பிள்ளைகளை அழைத்து, விறகை ஒவ்வொன்ருகக் கொடுத்தும், கட்டாகக் கொடுத்தும் ஒடிக்குமாறு பணித்தார் என்றும், ஒன்றை ஒடித்த பிள்ளைகள் கட்டினை முறிக்கக் கூடாத காரணத்தை வைத்து, அவர்களுக்கு ஒற்றுமையுபதேசம் செய்தார் தந்தையார் என்றும் சொல்லப்படுகிற கதை நம்முள் பலர் அறிந்ததே. திருவள்ளுவரும் ஒற்றுமையின் அருமையை ஓர் உதாரண முகத்தான் விளக்கியுள்ளார்: ஒரு பெரிய வண்டி இருக்கிறது. அது வலிமை மிக்கதே. எனினும், மயிற்றோகையை நிரம்ப நிரம்ப வாரி வாரிப் போட்டுக் கொண்டேயிருந்தால், அவ்வண்டியும் தாங்காது அச்சு ஒடியும். தோகையோ, மிகவும் நொய்ம்மையானது. வண்டியின் அச்சோ, மிகவும் பருத்து வலிமையுடையதாய் உள்ளது. எனினும், மேலுமேலும் திரண்டுகூடித் தோகைகள் வருவதால், அச்சு இற்றுப் போகிறது. அதைப் போலவே நாம் எத்துணை வலியராயினும், நம் பகைவர் சேர்ந்துசேர்ந்து கூட்டமாக வருவாரேயாயின், நமது வலிமை பெரியதாயினும், பயனின்றிப்போம். நாமே ஒற்றுமை மிக்குப் பலரையும் நம்மோடு சேர்த்துக்கொள்ளுவோமாயின், வரும் பயன் மிகப்பெரிதன்றோ? இவற்றையெல்லாம் உணர்த்த எடுத்துக்கொண்ட வள்ளுவப் பெருந்தகையார், 'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்,' என்று வழங்கியருளினர்.

நம் சுற்றத்தாரேயன்றி, நம் ஏவல் செய்வார்தாமும் நம்மோடு இயைந்தவராய் இருத்தல் வேண்டும். நாமொன்று கருத, நம் வேலைக்காரர் பிறிதொன்று நினைத்துச் செய்து நமக்கு எள்ளல் வாங்கித் தருவாராயின், அவ்வேலைக்காரரால் நமக்கு உதவியுண்டாவதற்கு மாறாகப் பல சங்கடங்கள் வந்து சேரும். சங்கடங்கள் ஏற்படின், கவலையுண்டாவது உறுதி. கவலையேற்பட்டாலோ, கருமயிர் நரைத்தல் ஒரு தலை. எனவே, நல்ல வேலையாட்களும் நம்மோடு ஒற்றுமைப்பட்ட வேலையாட்களும் இல்லையேல், நாம் விரைவில் மூப்பு உற்றவர்போன்று தோற்றுவோம். இதன் உண்மை பழந்தமிழ்ப் பாடல் ஒன்றாலும் அறியப்படுகிறது; முன்னாளில் பிசிராந்தையார் என்ற புலவர் இருந்தார். அவருக்கு வயது பல ஆகியும் நரை தோன்றவில்லை. புலவர் சிலர் அவரை ஒருநாள் அதற்குக் காரணம் கேட்டனர். அவர் சொல்லிய காரணங்களுள் ஒன்று, 'யான் கண்டனையர் என் இளையரும்,' என்பது. அதன் கருத்து, 'நான் நினைக்கிறபடியே நினைத்து என்னுடைய ஏவல் செய்வாரும் என்னோடு இயைந்து செயல்களைப் புரிகின்றனர். என் இல்லத்திற் சண்டைத் தொல்லைகள் இல்லை,' என்பதாகும்.

இனி, குடும்பத்தாரிடையே பூசலும் கலாமும் விளையக் கூடிய சமயங்களில், புலவர் சிலர் ஒற்றுமை உபதேசஞ் செய்து தடுத்துள்ளனர் என்பதை அறிகிறோம். நலங்கிள்ளி என்னும் சோழனும் நெடுங்கிள்ளி என்னும் சோழனும் தாயத்தார்கள். அவருள் நலங்கிள்ளி மிக்க வீரம் வாய்ந்தவன்; சேர பாண்டிய அரசரை வென்று, அவர்தம் வஞ்சியென்னும் ஊரையும், மதுரையென்னும் ஊரையும் புலவர்க்கு வழங்கத்தக்க ஆற்றலுடையவன். அவன் ஒரு நாள் உறையூரை முற்றுகையிட்டான். உள்ளே பங்காளியாகிய நெடுங்கிள்ளி இருந்தான். பார்த்தார் ஒரு புலவர்; 'அழகிது!', என நினைத்தார்; நலங்கிள்ளியிடம், 'ஒன்றுபட்டால் வாழ்வுண்டு; இன்றேல், இருவர்க்கும் தாழ்வே,' என்று கூறி

ணர். இக்கருத்துப் பொதிந்த பாடல் புறநானூற்றிற் காணப் படுகிறது. அதன் போக்கு இது:

'அரச, நீ பொர நினைக்கும் அரசன் சேரனும் அல்லன்; பாண்டியனும் அல்லன்; சோழனே ஆவன். நீயும் சோழன்; அவனும் சோழன். நீயும் ஆத்திமாலை சூடியிருக் கிறாய்; அவனும் ஆத்திமாலை சூடியிருக்கிறான். அஃது ஒன்றே நீவிர் இருவீரும் ஒரு குடிப்பிறந்தீர் என்பதைக் காட்டுமே! நும் இருவீருள் எவர் தோற்றாலும், தோற்பது உம் குடியன்றோ? அவ்வசை வரலாமோ? நீவிர் இருவீரும் வெற்றிகொள்ள முடியாது என்பது வெளிப்படை. உமது குடிக்கு வரும் பழியை நீக்க வேண்டுமானால், இம்மாறு பாட்டை உடனே தவிர்க்க வேண்டாவோ? நீவிர் பொரு வீரானால், உம் பகைவரெல்லாம் உடம்பு பூரித்து உவகை எய்துவர். அவர் உவகை நுமது இளிவரல் அன்றோ? நீர் போர் குறித்து நிற்பது நும் குடிக்கு ஏற்றதன்று.'

நலங்கிள்ளி, 'குடிக்கு வடு உண்டாகும்,' என்பதைக் கேட்டவுடன் போர்க்கோலம் நீத்தான். நெடுங்கிள்ளியும் புலவர் மொழியைக் கேட்டு இகலை விட்டான். இங்ஙனம் ஒற்றுமைப்படுத்திய புலவரது பெயரை நாம் அறிய வேண்டாவோ? வேண்டினும் அவர் பெயரை அறியோம்; ஊரை அறிவோம். அவ்வூர்ப் பெயராலேயே அவர் இற்றை நாள் அறியப்படுகிறார். அவரை மறவாது இருப்போமாக! அவர் பெயரே கோவூர் கிழார் என்பது. கோவூர்கிழார் வாழ்க!

மற்றொரு புலவர் பாண்டியன் ஒருவனுக்கும் சோழன் ஒருவனுக்கும் அறவுரை பகர்ந்துள்ளார். அவர் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் எனப்படுவர். வெள்ளி யம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி என்னும் அப்பாண்டி யனையும், குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் என்னும் அச்சோழனையும் ஒருநாள் ஒருசேரக் கண்ட அப்

புலவர்க்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. உடனே அவர் பாடத் தொடங்கிவிட்டார்.

"பால் நிறக்கடவுளும், நீல நிறக்கடவுளும் உடன் இருப்பதுபோல உள்ள நீவிர் இருவீரும் இயைந்திருப்பது இனிது. அண்ணனும் தம்பியுமாகிய பலராமனும் கண்ணனும் ஒருங்கு இருப்பதுபோன்று உள்ளது உமது தோற்றம். இதனினுஞ் சிறந்த காட்சி பிறிதொன்று உண்டோ? நீவிர் இருவீரும் ஒருவர்க்கொருவர் உதவி புரிவீராக! நீவிர் இங்ஙனே ஒன்றுபட்டிருப்பின், கடல் சூழ்ந்த பேருலகு நும் கையகப்படுவது மெய்யேயாகும். இப்படி நீவிர் அன்பினால் இயைந்துள்ளதைக் காணும் சிலர் பொறாமைகொண்டும், நல்லன சொல்வார்போலச் சில சொல்லி நும்மைப் பிரிக்கப் பார்ப்பர். நான் வேண்டுவதெல்லாம் நீவிர் இன்று போலவே என்றும் இருக்கவேண்டும் என்பது. இருப்பீராயின், வெற்றியெல்லாம் நும் இருவர்க்கேயாம்; நும் கொடிகளே பிற நாடுகள் எங்கும் துலங்கும். பிரியன்மின்! பிரியன்மின்!"

மற்றுமொரு புலவர், சினந்த தந்தையை எதிர்த்த மக்களோடு ஒன்றுபடுத்தி வைத்தார் என்பது அறிகிறோம். அப்புலவர் பெயர் எயிற்றியனார் என்பது; ஊர் புல்லாற்றூர். கோப்பெருஞ்சோழன் என்னும் அரசன், உறையூரை ஆண்டுவரும் நாளில், ஒருநாள் அவனுடைய புதல்வர் இருவர் அவனோடு மாறுகொண்டனர். எதிர்த்து நின்ற அவரோடு பொரக் கருதி எழுந்தான் சோழ மன்னன். அப்பொழுது அருகே இருந்த பைந்தமிழ்ப் புலவர், 'விறல்கெழு வேந்தே,' என்று விளித்தவுடன், செவிசாய்த்து நின்றான் நிருபன். புலவர் உடனே தமது பொருளுரையைப் புகலத் தொடங்கினர். அதன் சாரம் வருமாறு:

"பற்பல அமருள் வென்று மேம்பட்ட வேந்தே, இப்பொழுது உன்னோடு எதிர்த்துவந்து நிற்பார் உன் பகைஞர்

அல்லரே ! நீயும் அவர்க்குப் பகைஞன் அல்லை. பகைஞரைக் கொல்லும் களிற்றையுடைய தலைவ, நீ புகழை இவ்வுலகில் எய்தி, உயர்ந்த உலகை அடைந்த பிறகு, உன் புதல்வர்க் குத்தானே உன் அரசு உரித்தாகும்! இதனை நீயே அறிவையே !''

இப்பொருளுரையைக் கேட்டும், அரசன் ஓர் அடி எடுத்து வைப்பதுபோலத் தோன்றிற்று அப்புலவருக்கு. 'இன்னும் கேட்பாயாக; இசையில் விருப்பமுடையோய், பெரிதும் கேட்பாயாக; புகழில் இச்சையுடையோய்,' என்பன போன்ற மொழிகளைச் சமயமறிந்து சொல்லி, அவர் மேலும் சொல்லலுற்றார் :

"உன் புதல்வர் ஆலோசனையின்றி, அறிவு குன்றி, எதிர்ப்பட்டுள்ளனர். நீ தோற்றுப்போனால், உன் செல்வத்தைப் பின்னர் அவருக்கு அல்லாமல் வேறு எவருக்குக் கொடுக்கப் போகிறாய்? போரினை விரும்புகின்ற செல்வ, ஒருகால் நீ அவர்க்குத் தோற்றால், உன் பகைவர் எல்லாரும் உன்னை இகழ்ந்து மகிழ்வர். நீ உலகில் பழியையே விட்டுச் செல்லவேண்டி இருக்கும். நான் உன் ஆற்றலில் ஐயமுள்ளேன் என்பதன்று; அவ்வாற்றலை இவரிடம் காட்ட வேண்டா என்பதே என்னுடைய வேண்டுகோள். உன்னுடைய வீரம் உன்னைவிட்டு இப்பொழுது நீங்கியிருக்கட்டும். உன்னுடைய ஊக்கம் பிறவற்றிற் செல்லட்டும். நல்வினைகள் பல செய்வாயாக. வாழிய அரசே !''

நயம்பட உரைக்கப்பட்ட இவ்வுரையையும் மறுத்துப் புதல்வரோடு பொருவதற்கு அரசன் மனம் இயைந்திருக்குமோ? புலவர் உரைக்குங்காலே, வேம்பும் கரும்பும் போல இடையிடையே கடுஞ்சொல்லும் புகழ்மொழியும் பெய்து உரைத்த நயம் வியக்கற்பாற்று. அவர் அழைக்கும் போதே, அவன் பெருமையையும் வீரத்தையும், வென்றியையும் உரைத்து அழைத்தார்; இடையிடை அவன் ஆற்றலின்

சிறப்பைக் குறிக்கும் சொற்களைக் கூறினர்; 'உனக்குத் தெரியாததன்று,' என்று சொன்னர். புகழ்விருப்பம் உள்ள அவன் பழிதரும் செயல் புரியலாகாது என்பதை வற்புறுத்தினர்; புதல்வரை வெறுத்துரைப்பார்போன்று சில சொல் சொன்னர். இவையெல்லாவற்றிலும் மிக்கதாக, 'அமரில் விருப்பமுள்ள செல்வ,' என்றும், 'உன் வீரம் இப்பொழுது உன்னைவிட்டு இருக்கட்டும்,' என்றும் அவர் மொழிந்த மொழிகளின் சிறப்பைக் கண்டு நாம் மகிழாதிருக்க முடியாது. ஓர் அரசன்முன் நின்று, 'நீ உன் புதல்வர்க்குத் தோற்றுல்' என்ற கூற்றைக் கூறுவது எளிதன்று. அரசன் வெகுளாதிருக்கும்பொருட்டும், வெகுண்டு புதல்வரையே அழித்து விடாதிருக்கும்பொருட்டும், எழுச்சியைத் தடுக்கும் பொருட்டும் அன்றே அத்தண்டமிழ்ப் புலவர்,

"அமர்வெஞ் செல்வ! நீயவர்க்கு உலையின்
இகழுநர் உவப்பப் பழியெஞ் சுவையே;
அதனல், ஒழிகதில் அத்தைநின் மறனே."

என இருமருங்கும் சர்க்கரையைக் கூட்டி, இடையே கடுக்காய்த்தூளை வைத்தார். இங்ஙனமெல்லாம் நன்மருந்து தரவல்ல நாவலர் பலர் வாழ்ந்த நாடு நம் நாடு. அவர்தம் ஊர் பேர் உபதேசங்களை மறந்துள்ள நாம் இனியாவது விழித்துக் காண்போமாக. அவர்தம் பொன்னுரைகளை அறிந்து வாழ்வம் ஒன்றுகவே!

## 11. சர்வதேசக் கோர்ட்டு*

[திரு. வே. சாமிநாத சர்மா அவர்கள்]

ஒரு தேசத்திற்கும் மற்ெருரு தேசத்திற்கும் சட்ட சம்பந்தமான தகராறு ஏற்படுமானல், அதனைத் தீர்த்து வைக்க ஒரு நீதிஸ்தலம் தேவையல்லவா? இதற்காக ஒரு நீதிஸ்தலம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இஃது ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் ஓர் அங்கமாயுள்ளது. இதற்குச் 'சர்வதேசக் கோர்ட்டு' என்பது பெயர். இதன் நிரந்தரத் தலைமை ஸ்தானம் ஹாலந்து தேசத்திலுள்ள ஹேகு நகரம்.

இந்தச் சர்வதேசக் கோர்ட்டு, அடியோடு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனமென்று சொல்ல முடியாது. மேற்படி ஹேகு நகரத்தில் 1899-ஆம் வருஷத்திலும், 1907-ஆம் வருஷத்திலும் நடைபெற்ற சர்வதேச மகாநாடுகளின் விளைவாகச் சர்வதேச மத்தியஸ்தக் கோர்ட்டு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கென்று சில சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டன. இதற்குப் பிறகு முதல் உலக மகாயுத்தத்தின் இறுதியில் தோன்றிய சர்வதேச சங்கத்தின் சார்பாக ஒரு சர்வதேச நிரந்தரக் கோர்ட்டு ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கென்று சில சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டன. இவ்விரண்டு கோர்ட்டுகளையும் அஸ்திவாரமாகக் கொண்டு, இவைகளின் தொடர்ச்சியாக இந்த ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் சர்வதேசக் கோர்ட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஐக்கிய தேச சாசனத்தைப்போல இதற்கென்று தனியாகச் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டுப் பல நாட்டினராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டதிட்டங்கள் மேலே சொன்ன இரண்டு கோர்ட்டுகளின் சட்டதிட்டங்களை அனுசரித்தாற்போலவே இருக்கின்றன.

இந்தச் சர்வதேசக் கோர்ட்டில் மொத்தம் பதினைந்து பேர் நீதிபதிகள். உலகத்திலேயே மிகச் சிறந்த சட்ட நிபு

*இஃது 'ஆசியாவும் உலக சமாதானமும்' என்னும் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

ணர்களாகவும் சில புருஷர்களாகவும் இருப்பவர்களே இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுகிறார்கள். ஒரே நாட்டைச் சேர்ந்த இரண்டு பேர் இதில் நீதிபதிகளாயிருத்தல் கூடாது.

இந்த நீதிபதிகள் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்கள்? சர்வதேசக் கோர்ட்டின் சட்டதிட்டங்களை அங்கீகரித்துக் கொண்டிருக்கிற நாடுகளிலுள்ள முக்கிய இனத்தினர் நீதிபதி ஸ்தானத்திற்குத் தகுதியுடையவர்கள் என்று தாங்கள் கருதுகின்ற நபர்களடங்கிய ஒரு ஜாபிதாவை ஸ்தாபனத்தின் காரியாலயத்திற்கு அனுப்புவார்கள். ஸ்தாபனத்தின் பொதுக் காரியதரிசியாரானவர், இந்த ஜாபிதாக்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, அகர வரிசையில் புதிய ஒரு ஜாபிதா தயாரித்து, அந்த ஜாபிதாவில் இரண்டு பிரதிகள் எடுத்து, ஒன்றை ஜெனரல் அஸெம்பிளிக்கும், மற்றொன்றைப் பாதுகாப்புக் கவுன்சிலுக்கும் அனுப்புவார். இந்த ஜாபிதாவிலிருந்து பதினைந்துபேரைத் தெரிந்தெடுப்பதற்காக இரண்டு சபைகளும்—அதாவது அஸெம்பிளியும் கவுன்சிலும்—ஒரே சமயத்தில் தனித்தனியாகக் கூடும். இரண்டு கூட்டங்களிலும் அதிகமான ஓட்டுகள் பெறுகிறவர்கள் நீதிபதிகளாகத் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். இதற்குப் பிறகு சில ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்படாமல் காலியாயிருக்குமானால், அவைகளுக்காக மறுபடியும் இரண்டாந்தடவை, அவசியமானால், மூன்றாந்தடவையும் மேற்கண்ட மாதிரி கூட்டங்கள் கூடி, காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்யும். மூன்றாவது கூட்டத்திற்குப் பிறகும் இரண்டொரு ஸ்தானங்கள் காலியிருக்குமானால், ஜெனரல் அஸெம்பிளியிலிருந்து மூன்று அங்கத்தினர்கள் சேர்ந்து ஒரு கூட்டு மகாநாடு நடத்துவார்கள். அதில் பெரும்பான்மையான ஓட்டுகளின் மூலம் மிகுதி ஸ்தானங்களையும் பூர்த்தி செய்வார்கள். நீதிபதிகளைத் தெரிந்தெடுக்கிற முறை பொதுவாகச் சிக்கலாயிருந்தாலும், சிறந்த ஆட்கள் மேற்படி ஸ்தானங்களில் அமரவேண்டுமென்பதற்காகவும்

உலகத்திலுள்ள முக்கியமான நாகரிகங்களும் சட்டமுறைகளும் பிரதிநிதித்துவம் பெறவேண்டும் என்பதற்காகவும், இந்த வடிகட்டுகிற முறை கையாளப்படுகிறது.

நீதிபதிகளின் உத்தியோக காலம் ஒன்பது வருஷம். ஆனல், முதன்முதலாக நடைபெறும் தேர்தலில் ஓர் ஐந்து பேர் மூன்று வருஷ காலத்திற்கும், மற்றோர் ஐந்து பேர் ஆறு வருஷ காலத்திற்கும், இன்னோர் ஐந்து பேர் ஒன்பது வருஷ காலத்திற்குமாகத் தெரிந்தெடுக்கப்படுவர். மொத்தம் பதினைந்து பேருள் எந்த ஐந்து பேர் மூன்று வருஷத்திற்கும் ஆறு வருஷத்திற்கும் முறையே தெரிந்தெடுக்கப்படவேண்டும் என்பதை நிர்ணயம் செய்துகொள்வதற்காகச் சீட்டுக்கள் குலுக்கிப் போடப்படும்.

ஒரு நீதிபதியினுடைய உத்தியோக காலம் முடிந்தவுடன் அவர் தமது பதவியிலிருந்து விலகிவிடக்கூடாது; வேறொருவர் வந்து அந்தப் பதவியை ஏற்றுக்கொண்ட பிறகுதான் அவர் விலகவேண்டும். அப்படி விலகினலும், தாம் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட வழக்கை ஒருவகையாக முடித்துக்கொடுக்கவேண்டும். உத்தியோக காலம் முடிவடைகிற காரணத்தினலோ, வேறு காரணங்களினலோ, சில ஸ்தானங்கள் காலியாகுமானல், அந்த ஸ்தானங்களைப் பூர்த்தி செய்வதற்கு முதன்முறையாக நீதிபதிகள் தெரிந்தெடுக்கப்படுகிறபோது எவ்வெம் முறைகள் கையாளப்பட்டனவோ, அவ்வம் முறைகளை அனுஷ்டித்தே அந்த ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

நீதிபதிகளாக நியமிக்கப்படுகின்றவர்கள் தங்கள் உத்தியோக காலத்தில் எந்த விதமான அரசியல் விவகாரங்களிலும் தலையிடக்கூடாது; எந்த விதமான நிருவாக அதிகாரத்தையும் மேற்கொள்ளக்கூடாது; எந்த விதமான வழக்கிலும் வக்கீலாக ஆஜராகக் கூடாது.

பதினைந்து நீதிபதிகளும் தெரிந்தெடுக்கப்பட்ட பிறகு இவர்கள் ஒன்று கூடித் தங்களுள் ஒருவரைத் தலைவராக வும், இன்னொருவரை உபதலைவராகவும் தெரிந்தெடுத்துக் கொள்வார்கள்; இன்னும் கோர்ட்டுச் சம்பந்தமான நிரு வாகத்தைக் கவனித்துக்கொள்ளத் தேவையான உத்தியோ கஸ்தர்களையும் நியமித்துக்கொள்வார்கள். தலைவர், உப தலைவர் ஆகிய இருவரும் மூன்று வருஷத்திற்கு மட்டுமே அந்தப் பதவிகளை வகிக்கலாம். இத்தற்குப் பிறகு அந்தப் பதவிகளுக்கு மறுபடியும் தேர்தல் நடைபெறும்.

ஒவ்வொரு நீதிபதியும் வருஷத்திற்கு இருபத்தோரா யிரம் டாலர் விகிதம் சம்பளம் பெறுவர். தலைவர்மட்டும் இந்தச் சம்பளத்தோடு, விசேஷ படிச் செலவென்று ஒரு தொகையை அதிகமாகப் பெறுவார். விசேஷ சந்தர்ப்பங் களிலே மட்டும் தலைவர் ஸ்தானத்தில் உபதலைவர் அமர்ந்து வேலைபார்க்க நேரிடுமாயின், அப்படிப் பார்த்த ஒவ்வொரு நாளுக்கும் தலைவரைப்போல் அவருக்கும் படிச்செலவு கொடுக்கப்பெறும். கோர்ட்டு நடைபெறுவதற்கான சகல செலவுகளும் ஐக்கிய தேச ஸ்தாபனத்தைச் சேர்ந்தவை. இதற்கென்று எவ்வளவு தொகை ஒதுக்கப்பட வேண்டு மென்பதை ஜெனரல் அஸெம்பிளி நிர்ணயிக்கும்.

கோர்ட்டின் நிரந்தரத் தலைமை ஸ்தானம் ஹேகு நகர மாகவே இருக்கும். ஆனால், கோர்ட்டார் அவசியமென்று கருதினால், வேறு இடங்களிலும் கூடி வழக்குகளை விசாரணை செய்யலாம்.

ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் சட்ட சம்பந்த மாக ஏற்படும் விவகாரத்தை விசாரணைசெய்து தீர்ப்புச் சொல்வதற்குத்தான் இந்தச் சர்வ தேசக் கோர்ட்டே தவிர, தனிப்பட்ட ஆட்களுடைய வழக்குகளை விசாரணை செய்வதற்காக அன்று. அதாவது, கோர்ட்டின்முன்னர் ஆஜராக வேண்டுவன தேசங்களே தவிர, தனிப்பட்டவர்

அல்லர். தேசங்களென்பதற்குத் தேசங்களின் பிரதிநிதிகளென்பதே அர்த்தமென்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை அல்லவா?

தங்கள் முன்னர் விசாரணைக்கு வரும் வழக்குச் சம்பந்தமான தகவல்களை எந்தச் சர்வதேச அரசாங்க ஸ்தாபனங்களிலிருந்தேனும் வரவழைத்துப் பரிசீலனை செய்யக் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

சர்வதேசக் கோர்ட்டின் சட்டதிட்டங்களை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நாடுகள் மட்டுமே தங்கள் வழக்குகளைத் தாக்கல் செய்து தீர்ப்புக் கோரலாம். மேற்படி சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்ளாத நாடுகள் பாதுகாப்புக் கவுன்சில் விதிக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டுத் தங்கள் வழக்குகளைத் தாக்கல் செய்து தீர்ப்புக் கோரலாம். மேற்படி சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்ளாத நாடுகள் என்ற காரணத்தினால், அவை எந்த விதத்திலும் வித்தியாசமாக நடத்தப்பட மாட்டா.

சர்வதேசக் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒரு வழக்கிலேனும், ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் அங்கம் வகியாத ஒரு நாடு வாதியாகவோ பிரதிவாதியாகவோ சம்பந்தப்பட்டிருக்குமானால், அந்த நாடு மேற்படி கோர்ட்டு நிர்ணயிக்கிற ஒரு செலவுத் தொகையைக் கொடுத்துவிட வேண்டும்.

கோர்ட்டு எந்த வழக்கில் தீர்ப்புச் சொல்லுகிறதோ, அந்தத் தீர்ப்பு அந்த வழக்குச் சம்பந்தப்பட்ட இருதரப்பினரையும் கட்டுப்படுத்தும். அப்படி எந்த ஒரு தரப்பு நாடேனும் கட்டுப்படச் சம்மதியாதுபோல இருந்தால், அதன்மீது பாதுகாப்புக் கவுன்சில் உசிதமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்.

கோர்ட்டுச் செய்கிற தீர்ப்புக்கு அப்பீல் இல்லை. கோர்ட்டு அளிக்கிற தீர்ப்பில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்

டால், அதை நிவர்த்திக்கும்படி ஒரு தரப்பினரோ, இரண்டு தரப்பினருமோ, கோர்ட்டைக் கேட்கலாம். ஆனால், இந்தச் சந்தேக நிவர்த்திக் கோரிக்கை, சந்தேகத்திற்குக் காரண மான விஷயம் கண்டு பிடிக்கப்பட்ட ஆறு மாதத்திற்குள் தெரிவித்துக்கொள்ளப்பட வேண்டும். எப்படியும் தீர்ப்புச் சொன்ன பத்து வருஷத்திற்குப் பிறகு சந்தேக நிவர்த்தி சம்பந்தமான எந்தக் கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தேசங்களுக்குள் ஏற்பட்டிருக்கிற உடன்படிக்கை களைப்பற்றிய வியாக்கியானம், சர்வதேச சட்டங்களைப்பற் றிய வியாக்கியானம், சர்வதேசங்களுக்கும் உள்ள பொது வான சில பொறுப்புக்களைப்பற்றிய வியாக்கியானம், முதலிய சர்வதேசப் பொதுவான விவகாரங்கள் ஆகியவற் றையே இந்தச் சர்வதேசக் கோர்ட்டு விசாரிக்கும்.

குறிப்பிட்ட ஒரு வழக்கை விசாரிக்கக் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டா என்பதைப் பற்றித் தகராறு ஏற்படு மானல், அது விஷயத்தில் கோர்ட்டுச் சொல்லும் தீர்ப்பே முடிவானது.

ஜெனரல் அஸெம்பிளியோ, பாதுகாப்புக் கவுன் சிலோ, ஜெனரல் அஸெம்பிளியின் அதிகாரம் பெற்ற விசேஷ ஸ்தாபனங்களோ தங்கள் தங்கள் வரம்புக்குட் பட்ட, சட்ட சம்பந்தமான எந்த ஒரு விவகாரத்தையும் சர்வ தேசக் கோர்ட்டு முன்னர்க் கொண்டுவந்து அதனைப் பரி சீலனை செய்து அபிப்பிராயம் சொல்லுமாறு கேட்கலாம்.

கோர்ட்டு நடவடிக்கைகள் யாவும் இங்கிலீஷ் பாஷை யிலோ, பிரெஞ்சு பாஷையிலோ நடைபெறும். வழக்குச் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் இங்கிலீஷ் பாஷையி லேயே வழக்கை நடத்த வேண்டுமென்று கோரினல், அப் படியே நடத்தித் தீர்ப்பையும் அதே பாஷையில் நீதிபதிகள் சொல்ல வேண்டும். பிரெஞ்சு பாஷைக்கும் இதேமாதிரி

தான். இரு தரப்பினருள் எந்த ஒரு தரப்பினருடைய வேண்டுகோளின் பேரிலும், இங்கிலீஷையும் பிரெஞ்சையும் தவிர்த்து வேறெந்தப் பாஷையிலாவது அந்தத் தரப்பினரை வாதம் நடத்துவதற்குக் கோர்ட்டார் அனுமதிக்கலாம்.

## 12. நோபெல் பரிசு பெற்ற அறிஞர்

[பேராசிரியர் திரு. P. இராமநாதன் அவர்கள், எம்.ஏ.]

### நோபெல் வரலாறு

இளமைப் பருவம்

ஆல்பிரட் நோபெல் என்பவர் ஸ்வீடன் தேசத்தவர்; எளிய பெற்றோருக்கு 1833-இல் மூன்றாம் பிள்ளையாகப் பிறந்தவர்; பிழைப்புத் தேடி நாடு நாடாக அலைந்த பெற்றோருடன் அலைந்து ஆரம்பக் கல்வியைக் கற்றவர். அவர் தந்தையாரான 'இம்மான்யுவல் நோபெல்' என்பவர் வெடிமருந்துசெய்யும் வகையைக் கண்டறிந்தார்; அவரை இரஷ்ய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலைக்கு இம்மான்யுவல் சர்வாதிகாரி ஆனார். அதுமுதல் அவரது வறுமைப்பிணி சிறிது சிறிதாக மறைந்தது. தந்தையார் கட்டளைப்படி ஆல்பிரட் பல நாடுகட்குச் சென்றார்; அங்கு வெடிமருந்துகளைத் தயாரித்த—ஆராய்ந்த அறிஞர்களிடம் பயிற்சி பெற்றார். அவர் இரஷ்யா திரும்பி வருவதற்குள் இரஷ்யப் போர் நின்று விட்டது; அதனால் வெடிமருந்துத் தொழிற்சாலை மூடப்பட்டது. ஆயினும், ஆல்பிரட் மனக்கவலை கொள்ளவில்லை. அவர் முயன்று ஆராய்ந்து 'நைட்ரோ கிளிசரின்' என்னும் பொருளை வெடிமருந்தில் பயன்படுத்தும் தனி முறையைக் கண்டு பிடித்தார்; அதனைச் செய்ய முழு உரிமையையும் அரசாங்கத்தினிடமிருந்து பெற்றார்; இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளில் பொருள் உதவி பெற்று, 'நைட்ரோ கிளிசரின் கம்பெனி'யை உண்டாக்கினார். போர் எங்கும் பரவி இருந்ததால் கம்பெனிக்குப் பொருள் வருவாய் பெருகியது.

ஆல்பிரட் மேன்மேலும் முயன்று புதிய புதிய வெடிமருந்துகளைக் கண்டறிந்தார்; அவரது உழைப்பின் பயனாகப் பத்துத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்காட்லந்து, ஆப்பிரிக்கா முதலிய பல நாடுகளில் வெடி மருந்துக் கம்பெனிகள் நிறுவப்பட்டன. இவற்றிலிருந்து ஆண்டில் இலக்ஷக் கணக்கான பவுன்கள் இலாபம் கிடைத்தன. சில ஆண்டுகட்குள் ஆல்பிரட் கோடீசுவரர் ஆனார்.

### கொடையாளி

ஆல்பிரட் சிறந்த வள்ளலாய் விளங்கினார்; ஆண்டு தோறும் பல்லாயிரம் பவுன்களைப் பிறர்க்குக் கொடுத்து மகிழ்ந்துவந்தார்; ஆண்டுக்கு இலக்ஷம் பவுன்களுக்கு மேல் வருமானத்தை உண்டாக்கும் தமது சொத்தை உலகிற்குப் பயன்படுத்த விழைந்தார்; தமது சொத்தில் ஐந்தில் ஒரு பகுதியை வைத்தியசாலைகட்கும் உற்றார் உறவினர்க்கும் பிரித்து வைத்தார். எஞ்சிய பகுதிகளின் வருட வருமானம் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் (1) இலக்கியம், (2) பௌதிகம், (3) இரசாயனம், (4) மருத்துவம், (5) சமாதானம் என்னும் துறைகளில், முன் வருடத்தில் சிறந்த தொண்டாற்றியவர்களுக்குப் பரிசாக அளிக்கப்படவேண்டும் என்பது அவரது விருப்பம் (will)

### நோபெல் பரிசு

இந்த ஐந்துவகைப் பரிசுகட்குமே 'நோபெல் பரிசு' என்பது பெயர். இதனை ஆண்டுதோறும் 'பெறத் தக்கவர் இன்னவர்' என்பதை முடிவு செய்ய ஸ்டாக்ஹோமில் (நார்வே) இருக்கும் இலக்கிய-பௌதிக-இரசாயன-மருத்துவக் கழகங்கட்கே உரிமை உண்டு. சமாதானப் பரிசினை அளிக்க நாட்டாளும் மன்றத்திலிருந்து அவ்வப்போது தேர்ந்தெடுக்கப்படும் ஐவர் குழுவிற்கே உரிமையுண்டு. இக் கழகங்களும் குழுவும் 'இந்த ஆண்டில் பரிசு பெறத் தக்க

வர் இல்லை' என்று முடிவு செய்யின், பரிசுத்தொகை முதலுடன் சேர்ந்துவிடும். ஜாதி-நிற-மொழி வேறுபாடுகள் இன்றி ஆண்டுதோறும் இப்பரிசுகள் பல நாட்டு அறிஞர்க்கு வழங்கப்பட்டு வருகின்றன. இப்பரிசினைப் பெறுபவர் எவராயினும் சரி, அவர் உலக அறிஞர் மதிப்புக்கு உரியவர் ஆவர் என்பதில் ஐயமுண்டோ? இப்பெறுதற்கரிய பெரும் பரிசினைப் பெற்று, உலக அறிஞர் மதிப்புக்கு உரியவரானவரே நம் தமிழ் நாட்டுப் பௌதிக ஆராய்ச்சி நிபுணராகவுள்ள சர். சந்திரசேகர வேங்கடராமன் என்பவர்.

## இராமன் வரலாறு

### இளமைப் பருவம்

இராமன், சந்திரசேகர அய்யர் என்ற பௌதிகப் பேராசிரியர் குமாரர் ஆவர். இவர் கி. பி. 1888-இல் திருச்சிராப்பள்ளியில் பிறந்தவர்; இளமை முதலே பௌதிகத்திலும் கணிதத்திலும் விருப்பமும் ஊக்கமும் காட்டிவந்தார். இவர் தமது பதின்மூன்றாம் ஆண்டிலேயே எப். ஏ. (F. A.) தேர்வில் தேறிச் சென்னை மாகாணக் கல்லூரியில் பி. ஏ. (B.A.) வகுப்பிற் சேர்ந்தார்; ஆசிரியர்கள் உள்ளம் கவர்ந்த மாணவராக விளங்கிப் பி. ஏ. தேர்வில் முதல்வராகத் தேர்ச்சி பெற்றார்; பின்னர் எம். ஏ. (M.A) வகுப்பிற் சேர்ந்து பயின்றார். எம். ஏ. வகுப்பு மாணவர் ஆராய்ச்சி புரிய வசதி உண்டு. ஆதலின், இராமன் பௌதிகத் துறையில் தனி ஆராய்ச்சிகளை நடத்திவந்தார்.

### ஆராய்ச்சி மாணவர்

எம். ஏ. வகுப்பில் இராமனுடன் படித்து வந்தவருள் அப்பா ராவ் என்பவர் ஒருவர். அவர் ஒரு நாள் தமது சோதனைப் பயிற்சி[1]யில் ஒரு தவறு கண்டார். அத்தவறு, ஒலியின் ஒரு பிரிவைப் பற்றியதாகும். உடனே அந் நண்பர் தம் பௌதிக ஆசிரியரான ஜோன்ஸ் துரையிடம்

1. Experiment.

சென்று 'எனது சோதனையில் இத்தவறு ஏற்படக் காரணம் என்ன? அஃது ஏற்படாமல் இருக்க யாது செய்ய வேண்டும்?' என்று கேட்டார். ஆசிரியர் விடையளிக்க வில்லை. உடனே இராமன், அப்பா ராவின் ஐயத்தைப் போக்கினார்; அத் 'தவறு' இனி ஏற்படாதிருக்கப் புதிய சோதனை அமைப்பு ஒன்றை நிறுவினார்; தமது புதிய முறை சிறந்ததுதான் என்பதைப் பன்முறை சோதித்து உணர்ந்தார்; பின்னர்த் தம் ஆராய்ச்சி முடிபுகளை ஒருங்கு படுத்திக் கட்டுரையாக வரைந்து ஆசிரியரிடம் காட்டிப் 'பிழை திருத்தித் தருக' என்று வேண்டினார். அக்கட்டுரை மூன்று மாதம்வரை ஆசிரியரிடமே இருந்தது. ஆசிரியரும் பிழை திருத்தவில்லை. ஆயினும், இராமன் அதனை ஒருவாறு அவரிடமிருந்து பெற்று, இலண்டனில் உள்ள விஞ்ஞானப் பத்திரிகைக்கு அனுப்பினார். அப்பத்திரிகையில் அக் கட்டுரை அழகாக வெளிப்படுத்தப்பட்டது. இராமனது ஆராய்ச்சி அறிவைப் பாராட்டிய ஜோன்ஸ் துரை, அவரை மேற்படிப்புக்காக இங்கிலாந்திற்கு அனுப்ப விரும்பினார். ஆயின், 'மேனாடுகளில் இருத்தற்குரிய உடல்நிலை இவரிடம் இல்லை' என்று மருத்துவநிபுணர்கள் கருதியதால், இராமன் இங்கிலாந்து செல்ல முடியவில்லை. இதற்கிடையில் இராமன் எம். ஏ. தேர்விலும் முதல்வராகத் தேர்ச்சி பெற்றார்.

அரசாங்க அலுவல்

இராமன் தொழில் முறைக்கேற்ற கணக்கு வழக்குகள் தொடர்பான எப். ஸி. எஸ். என்னும் தேர்விலும்—இந்தியா முழுவதும் தேர்வு எழுதியவருள்— முதல்வராகத் தேறினார்; தமது பத்தொன்பதாம் வயதில் (1907-இல்) கல்கத்தாவில் டிப்டி அக்கவுன்டென்ட் ஜெனரல் பதவியில் அமர்ந்தார். அரசாங்க அலுவலில் இருந்த இராமனது உள்ளம் பௌதிக ஆராய்ச்சியிலேயே சென்றது. அஃது இயற்கை தானே! இவர் கல்கத்தாவில் இருந்த 'இந்திய விஞ்ஞான வளர்ச்சிச் சங்க' உறுப்பினர் ஆயினர்; நாளடைவில் கல்

கத்தாப் பல்கலைக் கழகத் துணைத் தலைவரான சர். அஷு டோஷ் முகர்ஜி முதலிய பேரறிஞர் நட்புக்கு உரியவர் ஆயினர். இராமன் 1910-வரை அப்பெருமக்களுடன் பழகினர்; பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டார்.

இராமன் 1910-இல் இரங்கூனுக்கு மாற்றப்பட்டார்; பிறகு நாகபுரிக்கு மாற்றம் கிடைத்தது; இறுதியில் அக்கவுன்டென்ட் ஜெனரலாக மீண்டும் கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டார். அப்பொழுது இவர் கொண்ட மகிழ்ச்சியை அளவிட முடியாது. இராமன் மிகுந்த ஆவலோடு ஆராய்ச்சிச் சங்கத்தில் சேர்ந்து மீட்டும் வேலை செய்துவந்தார்.

பேராசிரியர் ஆதல்

1914-இல் இந்திய விஞ்ஞான வளர்ச்சிச் சங்கம், பலர் பொருள் உதவியால் விரிவுற்றது; 'விஞ்ஞானக் கல்லூரி'யும் ஏற்பட்டது. இராமன் அக்கல்லூரியில் பௌதிகப் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். அன்றே இவர் வகித்து வந்த அரசாங்க உயர் பதவி இவரை விட்டு விலகியது. இராமன் சிக்கலான உண்மைகளையும் மாணவர் எளிதில் அறிந்துகொள்ளுமாறு செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்; ஆராய்ச்சி மாணவர்களிடம் அன்பும் ஆதரவும் காட்டி, அவர்க்கு ஆராய்ச்சியில் மன எழுச்சி உண்டாக்குபவர்.

பெயரும் புகழும்

1. 1921-இல் கல்கத்தாப் பல்கலைக் கழகம் இராமனுக்குப் 'பேராசிரியர்' பட்டத்தை அளித்தது.

2. இலண்டனில் உள்ள இராயல் கழகம் 1924-ஆம் ஆண்டில் இவரைக் கௌரவ உறுப்பினராக ஏற்றுக் கொண்டது.

3. மேனாட்டு விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகங்கள் பல இராமனைத் தத்தம் நாடு போந்து சொற்பொழிவு ஆற்றுமாறு அழைப்புகள் விடுத்தன. இராமன் அவற்றை ஏற்று,

1924-இல் இந்தியாவைவிட்டுப் புறப்பட்டார்; இங்கிலாந்து சென்றார்; பிறகு கனடாவை அடைந்தார். இராமன் கனடாவில் செய்த பௌதிக ஆராய்ச்சிச் சொற்பொழிவு களைக் கேட்டு அமெரிக்க நாட்டு அறிஞர் பாராட்டினர். அவர்களுட் புகழ்பெற்ற 'இராபர்ட் ஆண்ட்ரூ மில்லிகன்' என்பவர் பாராட்டுக்கு இராமன் உரியவரானதே குறிப் பிடத் தக்கதாகும். அயின்ஸ்டீன் போன்ற அழியாப் புகழ்பெற்ற அறிஞரே பேசத் தக்க மில்லிகன் ஆராய்ச்சிக் கழகத்தில் இராமனைப் பேசுமாறு மில்லிகனே வேண்டினர் எனின், நம் இராமனது ஆராய்ச்சித் திறனை என்னென்பது!

4. பின்னர் இராமன் அமெரிக்க ஐக்கிய நாடுகள், நார்வே, ஸ்வீடன், ஜெர்மனி, டென்மார்க், பிரான்ஸ், இத்தாலி முதலிய நாடுகட்குச் சென்றார்; ஆங்காங்கு நடந்த விஞ்ஞானப் புலவர் மகாநாடுகளில் கலந்துகொண்டார். அங்கு நடைபெற்ற வாதங்களில் பங்கு எடுத்துக்கொண்டு பெயர் பெற்றார்; ஐரோப்பிய ஆராய்ச்சிப் புலவர் நன் மதிப்பைப் பெற்றார். அவருட் சிறந்தவர் மைக்கேல்சன், ஸீமன்[2], பாப்ரே[3] முதலியோர் ஆவர். இவர் அனைவரும் நோபெல் பரிசு பெற்ற பெருமக்கள். இவர்களுடைய பழக்கமும் இவர்கள் இராமனது நுண்ணறிவைப் பாராட்டும் வாய்ப்பும் கிடைத்தமை இராமனுக்குப் புகழை உண்டாக் கின. இவர் 1929-இல் 'சர்' பட்டம் அளிக்கப்பெற்றார்.

இராமன் விளைவு[4]

இஃது இராமன் கண்டறிந்த புதுமை: "நீருக்கு இயற் கையில் நிறமில்லை. ஆயின், சூரிய ஒளி நீரில் பாயும் பொழுது, அந்நீர் குறித்த ஒரு நிறத்தை அடைகின்றது. இந்நிறம் ஒளிச்சிதறலால் உண்டாகின்றது. நீரில் உள்ள 'கூட்டு அணுக்கள்'[5] கதிரவன் ஒளியைச் சிதறச் செய் கின்றன; செய்து, ஒரு குறித்த நிறத்தை மட்டும் அப் பொழுது ஏற்கின்றன" என்ற உண்மையைக் கண்டறிந்த

2 Zeeman 3 Fabray 4 Raman Effect 5. Molecules

இராமன், 'ஒளிச்சிதறல்' என்பதைப் பற்றித் தீவிரமாக ஆராய்ச்சி செய்யலானார். இராமன் குறித்த பண்புகளைக் கொண்ட ஒரே வகைக் கிரணங்களை, குறித்த ஒரே திராவகத்தினுட் செலுத்தினர்; பிறகு அத்திராவகத்திலிருந்து வெளிக் கிளம்பிய கிரணங்களைச் சோதனை செய்தார்; அவை நிற மாறுபாடு அடைந்திருத்தலைக் கண்டார்; அத் திராவகத்தில் இருந்த கூட்டு அணுக்களே அம்மாறு பாட்டை உண்டாக்கின என்பதை உணர்ந்தார்; அஃதாவது, அவ்வணுக்கள் 'திராவகத்தினுட் புகுந்து ஒளிக்கிரணங்களைச் சிதற அடித்து, அவற்றின் பண்புகளையும் மாற்றி விட்டன என்பதை அறிந்தார். இவ்வாராய்ச்சியே 'இராமன் விளைவு' என்பது. இஃது இரசாயன ஆராய்ச்சிக்குப் பெரிய ஊன்றுகோல் என்னலாம். இவ்வற்புத ஆராய்ச்சிக்காக இராமன் 1930-இல் நோபெல் பரிசு அளிக்கப் பெற்றார்.

பிறவகை ஆராய்ச்சிகள்

இராமன் பௌதிகத்தின் பிற துறைகளிலும் ஆராய்ச்சிகள் நிகழ்த்தியுள்ளார்; இன்றும் நிகழ்த்தி வருகின்றார்; வாயுப் பொருள்களின் காந்த சக்தி, இசைக் கருவிகளின் ஓசைத் தத்துவம், காதுக்கெட்டா ஓசை விளக்கம்[6] முதலிய துறைகளில் பல ஆராய்ச்சிகளை வெளிப்படுத்தியுள்ளார். 'காதுக்கெட்டா ஓசை விளக்கம்' பற்றி இவர் வெளியிட்டு வரும் உண்மைகள் மிக்க பாராட்டுக்கு உரியவையாகும்.

பெங்களூர் ஆராய்ச்சிக் கழகம்

சர். சி. வி. இராமன் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் பதினைந்து ஆண்டுகள் பேராசிரியராக இருந்தார்; பின்னர் 1933-இல் பெங்களூர் ஆராய்ச்சிக் கழகத்திற்குத் தலைவர் ஆனார். இவர் அங்குச் சென்ற பிறகு அக்கழகம் பௌதிகத் துறையில் முதன்மை பெற்று விளங்குகின்றது. அக் கழக ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளிநாட்டு அறிஞரும்

6. Ultra-sonics

உள்நாட்டு அறிஞரும் ஆர்வத்துடன் படித்து வருகின்றனர்.

நல்லியல்புகள்

இராமன் இளமை முதலே இடைவிடா ஊக்கமும் உழைப்பும் உடையவர்; எடுத்த ஒன்றினைத் தொடுத்து முடிக்கும் இயல்பினர்; மிக்க வருவாய் வரும் அரசாங்க வேலையை உதறித் தள்ளிப் பேராசிரியர் பதவியை ஏற்றது, பௌதிக சாத்திரத்தில் இவருக்கிருந்த ஆர்வத்தை உணர்த்துகிறது. பெரிய பட்டங்கள் பெற்ற இவர் அடக்கமே உருக்கொண்டவராவர்; மாணவர்கட்கு ஊக்கமும் ஆக்கமும் அளிப்பதிற் சிறந்த பேராசிரியர். அதனால் மாணவர் இவரைத் தாயினை நாடும் கன்றென நாடி இருப்பர். ஆராய்ச்சிக்குப் 'பொறுமை' வேண்டற்பாலது. இராமன் பொறுமைக்கு இருப்பிடம் என்னலாம். நம் நாட்டு இளைஞர், 'மேனடுகட்குச் செல்லாமலே சாத்திரப் பயிற்சியில் முதன்மை பெறவேண்டும்' என்பது இவரது கருத்து. இவருடைய அரிய உழைப்பால் பௌதிக உலகமே பெருமை பெற்றது; இவரைப்பற்றி அறிஞர் அனைவரும் அறிய இடம் ஏற்பட்டது. இவர் பொதுவாக இந்தியர் ஆதலால், இவரால் பௌதிக உலகில் இந்தியா மதிப்புப் பெறலாயிற்று என்னலாம். இவரைச் சிறப்பாகப் பெற்ற தமிழ்நாடு பெருமையுடையதே ஆகும். இவர் பல்லாண்டுகள் வாழ்ந்து, மேலும் பல ஆராய்ச்சிகள் செய்து நாட்டிற்கும் உலகிற்கும் பயன்பட எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாகுக!

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?"

—பட்டினத்தார்

## 13. கப்பற் பிரயாணம்

(திரு. T. பதுமாவதி அம்மையார் அவர்கள்)

நான் பிரயாணம் செய்தது கோடை காலமாதலால், ஆதித்தன் விடியற்காலேயிலேயே கீழ்த்திசையில் அடிவானத்திலிருந்து சிறிதுசிறிதாக மேற்கிளம்புவான். அவ்வமயம் யானையைக் காண்பதற்குமுன் அதன் மணி ஒலி செவிப்படுதல் போன்றும், மன்னனைப் பார்ப்பதற்குமுன் அரச சின்னங்கள் சில காட்சியளித்தல்போன்றும் ஞாயிறு எழுதற்கு முன்பே சில அழகிய இயற்கைத் தோற்றங்கள் ஆகாயத்தில் தோன்றும். குளிர்ந்த காற்றுடன் இவ்வழகின் பொலிவும் நமக்கு மிகுந்த இன்பத்தை ஊட்டுவதாகும். கடலைத் தொட்டுக்கொண்டிருப்பது போலத் தோன்றும் தொடுவானத்தில், ஆங்காங்கே செந்நிற மலர்களைத் தூவியது போன்று செந்நிறம் விட்டுவிட்டுத் தோன்றும். சில வினடிகளுக்குள் வானத்தில் செம்பஞ்சுக் குழம்பை ஊற்றியதுபோன்று ஒரே செந்நிறம் பரந்துவிடும். ஞானியின் ஞான ஒளி வெகுதூரம் பரவுதல் போன்று, ஆதித்தன் செம்மையொளி கீழ்வானம் முற்றும் ஒளிரும்; சிறிது போது கழிந்ததும், கற்றூணை இரு பிளவாகப் பிளந்து வெளித் தோன்றிய மானுடமடங்கல் போன்று, வானத்தையும் கடலையும் பிளந்துகொண்டு ஒரு நெருப்புப் பிழம்பெனச் சிவந்த ஞாயிறு சிறிது சிறிதாக மேற்கிளம்பும். அவ்வமயம் கடல் நீரிலும் செந்நிறம் காணலாம். உயரிய பொருள்கள் விரைவில் மறைதல் போன்று இவ்வழகுத் தோற்றம் சில வினடிகளில் ஓடி ஒளியும். உடனே பகலவன் பல வெள்ளிய கதிர்களை வீசிக்கொண்டு மேல்வானத்தில் வந்துறுவான். அவ்வழகைச் சில வினடிகளே கண்கூசாமல் காண இயலும். அங்குக் கடலின் பரப்பை நோக்கவேண்டும். என்ன அழகு! என்ன அழகு! கடல் முற்றும் வெள்ளியை உருக்கிவிட்டதுபோன்று தளதளத்துக்கொண்டிருக்கும். வேறெங்கிருப்பினும் இத்

தகைய பரந்த வெள்ளித் தடத்தைக் காண இயலுமோ! இவ்வளவு பெரிய நீர்ப் பாகத்தை ஒரே காலத்தில் பார்த்தற்கு கப்பல் தவிர வேறு இடம் உண்டோ? இக்காட்சியைப் பொற்கொல்லன் மூசையில் கொதிக்கும் வெள்ளி உருக்கிற்கு யாங்ஙனம் ஒப்பிடுவது? அளவில் அஃதெங்கே, இக்கடலெங்கே! 'இது மந்தரம் நாட்டிக் கடைந்த பாற் கடலோ!' என்னும் எண்ணமும் தோன்றும். அடுப்பிலேற்றிய பால்போன்று கொதிக்குங்கால் இஃது உப்புநீர் என்னும் நினைவு ஏது!

அவ்வாதித்தன் சாயும்போது வானத்தில் அமையும் நிறங்கள் பலவாகும். இவற்றினும், சந்திரன் தோற்றமே மிக்க அழகுடையது. அது மேலெழுங்கால் பொற் கலசமென ஒளிரும். அப்பரந்த மேல் தட்டில் பாலன்ன நிலவின் ஒளி உள்ளத்திற்கு மிக்க உவகையை ஊட்டும். அவண் விட்டு நீங்குதற்குச் சிறிதும் மனமெழுதல் இல்லை. இச்சூரிய சந்திரர்களின் வனப்பு, மற்ற இடங்களைக் காட்டிலும் பரந்து ஆகாயத்தின் பெரும் பிரிவு நம் கண்ணிற் படக்கூடிய கடற் செலவில் மிகுதியும் நம்மைக் கவருகின்றது. இவற்றின் சாயல்களினால் கடல்நீர் அப்போதைக்கப்போது நிறவேறுபாட்டைப் பெறுகிறது. தற்சமயம் மின்சார விளக்குகளின் தொடர்பால் நீர் ஊற்றைப் பல நிறமாய்ப் பரவச் செய்யும் செயற்கைமுறை இவ்வியற்கையை நோக்கித்தான் அமைக்கப்பட்டதோ எனக் கருதவும் இடமுள்ளது.

87020

மீன்களின் துள்ளல் எப்போதும் ஓய்தல் இல்லை. அவற்றின் துள்ளலால் மேற்கிளம்பும் கடல்நீர் ஒரோவொரு சமயம் கப்பலின் மேல்தட்டிலும் வந்து தெறிக்கும். மீன்கள் நீந்தும் அழகும், அவற்றின் விளையாட்டும், பரபரப்பும் காண்பாருக்கு வியப்பையும் மகிழ்வையும் நல்காதிருத்தல் யாங்ஙனம்! மீன் காட்சிச்சாலையில் சிறு கண்ணாடிப்

பெட்டிகளில் அடைபட்டிருக்கும் மீன்களின் ஊக்க விளையாட்டு மக்களுக்கு ஆனந்தத்தை அளிக்கிறதன்றோ! ஆயினும், கடலில் அம்மீன்களின் உல்லாசக் குதியாட்டத்தைப் பார்ப்பவர், அவ்விடம் அவற்றிற்கு ஒரு சிறைச்சாலை என்பதையும், தம் நலமும் இடமும் இழந்தார் படுந்துன்பம் இஃதே என்பதையும் உணர்வர். பிற பொருள்கள் கடலை அலைக்குங்கால் அதிலிருந்து எழும் நீர்த்திவலைகள் வானத்திற் சென்று நட்சத்திரங்களைப்போல ஒளிரும் எனக் கவிகள் இயம்பும் உவமை நினைவிற்கு வரும். அவ்வமயம் புலவருக்கு இயற்கையில் இருந்த உயரிய அறிவைக் கொண்டாடாமலிருத்தல் இயலாது. பெரிய மீன்கள் நீரில் நீந்துங்கால் தள்ளப்படும் தண்ணீரின் திரட்சி, பெரிய அலைகள் போன்று கப்பலின்மீது மோதும்.

கப்பல் துறைமுகத்திற்கு அருகில் அணையும்போது நிறத்திலும், உருவத்திலும், அமைப்பிலும் மாறுபட்ட பறவைகள் பல காணப்படும். அவைகள் கப்பலைச் சுற்றிச் சுற்றிப் பறந்து ஒலித்துக்கொண்டிருக்கும். சிறு ஒலியும் செவிப்படாது இருந்த பிரயாணிகளுக்குத் திடீரென உண்டாகும் இப்பேரோதை வெறுப்புத் தரக்கூடும். அன்றியும், நடுக்கடலிலும் ஒவ்வொருவகைப் பறவைகள் தனித் தனிக் கூட்டமாய் உரத்த ஒலியின்றிப் பறந்துகொண்டிருக்கும். அவை எங்கு வதிகின்றன, எவற்றை உண்கின்றன என்பனவற்றை அறிதல் அருமை. அருகிலுள்ள கரைகளைச் சார்ந்த ஊர்களிலும், சோலைகளிலும் அவை வதியும் போலும் என ஒருவாறு யூகிக்கலாம். அவற்றின் தீவிரப் பறப்பும், இனிய ஓசையும், அவை யாதொரு பொறுப்பும் கவலையும் இன்றிச் சுயேச்சையாய் இன்பத்திலேயே மூழ்கி இருத்தலை வெளிப்படுத்தும். காலையில் எழவும், சுறுசுறுப்புடன் செல்லவும் மக்கள் பறவைகளிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டும். அவை கூட்டமாய்ப் பறக்கும்போது அவைகளின் சிறகுகள் ஒரே நிலையில் ஒழுங்குடன் அசை

தல் மிக்க அழகு வாய்ந்தது. அங்ஙனம் அசைதல், 'இவ்வொழுங்கைக் கண்டுதான் போர்வீரர்கள் ஒரே அளவாகக் காலடி வைத்து நடக்கக் கற்றுக்கொண்டார்களோ!' என நினைக்கவும் இடந்தரும். பறவைகள் அமர்ந்திருக்கும் போதும் பறக்கும்போதும் அவற்றின் உறுப்புக்களும் அழகும் தெளிவாய்த் தோன்றும்.

அவை ஒன்றன்பின் ஒன்ருகப் பல கூட்டங்களாய்ச் சிறிது நேரம் பறந்துகொண்டே இருக்கும். அப்பறப்பு நின்றவுடனே, 'அந்தோ! அக்காட்சி இன்னும் சிறிது போது இல்லாமற் போயிற்றே!' என உள்ளம் வருந்தும். அக்காட்சியில் சலிப்பு ஏற்படுதல் இல்லை. சில போது அப்பறவைகள் மேல்தட்டில் உள்ளவர்கள் அருகிலேயே பறத்தல்போன்று காணப்படும். அவ்வமயம் அவற்றைத் தொட்டுப் பார்க்க ஆர்வம் மிகும். ஆனல் அவை கைக் கெட்டுதல் இல்லை.

முற்காலத்தில் மக்கள் கடற்பிரயாணம் செய்தற்குப் பெரிதும் அச்சம் கொண்டார்கள். இப்போதோ, அவ்வச்சம் முக்காற் பங்கு நீங்கிவிட்டது. ஆயினும், இப்போதும் அஞ்சுபவர் சிலருண்டு. கப்பலேறிச் செல்பவர் திரும்பித் தம் ஊர் வருதல் அருமை என்னும் எண்ணம் முற்காலத்தவருக்கு இருந்தது. இக்காலத்தவருக்கு அவ்வெண்ணம் அறவே நீங்கிவிட்டது. இவ்விரண்டிற்கும் பல காரணங்கள் உண்டு. இக்காலத்தும் கப்பலில் செல்கின்றவர்களுள் சிலருக்கு அதில் ஏறும்வரை மிக நடுக்கமாக இருக்கும். பின்பு, அது வீடுபோன்று இருத்தலினலும், தண்ணீர் கண்ணுக்குக் காணப்படாமையாலும் அந்நடுக்கம் சிறிது சிறிதாக மறைந்துவிடும்.

எவ்வகுப்பில் செல்பவரும் தாம் செல்லும் இடத்திற் கேற்பப் பெறும் கட்டளைச் சீட்டுடனே உணவுச் செலவை யும் செலுத்திவிடுதல் வேண்டும். இச்செலவு வகுப்பிற்குத்

தக்கவாறு குறைந்தும் மிகுந்தும் இருக்கும். மூன்றும் வகுப்பு உணவு மிகக் குறைந்த நிலையிலும், இரண்டாம் வகுப்பு உணவு நடுநிலையிலும், முதல் வகுப்பு உணவு உயர் நிலையிலும் இருக்கும். பிந்திய இரு வகுப்புக்களின் உணவு இரு பிரிவுகளை உடையது. காய்கறி உணவைப் பிராமண உணவென்றும், மாமிச உணவை ஐரோப்பிய உணவென்றும் கூறுவர். முன்னது நான்கு வேளைகளோடு அமையும். பின்னது ஆறு வேளைகள் நீளும். ஐரோப்பிய உணவிற்கு ஒவ்வொரு வேளையும் உணவுப் பண்டங்கள் இத்தனை எனக் குறித்த அட்டை எல்லாருக்கும் கொடுக்கப் படும். பிரயாணிகள், அதில் தங்களுக்கு வேண்டுவனவற்றைக் குறிப்பிட்டு அனுப்பின், அதன்படியே அவை பரிமாறப்படும். முதல் இரண்டு வகுப்பினரும், பொதுச் சாப்பாட்டறைக்குச் சென்றோ, அன்றித் தம் அறையில் இருந்தோ உணவை உண்ணலாம். அவர்களுக்கு நீராடத் தனித்தனி அறைகள் இருத்தலின், அவரவர் விரும்பிய போது குளித்தலும், ஆடைகளைத் துவைத்தலும் செய்து கொள்ளலாம்; மறு உணவுநேரம் வருமட்டும் தாங்கள் விரும்பிய இடங்கட்குச் சென்று மகிழலாம்.

அவண் நடைபெறும் களியாட்டங்கள் பலப்பல. அவை அவரவர்கள் அறிவிற்கும், இயல்பிற்கும், போக்கிற்கும் ஏற்ப அமையும். சிலர் சீட்டாடுவர்; சிலர் இன்னிசையில் ஆழ்ந்திருப்பர்; சிலர் பந்தாட்டத்திற் பதிவர்; சிலர் மேல்தட்டில் உட்கார்ந்து இயற்கை அழகில் ஈடுபட்டிருப்பர்; சிலர் நூல்களின் நுட்பப்பொருளை நுகர்ந்துகொண்டிருப்பர்; சிலர் பொதுப் பொருள்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பர்; முன்பே பழக்கமுள்ள நட்பினர், தம் கல்லூரி அனுபவங்களையும், கடற்கரைக் காட்சிகளையும் கூறிக் குலவிக்கொண்டிருப்பர்; சிலர் செய்தித்தாள் படித்துக் கொண்டிருப்பர். சிலரைத் துயில் ஆட்கொள்ளும். வேடிக்கைக் கதைகள் சிலர் காலத்தைக் கவரும். வேளைக்குவேளை

கிடைக்கும் உயர்ந்த உணவும், விசாலமான படுக்கையும், மகிழ்வையூட்டும் இயற்கைக் காட்சிகளும், ஆனந்தம் நிறைந்த கூட்டுறவும், உட்கார நாற்காலிகளும், சாய்ந்திருக்கச் சாய்வுப் பலகைகளும், முழுச்சந்திரன் போன்று ஒளி வீசும் மின்சார விளக்குகளும் அளிக்கும் இன்பத்தை இந்திரலோக இன்பம் என்றுதான் கூறல் வேண்டும். குடும்பத் தொல்லேயோ, வேலைச் சிரமமோ, பணக்குறைவோ அவண் ஏற்பட வழி இல்லை. சம்பந்தி வீட்டில் மருவு உண்ணும் மாப்பிள்ளை வீட்டாரைக்கூடக் கப்பற் பிரயாணிகளுக்கு ஒப்புக் கூறல் இயலாது. அவ்வாழ்க்கையை அவர்கள் வாழ்க்கையிலேயே ஒரு சிறந்த அனுபவம் எனத்தான் இயம்பல் வேண்டும். ஆனல், கப்பல் நாகப்பட்டினத்தை விட்டவுடன் சிறிது தொலைவுவரையும் கடல் மிகக் கொந்தளிப்பாய் இருத்தலின், ஏறக்குறைய இரண்டு நாட்கள் வரையிற் சிலருக்கு மயக்கம் உண்டாகும். அதுவே மக்களுக்குச் சிறிது துன்பம் தருவதாகும். பலருக்கு மயக்கம் உண்டாதலே இல்லை. மயக்கமுற்றவரும் மூன்ரும் நாள் மிக்க ஊக்கத்துடனும் மகிழ்வுடனும் எழுந்து உலவுவர். "முன்பிருந்தவற்றைவிட எங்களுக்குச் சுறுசுறுப்பும் நலமும் மிகுந்த அளவில் ஏற்பட்டுள்ளன!" என அவர்களே கூற நான் கேட்டுள்ளேன். எங்களுக்கு மயக்கம் சிறிதும் உண்டாகாமையின், அவ்வனுபவத்தைப் பற்றி நாங்கள் அறிந்தோ மில்லை.

பெரும்பான்மையாக முதலிரு வகுப்புக்களிலும் உணவுப் பொருள்கள் மிகுதியும் வீணக்கப்படுகின்றன. யாவரும் சேர்ந்து உண்ணும் இடத்திலும், அவர்கள் உண்ணும் அளவைக் காட்டிலும் மிகுதிப்படும் அளவே விஞ்சி இருக்கும். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கொணர்ந்து கொடுக்கும் உணவும் நிரம்ப இருத்தலின், அதுவும் மீதப்பட்டுப் போகிறது. சோறுமட்டுமா? பிரையிட்ட தயிர், கோக்கோ, சுவையுள்ள காய்கறிகள், நெய்யில் செய்த இனிய பண்டங்

கள் யாவுமே கடலில் எறியப்படுகின்றன. வேலைக்காரருக்கும் போதிய உணவு கிடைத்தலின், அவர்களும் அவற்றை விரும்புதல் இல்லை. இம்முறையில் ஒவ்வொரு நாளும் வீணாக்கப்படும் உணவு, பலபேர் வயிற்றை நிரப்பக்கூடும். இதைக் குறித்துப் பிரயாணிகளோ, கப்பல் அதிகாரிகளோ, சிறிதும் கவலை கொள்ளுதலே இல்லை. இங்ஙனம் இவ்வகுப்பினர் வாழ்க்கை இன்பத்துடனும் ஆரவாரத்துடனும் கழிகின்றது.

மேல் இரு வகுப்பில் உள்ளவர் எத்துணை இன்பம் துய்க்கின்றனரோ, அத்துணைத் துன்பம் மூன்றும் வகுப்பினரைச் சார்ந்துள்ளது. கூடம் போன்றிருக்கும் ஒரு பெரிய இடத்தில் அவர்களிருப்பினும், கூட்டம் அதிகமாதலால், நெருக்கம் மிகுதியாய் உள்ளது. அவ்விடத்தில் ஒவ்வொருவருக்கு இத்தனை அடிகள் என அளந்து விடப்பட்டிருக்கும். உண்ணல், உறங்கல் யாவும் அங்கேயே நடைபெறும். உலாவவோ, வேறு இடத்திற்குச் செல்லவோ முடியாது. குழந்தைகள் இருப்பின், பெற்றோருக்குப் பெரிதும் துன்பமே. குளித்தற்குத் தண்ணீரும் இடமும் கிடைத்தல் அரிது. அம்மூன்றும் வகுப்புள்ள இடம் நீர் மட்டத்திற்கடியில் அமைந்து இருத்தலின், அவர்களுக்கு மயக்கமும் அதிகம். அதனால், பல பேர் வாந்தி எடுப்பர். சிலபோது அந்த அசுத்தத்திலேயே அவர்கள் கிடக்க நேரும். அவர்கள் சுத்தமாக இருத்தற்குப் பழகாதவர்கள். ஆதலின், தங்கள் இடத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவும் அவர்களுக்குத் தெரிதல் இல்லை. என் செய்வது! எல்லாப் போகமும் பணத்தைப் பொறுத்தன்றோ உள்ளது! மூன்றும் வகுப்புக் கட்டணம் முப்பத்தாறு ரூபாய். இரண்டாம் வகுப்புக் கட்டணம் நூற்று இருபது ரூபாய். இவ்விரண்டு வகுப்புக்களுக்கும் இடைப்பட்ட வகுப்பு ஒன்றுளது. அதன் கட்டணம் தொண்ணூறு ரூபாய். இறுதி வகுப்பினரும் இரண்டாம்

வகுப்பினரைப் போன்றே சில நலங்களைப் பெறலாம்; ஆயினும், உணவிலும், படுக்கை அறையிலும், குளிக்குமிடங்களிலும் சிறிது வேறுபாடு உண்டு. அவை அவர்களுக்கு அத்துணைத் துன்பத்தைத் தருதல் இல்லை. இறுதி வகுப்பினர் பல கஷ்டங்களையும் அடைதற்குக் காரணம், அவர்கள் வறுமையேயாகும். புகை வண்டியிலும் இவ் வேறுபாடும் துன்பங்களும் உண்டல்லவா?

மூன்றும் வகுப்பினருக்குச் சோறும், காய்கறி கலந்த சாம்பாரும், வாரம் இரு முறை மாமிச உணவும் கொடுக்கப் படுகின்றன. பெரிய பாத்திரங்களில் சோறும் குழம்பும் தனித்தனியே வைத்துக்கொண்டு இருவர் நிற்பர். படுக்கையில் இருக்கும் பிணியாளர் தவிர, மற்றவர் யாவரும் தாமே போய் உணவைப் பெற்று வரவேண்டும். இந்தச் சோறு தவிர வேறொன்றும் அவர்கட்குக் கிடைத்தல் இல்லை. புகை வண்டிகளில் பெறுவதைப் போலச் சிற்றுண்டிகளும் அவர்கள் பெற முடியாதன்றோ? இந்நிலையில் அம்மக்களின் துன்பம் பெரிதே! கீழ்த்தட்டில் ஓர் அரிய பண்டமும் கிடைக்காமலிருத்தலையும், மேல் தட்டில் அரிய பண்டங்கள் பல கடற்கிரையாதலையும் நோக்கின், அவை உலகில் ஏழைகளின் வறுமைத் துன்பத்தையும் செல்வரின் ஆரவாரச் செயலையும் வடித்துக் காட்டுதல் போன்றிருக்கும். முதல் இரண்டு வகுப்பினருக்கும், 'எப்போது கரையைக் காணலாம்!' என்னும் ஆர்வம் இருப்பினும், அக்கப்பலின் செலவு இன்னும் இரண்டு நாட்களுக்கு நீடிப்பினும் அவர்கள் மிக்க கவலை அடைதல் இல்லை. மூன்றும் வகுப்பினருக்கோ, ஒரு மணி நேரம் அதிகப்படுவதும் பெருந்துன்பந் தரும். வீடு சேர்ந்த பின்பும் இரண்டொரு நாட்களுக்கு உடல் ஊஞ்சலாடுவதைப் போன்ற உணர்ச்சியே அவர்களுக்கு உண்டாகும்.

## 14. களிமண்

[திரு. R. K. விசுவநாதன் அவர்கள், M. A.]

மிகப் பழங்காலம் முதற்கொண்டு இன்றுவரை மனித வாழ்க்கைக்குப் பயன்பட்டு வரும் பொருள் களிமண். களிமண் சுவரைக் கொண்ட குடிசைகளிலேதான் நம் முன்னோர்கள் வசித்து வந்தார்கள். இப்பொழுதும் நம் நாட்டில் ஏழை மக்கள் வசித்து வருவது இம்மண் குடிசைகளிலே தான். களிமண்ணினுற் செய்த ஓடுகளையும் கற்களையும் கொண்ட வீடுகள் பின்னர்த்தான் ஏற்பட்டன.

ஏழை மக்களுக்குப் பண்டங்களை வைக்கச் சட்டி பானைகளே பயன்பட்டு வருகின்றன. மேனுட்டார்கள் ஆகாரம் உண்ணுவதற்கு உபயோகிக்கும் தட்டுகளும், கிண்ணிகளும் களிமண்ணுற் செய்தவைகளே. மின்சாரம் மலிந்த இந் நாளில் மின்சார சத்தியைப் பல இடங்களுக்குக் கொண்டு போவதற்கு உலோகக் கம்பி வேண்டியிருப்பதுபோல, பீங்கான் கிண்ணங்களும் அவசியம். தந்தி மரத்தின் தலையைப் பார்த்தால், இது தெரியும். இவையும் களிமண்ணுலே தான் செய்யப்படுகின்றன.

எல்லா நாடுகளிலும் மண் பாண்டங்கள் செய்வது நற்கலைகளில் ஒன்ருகக் கருதப்பட்டுவந்தது. இக்கலையில் பெயர்போனவர்கள் சீன தேசத்தவர்கள். வெண்களிமண்ணுல் அவர்கள் தயாரிக்கும் தட்டுகளும், கோப்பைகளும் ஒருசமயம் ஐரோப்பா முழுவதும் பிரபலமாய் இருந்துவந்தன. இவற்றின்மீது அவர்கள் வரையும் சித்திரங்களின் சோபை சொல்லி முடியாது. இப்பொழுது ஐரோப்பாவின் பல இடங்களில் இப்பாத்திரங்கள் செய்யப்பட்டு வருகின்றன. முதன் முதல் சீனுவில் தயாரித்ததற்காக இன்னும் வெண்களிமண்ணுற் செய்த பாத்திரங்களைச் 'சீனு' என்று தான் கூறுவார்கள்.

இப்பாத்திரங்கள் கையினலேயே செய்யப்பட்டு வந்ததுமன்றித் தற்காலம் ஆலேகளிலும் பெருவாரியாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதனல் இந்நற்கலேயின் நுட்பங்கள் பல மறைந்துவிட்டதாகச் சிலர் கூறுகின்றனர். மண் பாண்டங்கள் தயாரிக்கும் விதத்தைப் பற்றியும், களிமண்ணின் விஞ்ஞான விசேஷங்களேப் பற்றியும் இனிக் கூறுவோம் :

நீண்ட பழக்கத்தினல் குயவர்கள் பாண்டங்கள் செய்வதற்கு எத்தகைய களி மண்ணே உபயோகிக்க வேண்டுமென்பதைச் சீக்கிரத்தில் கண்டு பிடித்துவிடுவார்கள் ; அதை எடுத்துத் தண்ணீரில் ஊற வைத்து நன்ருக மிதிப்பார்கள் ; மரக் கட்டையினலும் தட்டுவதுண்டு. மண்ணில் கலந்திருக்கும் கடின வஸ்துக்களே எல்லாம் பொறுக்கி எறிந்துவிட்டுச் சில நாட்களுக்கு அதை அப்படியே வைத்திருப்பார்கள். சிலர் வைக்கோலேத் தண்ணீரில் ஊற வைத்து அச்சாற்றையும் களிமண்ணுடன் சேர்த்துக் கொள்ளுவதுண்டு. இதைப்பற்றி ஒரு கதை சொல்லுவார்கள் :

எகிப்து தேசத்தில் நெடு நாளேக்கு முன்பு பரோவா என்று ஓர் அரசன் இருந்தான். அவன் இஸ்ரேலேட்டு என்ற வகுப்பினரை அடிமைகளாக்கிப் பல துன்பங்களுக்குள்ளாக்கி வந்தான். அவ்வகுப்பினரைத்தான் தற்காலம் 'யூதர்' என்று நாம் கூறுகிருேம். அச்சமயம் எகிப்தில் இருந்த இஸ்ரேலேட்டுகள் பெரும்பாலும் குயத் தொழிலேச் செய்துதான் ஜீவனம் நடத்தி வந்தார்கள். அவர்களுக்கு வைக்கோல் கொடுக்கக் கூடாது என்று அரசன் இட்ட கட்டளேயின் கருத்துப் பலருக்கு விளங்கவில்லே. அதன் காரணம் என்னவெனில், அவர்கள் மண் பாண்டங்கள் செய்வதற்கு முன், வைக்கோலேத் தண்ணீரில் ஊறவைத்து அச்சாற்றையும் களிமண்ணுடன் சேர்த்துக்கொள்ளுவார்களாம். இதை அறிந்து அவர்களுக்குத் தொழிற் கஷ்டம்

உண்டாகவேண்டுமென்று அரசன் அத்தண்டனையை விதித்தான்.

தற்காலம் ஆலைகளில் களிமண்ணுடன் (டானின்) மரவுரித் துவர்ப்புச் சத்தைச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இதனால், டானின் சேர்ந்த களிக்கு 'எகிப்துக் களி' என்னும் பெயர் வழங்கிவருகிறது.

ஆலைகளில் களிமண்ணைச் சீர்படுத்தும் வகையைப் பற்றி இப்பொழுது சிறிது கூறுவோம்: குழாய்களின் வழியாகத் தண்ணீரைப் பீறிட்டு வரச்செய்து, அதைக் கொண்டு களிமண்ணைக் கரைப்பார்கள். சிறிதும் பெரிதுமாகக் களிமண் நீருடன் கலந்துவிடும். இதைப் பல தொட்டிகளின் மூலம் செலுத்துவார்கள். களிமண்ணில் சேர்ந்துள்ள கல் முதலிய கடினப் பொருள்களெல்லாம் தொட்டிகளின் அடியில் தங்கிவிடும். பின்னர் இதை வேறு சில தொட்டிகளுக்கு இறைத்துச் செலுத்துவார்கள். அத்தொட்டிகளில் மணல், மைக்கா முதலிய பொருள்கள் நீக்கப்படும்; அவற்றிலிருந்து வேறு தொட்டிகளுக்குச் செலுத்தப்படும். அங்கே நீண்ட நேரம் அதை வைத்திருப்பார்கள். இதனால், தொட்டிகளின் அடியில் களிமண் படிந்துவிடும்.

நன்றாகப் படிந்தவுடன் மேல்நிற்கும் தண்ணீரைமட்டும் இறைத்துவிடுவார்கள். பிறகு களிமண்ணை எடுத்துக் குளிர்ந்த இடங்களில் காற்றுப் படும்படியாக வைத்திருப்பார்கள். களிமண்ணுடன் மரப்பட்டைச்சாறு, புளித்த காடி முதலியவற்றையும் சேர்ப்பார்கள். இதனால், களியின் உருவாகும் தன்மை அதிகரிப்பதாகக் கூறுகிறார்கள். இதே நிலையில் வருஷக் கணக்காகக் களியை வைத்திருப்பார்கள். புளிக்கப் புளிக்கக் களியின் தன்மை விருத்தியடையும். சீனர்கள் களிமண்ணை நூறு வருஷங்கள்வரை ஊற வைப்பதுமுண்டு.

நன்ருகப் பதப்படுத்திய களிமண்ணைக்கொண்டு மண் பாண்டங்கள் செய்வதிலேதான் குயவரது கைத்திறன் வெளிப்படும். சக்கரத்தைச் சுழற்றிக்கொண்டே அதன் மீது களிமண்ணைச் சிறுகச் சிறுக வைத்து அழுத்தித் தக்க உருவம் அமையுமாறு அவர்கள் செய்யும் விதத்தைக் கவனித்தால், இக்கலையின் நுட்பங்கள் தெரியவரும். உருவத்தின் கனம் எல்லா இடங்களிலும் சீராக அமைய வேண்டும். அல்லாவிட்டால், அப்பாண்டத்தைச் சூளையில் இட்டுச் சுடும்போது அதில் பிளவு ஏற்பட்டுவிடும். எல்லாப் பாண்டங்களையும் காற்றிலும் வெயிலிலும் காயவைத்துப் பின்னர்த்தான் சூளையில் வைத்துச் சுடுவார்கள்.

ஆலைகளில் பாரிஸ் சாந்து (பிளாஸ்டர் ஆப் பாரிஸ்) என்னும் பொருளில் பாண்டங்களின் உருவங்களை முதலில் தயார்செய்துகொண்டு அவற்றில் களிமண்ணைப் போட்டு எடுத்து அப்பாண்டங்களை உலர வைப்பார்கள். உலர்ந்த பின் பெரிய சூளைகளில் இட்டுச் சுடுவார்கள். சூளைகள் தக்கவாறு அமைக்கப்பட்டிருக்கும். எல்லா இடங்களுக்கும் சீராக வெப்பம் சென்று பாண்டங்களைச் சரிவரச் சூடு செய்யுமாறு சூளைகள் அமைக்கப் பெற்றிருக்கும். அவற்றை எடுத்துச் சில திரவங்களில் முழுக்கி மறுபடியும் சுடுவார்கள். இதனுல், அவற்றிற்கு மெருகு ஏறும். இத்திரவங்களைத் தக்கவாறு தயாரித்துக்கொள்ளுவார்கள்.

களிமண்ணில் வெண்களி என்னும் ஒரு வகையுண்டு. இதற்குக் ‘ கேயோலின் ’ என்னும் பெயரும் உண்டு. முதல் முதல் இதைக் கண்டுபிடித்தவர்கள் சீனர்களே. சாதாரணக் களிமண்ணுக்கும் இதற்கும் அநேக வித்தியாசங்களுண்டு. சாதாரணக் களிமண்ணிஞற் செய்த பாண்டங்களை இறுகவைக்க அவற்றின் சூட்டை அதிகமாக உயர்த்த வேண்டுவதில்லை. ஆனல், வெண்களியாற் செய்த பாண்டங்களை இறுகவைக்க மிக உயர்ந்த சூடு வேண்டும். இதற்

காக வெண்களியுடன் வேறுவகைக் களிமண்ணையும் சேர்த்துக்கொள்வதுண்டு. அப்பொழுது மிக உயர்ந்த சூட்டுக்கு உயர்த்த வேண்டுவதில்லை. மற்றும் சாதாரணக் களிமண் பாண்டங்கள் அவற்றின் மூலம் ஒளியைப் புகவிடா. ஆனல், வெண்களியால் செய்த பாண்டங்கள் கண்ணடியைப்போல அவற்றின்மூலம் ஒளியைப் புகவிடும். இக்காரணத்தினலேதான் வெண்களியாற்செய்த கோப்பைகளையும், தட்டுகளையும் எல்லாரும் விரும்புகின்றனர். மற்றுமொரு வித்தியாசமும் உண்டு: சாதாரணக் களிமண் பாண்டங்கள் சீக்கிரத்தில் உடைந்துவிடும். ஆனல், வெண்களிப் பாண்டங்கள் சுலபமாக உடையா. கண்ணடியைப் போல ஒளியைத் தம் மூலம் புகவிடுவதால், வெண்களிப் பாண்டங்களின்மீது பலவித நேர்த்தியான சித்திரங்கள் வரையப்படும். இச்சித்திரங்கள் வரைவதிலும் கைதேர்ந்தவர்கள் சீனர்களும் ஜப்பானியர்களும் ஆவார்கள். இப்பொழுதும் விலையுயர்ந்த வெண்களிப் பாத்திரங்களின்மீது சித்திரங்கள் கையினலேதான் வரையப்படுகின்றன. ஆலைகளில் இவற்றைத் தயாரிக்கும்போது இவற்றிற்கு மெருகு கொடுத்தவுடன் சித்திரங்களைப் பதியவைத்து மறுபடியும் சுடுவார்கள்.

சித்திரங்கள் வரைவதற்கு உபயோகப்படும் பொருள்கள் வர்ணத்துக்குத் தகுந்தவாறு வேறுபடும். உதாரணமாக, சிவப்புச் சித்திரங்கள் வரைவதற்குத் தங்கத்தை மிகச் சிறிய தூளாகச் செய்து அதைத் தக்க திரவத்தில் கரைத்துக்கொண்டு சித்திரங்கள் வரையப்படும். தற்சமயம் இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இவ்விடங்களில் எல்லாம் வெண்களிப் பாண்டங்கள் ஆலைகளில் செய்யப்படுகின்றன. இங்கிலாந்தில் வெண்களியுடன் எலும்புச் சாம்பலையும் சேர்த்துக்கொள்ளுவார்கள்; எலும்புகளை நொறுக்கிக் காற்றுப்படாமல் உலைகளில் சூடு செய்து எலும்புக்கரியை முதலில் தயாரித்து, பின்னர் எலும்புக் கரி

யைக் காற்றுப்பட நன்றாய்ச் சூடு செய்து எலும்புச்சாம்பலைத் தயாரிப்பார்கள். எலும்புச் சாம்பலைச் சேர்ப்பதில் சில சௌகரியங்கள் உண்டு. முதல் சௌகரியம், பாண்டங்களின் கடினத்துவம் அதிகரிப்பது. மற்றொன்று, அவற்றின் ஒளியைப் புகவிடச் செய்யும் தன்மை அதிகமாவது.

ஒரு பாத்திரத்தில் களிமண் சேர்ந்த தண்ணீரை எடுத்துக்கொண்டு பார்த்தால், அது கலங்கலாய்த் தோன்றுவது தெரியவரும். நீர் அணுக்களின் இடையே களிமண் தூசுகள் இருப்பதனால் இத்தோற்றம் ஏற்படுகிறது. இத் தூசுகள் மிதக்கும் விதத்தை அறிய ஓர் உதாரணத்தைக் கூறுவோம்: காற்றில் கோடிக் கணக்கான தூசுகள் எப்பொழுதும் மிதக்கின்றன. இவற்றைப் பார்ப்பதற்கு அறையை நன்றாக மூடிக்கொண்டு கூரையிலுள்ள ஒரு சந்தின் வழியாக உள்ளே வரும் சூரிய ஒளியின் போக்கைப் பார்க்கலாம். இவ்வொளியின் பாதையில் எண்ணற்ற தூசுகள் இங்குமங்கும் அலைவது நன்கு தெரியும்.

இதைப் போலவே நீரின் அணுக்களினால் உந்தப்பட்டு, களிமண் தூசுகளும் இங்குமங்கும் அலைந்துகொண்டிருக்கின்றன. இத்தூசுகள் லேசானபோதிலும், நீரின் அணுக்களைவிடக் கனமானவை; ஆதலால், பாத்திரத்தின் அடியில் மெதுவாகப் படிய ஆரம்பிக்கும். படிந்து நிற்பது தான் நல்ல களிமண்ணாகும். களிமண்ணுடன் எப்பொழுதும் நீர் சேர்ந்திருப்பதனால், இதை உருவாக்குவது சுலபமாக இருக்கிறது. சீக்கிரத்தில் நன்றாக உருவமாகும் திறன் களிக்குக் களி வேறுபடும். இவ்வேறுபாடு தூசுகளின் அமைப்பைப் பொறுத்து ஏற்படுகிறது. இத்தூசுகளுடன் வேறு சில பொருள்களின் தூசுகளைச் சேர்ப்பதனால் உருவை ஏற்கும் திறன் அதிகரிக்கின்றது. உதாரணமாக, டானின் சத்தைக் களிமண்ணுடன் சேர்த்தால், இத்திறன் அதிகரிக்கும். களிமண்ணில் சேர்த்துள்ள தண்ணீரை

நீக்கினற்ருன், இதிற் செய்த பாண்டங்களுக்குக் கடினத்துவம் ஏற்படும்.

சாதாரணமாக இப்பாண்டங்கள் காற்றில் உலரும் போது சிறிது அளவுக்குத்தான் நீர் வெளிப்படும். சூளையில் வைத்துச் சுடும்போதுதான் எல்லா நீரும் வெளிப்படும். சூடு செய்யும்போது சில களி சீக்கிரத்தில் நீரைக் கக்கிவிடும். சில களி, மிக உயர்ந்த சூட்டுக்கு உயர்த்தினல் அன்றி, நீரை வெளிவிடா. நீர் வெளிப்படுவதனல், பாண்டங்களின் பரிமாணம் சுருங்கும். பரிமாணம் நாலில் ஒரு பங்கு சுருங்குவதும் உண்டு. எனவே, பாண்டங்களை நிதானமாகச் சுடவேண்டும். அப்பொழுதுதான் சுருங்கும் போது பிளவு ஏற்படாது. மற்றும் பாண்டங்கள் சீரான வடிவம் பெற்றிருக்கவேண்டும். வடிவம் சரியாக அமையாவிடினும், பிளவு ஏற்படும்.

உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் தொண்ணூற்றிரண்டு தனிப் பொருள்களிலிருந்து பெறப்படுகின்றன என்று இரசாயனம் முடிவுக்கு வந்திருக்கிறது. களிமண்ணில் உள்ள தனிப் பொருள்கள் யாவை என்பதை ஆராய்ந்ததில், களிமண் தூசுகளில் 'ஸிலிகன், பிராணவாயு, அலுமினியம்' என்னும் மூன்று தனிப் பொருள்கள் இருப்பது தெரிய வந்தது. களிமண் எல்லா இடங்களிலும் கிடைக்கும். ஏனெனில், உலகில் பாதி பிராணவாயு; நாலில் ஒரு பங்கு ஸிலிகன்; ஏழு சதம் அலுமினியம். எனவே, இவை சேர்ந்த களிமண் எங்கும் கிடைப்பதில் வியப்பொன்றுமில்லை.

நமது நாட்டில் ஒரு பொருளுக்கும் பஞ்சமில்லை. களிமண்ணுக்கும் பஞ்சமில்லை. குயத்தொழில் இன்னும் அழியவில்லை. நவராத்திரிக் கொலுப் பொம்மைகள், விளையாட்டுச் சாமான்கள் முதலிய எல்லாவற்றையும் மக்கள் செய்து கலையை இன்னும் பாதுகாத்துவருகின்ருர்கள். எனவே,

அபிவிருத்தி செய்யவேண்டிய குடிசைத் தொழில்களுள் இஃதொன்று. இந்த அபிவிருத்திக்கு விஞ்ஞானம் பெரிதும் பயன்படும்.

மற்றும் திருவாங்கூரில் ஏற்படுத்தியிருப்பதுபோலப் பல தொழிற்சாலைகளை நாட்டின் பல இடங்களிலும் ஏற்படுத்தி, வெண்களிப் பாண்டங்கள், பீங்கான்கள், மின்சார சாமான்கள், ஜாடிகள் முதலிய எல்லாவற்றையும் அயல் நாடுகளிலிருந்து வாங்காமல் இங்கேயே தயாரிக்க வேண்டுவது அவசியமாகும்.

## 15. உலகத்தின் தென்முனை கண்ட வீரர்

[புலவர் திரு. பு. செல்வராஜ் அவர்கள்]

நாம் வாழும் உலகம் கை புனைந்தியற்றாக் கவின் பெற்றது; ஆழ்ந்த ஆழிகள் - வானளாவிய மாமலைகள், பசுமையுமிழும் மருதம் - வெம்மையூட்டும் பாலை எனப் பல்வேறு தோற்றங்களுடையது; வெண்ணிறத்தவர், செந்நிறத்தவர், கரு நிறத்தவர், மஞ்சள் நிறத்தவர் எனப் பன்னிற மக்கள் கொண்டது; எரியூட்டும் வெப்பம், பற்களை நட்டிட வைக்கும் குளிர், இரண்டும் கலந்த நிலை எனப் பலவகை தட்ப வெப்பங்களுடையது. விந்தைமிகு இவ்வுலகின் உருவமோ உருண்டையானது.

உலகப் படத்தை விரித்து வைத்து நோக்குவமாயின், உலக அமைப்பையும், மலைகள், யாறுகள், ஆழிகள், பாலை, மருதம் முதலியவை எங்கெங்கு எவ்வண்ணம் அமைந்திருக்கின்றன என்பதையும், எவ்வெந்நிற மக்கள் எங்கெங்கு வாழ்கின்றனர் என்பதையும் இன்னோரன்ன பிறவற்றையும் எளிதில் அறிகிறோம்.

ஆயின், இவற்றை நாம் எளிதில் அறியும்வண்ணம் முதலிற் கண்டறிந்து குறித்துவைத்த அறிஞர் பெருமக்கள் யாவர்? அவர் எத்துணைப் பேரின்னல்களுக்கிடையே

இவற்றைக் கண்டறிந்தனர் என்பதை நாம் அறிதல் வேண்டும் அன்றோ?

உலகப் பெருவிந்தைகளைக் கண்டறிந்த பெருமக்கள் ஒருவரிருவரல்லர்; மிகப் பலர். உலகு உருண்டை உருவமுடையதென்பதை 15-ஆம் நூற்றாண்டு வரை அறிஞர் அறிந்திலர். 1520-ஆம் ஆண்டின் இறுதியில், பெருங்கடற் செலவினைத் துவக்கிய பெர்டினண்டு மெகலன் என்பாரின் குழுவினர், அட்லாண்டிக் மாகடலைக் கடந்து, மற்றொரு மாபெரும் கடல் கண்டு, அதற்குப் 'பசிபிக்' எனப் பெயரிட்டு, அதன் ஆசியக் கரையோரமுள்ள பல தீவுகளை அடைந்து, அவற்றை ஆராய்ந்தவண்ணம் இந்திய மாகடல் வழியே, தென் ஆப்பிரிக்காவைச் சுற்றிச் சென்று தம் நாடடைந்தனர்.

இக்குழுவினரே முதன் முதலாக முப்பேராழிகளைக் கடந்து உலகை வலம் வந்தனர் எனும் பெருமைக்குள்ளாயினர். இவர்கள் சென்று மீண்ட வழியைக் கொண்டே உலகு உருண்டை வடிவினதென்பதை அறிஞர் அறிந்தனர்.

உலகம் உருண்டை எனின், அதன் இருபுறங்களிலும் இரு முனைகள் இருத்தல்வேண்டுமன்றோ? கிழக்கு மேற்காகக் கடலிலே நாவிகர்கள் உலகையே சுற்றி வந்துள்ளபடியால், முனைகள் இரண்டும் வடக்கிலும் தெற்கிலும் அமைந்துளவென்பதறிந்த அறிஞர்கள், அவ்விரு முனைகளையும் ஆராய்தல் வேண்டும் எனும் பேரவாக் கொண்டனர். பலர் இத்துறையிலீடுபட்டனர். அவருள் ஒருவர் ரோவால்டு அமண்ட்சன் என்பார்.

ரோவால்டு அமண்ட்சன் நார்வே நாட்டைச் சேர்ந்தவர். மனத்திட்பமும் கூர்த்த அறிவும் எதனையும் நுணுகி ஆராயும் ஆற்றலும் ஊக்கமும் திறமையும் வாய்ந்தவர்; இயற்கையின் இன்பக் காட்சிகளையும் புதுமைகளையும்

கண்டறிவதில் பேரவாக் கொண்டவர். இவர் உலகின் இரு முனைகளையும் காணுதல் வேண்டும் எனும் மன உறுதி பூண்டார்; அதற்கெனக் கலங்களில் பணியாற்றிப் பயணத்தில் ஏற்படக்கூடிய இன்னல்களைப் பொறுத்துக் கொள்ளப் பழகினார்; எவ்வகை உணவினையும் ஏற்றுக் கோளாறு அற்றிருக்கும் வகையில் வயிற்றைப் பழக்கினார்; மிகுந்த தட்ப நிலையிலும் நடுக்குற்று வெடிக்காதிருக்குமாறு உடலைப் பழக்கினார்; கலம் செலுத்தும் பணியில் நற்றிறமை பெற்றார்.

ரோவால்டு அமண்ட்சன் தமக்கு முன், வட—தென் முனைகளைக் காணச் சென்ற அறிஞர் குறித்து வைத்திருந்த அநுபவங்களைப் படித்து மனத்தில் ஆழப் பதித்தார். கடுங் குளிரினின்று காக்கத் தக்க உடைகள், எதிர்பாரா நிகழ்ச்சிகளால் ஏற்படக் கூடிய கால தாமதத்திற்கு ஏற்ற அளவு உணவுப் பொருள், வழுக்கு வண்டிகள், வழுக்கு நடையன்கள் முதலியவற்றைச் சேர்த்துக்கொண்டு, பயணத்தைத் துவக்கினார்; 'பெல்ஜிகா' என்னும் கப்பலின் தலைவராக இருந்து, தம் தென் முனைப் பயணத்திற்கு வேண்டிய துணைவர்களையும் ஆட்களையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.

அமண்ட்சன், பரந்த கடலிடை நெடும்பயணம் செய்து, தென் முனைக்குரிய எல்லைக் கோட்டையும் (Antartic circle) தாண்டிச் சென்று, தென் விக்டோரியாலந்து என்னும் நிலப்பகுதியை அடைந்தார். இந்நிலப் பகுதி தென் முனை எல்லைக்குட்பட்டதாகலின், சொல்லொணுக் கடுங்குளிர் அங்குப் பரவிக் கிடந்தது. அடிக்கடி பனிப் புயல் வீசியடித்தது. அமண்ட்சனின் 'பெல்ஜிகா' கப்பல் கரையை அணுகுவதற்குள் கடல் நீரின் தன்மை மாறுபடத் தொடங்கியது. நன்றாகச் சென்றுகொண்டிருந்த கப்பல், ஓட்டம் குறையத் தொடங்கியது. தட்பநிலை உறையும் அளவிற்கு வந்துவிட்டதை யறிந்த அமண்ட்சன்

விரைவில் கடல் நீர் பனிக்கட்டியாக உறைந்துவிடுமென்பதை உணர்ந்துகொண்டார்; தம் கலம் அவ்வுறைபனிப் பிடிப்பில் சிக்கிவிடும் என்பதை அறிந்தார்; அதினின்று தப்பிச் சென்றுவிட எவ்வழியுமில்லை என்பதை அறிந்து, கலத்தை அங்கே நின்ற நிலையில் நிறுத்திவிட்டார். அதே நேரத்தில் கடல் நீர் உறைந்து பனிப் பாறையாக மாற, கலம் அவ்விறுகிய பனிக்கட்டியிலே அசையா நிலையில் நின்றது.

இவ்வண்ணம் 'பெல்ஜிகா' பனிப்பாறைகளுக்கிடையில் ஓராண்டுக் காலம்வரை சிக்கிக் கிடந்த நிலையிலே இருந்தது. அப்பகுதியின் கடுங்குளிரையும் விரைந்து வீசும் பனிப் புயலையும் தாங்க முடியாமல் மாலுமிகளிற் சிலர் மன உரமிழந்தனர்; சிலரின் கை விரல்கள், காதுகள், உதடுகள் போன்றவை வெடித்துப் புண்ணாயின. மாலுமிகளுட் பெரும்பாலோர் கடற் காய்ச்சலால் பீடிக்கப்பட்டனர்.

இந்நிலை கண்ட அமண்ட்சன், நெஞ்சுரம் குன்றிலர்; தம் ஆட்களுக்கு ஏற்பட்ட இன்னலைக் களைய முயன்றார். இதுகாறும் அவர்கள் உண்டுவந்த உணவுப் பொருளை நிறுத்திப் புதிய உணவுப் பொருள்களை உண்டால் கடற் காய்ச்சல் விலகும் என்பதை அமண்ட்சன் நன்கு அறிவார். எனவே, கலத்தை விட்டிறங்கி, உறைந்த அப் பனிப்பாறைகளின்மீது வழுக்கு நடையன்களை அணிந்து கொண்டு புதிய உணவுப் பொருள்களைத் தேடி நெடுந் தொலை சென்றார். அப்பனிக் காட்டில் கிடைக்கும் பறவைகள், எங்கேனும் சிறிதளவு நீர்த்தேக்கமிருந்தால் அதில் கிடைக்கும் மீன்கள் ஆகியவற்றைக் கொண்டுவந்து புதிதாகச் சமைத்துத் தம் ஆட்களுக்குக் கொடுத்தார். இவ்வண்ணம், கொடிய குளிரையும், அச்சமூட்டும் புயலையும் பொருட்படுத்தாமல் நாள்தோறும் சென்று புதிதுபுதிதாகப் பறவைகளையும் மீன்களையும் பிடித்துக் கொண்டுவந்து கொடுத்ததால், அக்கப்பலாட்கள் விரைவில் நோய் நீங்கப்

பெற்றனர். பனிப்படலமும் கரைந்து கலம் செல்லுமாறு நீர் மயமாகக் கடல் மாறியதும் அமண்ட்சன் மேற்கொண்டு தென் முனை காணச் செல்லாமல், நேரே நார்வே திரும்பினர்.

நார்வே மீண்ட அமண்ட்சன், ஈர்க்கும் திறன் (Magnetism), காற்று நிலை முதலியவற்றினை ஆராய்ந்தறியும் கலையைப் பயிலுதல் வேண்டுமென விருப்பங்கொண்டு, வான் நியூமேயர் என்னும் ஜெர்மன் நாட்டறிஞரிடம் சென்று தம் ஆவலை வெளியிட்டார்; வட தென்முனைகளைக் காணத் தாம் பேரவாக்கொண்டிருப்பதால், அதற்கு இக்கலை துணைபுரியுமாகலின், பயில அவாக்கொண்டு வந்ததாக அந்த அறிஞரிடம் தெரிவித்தார். வான் நியூமேயர் அமண்ட்சனின் ஆர்வத்தையும் அறிவாற்றலையும் கண்டு மகிழ்ந்து, அவர் மேற்கொண்ட தொண்டினைச் சிறப்புற ஆற்றி முடிக்குமாறு தூண்டினர்; உற்சாகமூட்டினர்; 'உலகம் புகழத் தக்க தொண்டு இதனினும் வேறில்லை' என்று ஊக்கமூட்டினர்; அமண்ட்சன் விரும்பிய கலைகளைக் கற்பித்தார்.

இவ்வண்ணம் வான் நியூமேயரிடம் புதிய கலைகளைப் பயின்ற அமண்ட்சன், எத்தகைய கொடிய இடுக்கண் நேரினும், தம் துணைவர்களுள் பலர் மாள நேரினும், இம்முறை எங்ஙனமேனும் வடமுனையைக் கண்டே மீள்வதெனும் உறுதி பூண்டார்.

இத்தகைய மனவன்மையுடன் 1903-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16-ஆம் நாள், தக்கதொரு சிறுகலத்தை அமர்த்தி, அறுவரைத் தமக்குத் துணைவர்களாகக்கொண்டு, வடமுனை காணும் பயணத்தைத் துவக்கினர்; சில நாட்கள் கடற் பயணம் செய்த பிறகு, பீல் கடலிணைப்பு என்னுமிடம் சேர்ந்தார். அதுவரை அவருக்கு வழி அறிய, வழிப்படங்கள் இருந்தன. அதற்குமேல் எவரும் சென்றதில்லையாகலின், வழிப்படங்களில்லை. எனவே, மிகுந்த விழிப்

புடன் அமண்ட்சன் கலஞ் செலுத்திச் சென்றார். வழியோ பேரச்ச மூட்டுவதாகவிருந்தது. பனிப்பாறை மிதப்புக்கள் பலவிடங்களில் காணப்பட்டன. வானளாவிய மலைபோன்ற பனிக்கட்டிகள் மிதந்துகொண்டிருந்தன. இந்நிலையில், ஒரு நாள் கடும் பனிப்புயல் வீசியது; அப்பெரும் புயலைச் சிறு கலம் தாங்கொணமல் நிலையிழந்து அங்குமிங்கும் ஆடி ஒரு பாறையின் ஓரத்தில் மோதியது; துடுப்புகள் அச்சினின்று கழன்றுகொண்டன. தங்களுக்கு இறுதி வந்துவிட்ட தெனக் கலத்திலிருந்தவர்கள் எண்ணினர்; அமண்ட்சனே தாம் மேற்கொண்ட பணியினை முடிக்காமலே உயிரிழக்க நேருவது குறித்து வருந்தினர். இந்நிலையில் மற்ருெரு பேரலையால் கலம் உந்தப்பட்டுப் பாறையினின்று அகற்றப் பட்டதுடன், அச்சினின்று கழன்ற துடுப்புக்கள் மீண்டும் அச்சில் பொருந்தின. இதைக் கண்ட கப்பலாட்கள் கலத்தி னடியில் ஓட்டை ஏதேனும் ஏற்பட்டதோவெனச் சோதித் தனர்; கலத்திற்கு எவ்வகை ஊறும் நேரிடவில்லை என அறிந்து பெருமகிழ் வெய்தினர்; பிறகு, கலத்தைச் செலுத்திச் சென்று, (இப்போது வில்லியம் அரசர் தீவு எனப்படும்) நிலப் பகுதியைக் கண்டு, கலத்தைக் கரை சேர்த்தனர். குளிர்காலம் துவக்கிக் கடுங்குளிர் வீசிய துடன், கடலும் உறையத் தொடங்கியபடியால், குளிர் காலத்தை அந்நிலப் பகுதியிலேயே கழித்துவிட்டு, கோடை யில் பயணந் துவக்குவதெ தன அமண்ட்சன் முடிவு செய்தார்; அத்தீவில் ஈர்க்கும் திறனை ஆராய்தற்கென்று ஆய்கூடம் ஒன்றை அமைத்துக்கொண்டார்.

அமண்ட்சனும் அவர் துணைவர்களுமாக அடிக்கடி உட் பகுதிகளுக்குச் சென்று வடமுனைக் கரடிகள், கலைமான்கள் முதலியவற்றை வேட்டையாடி உண்டுவந்ததன் மூலம் கடற் காய்ச்சல் பீடிக்காமல் தங்களைக் காத்துக்கொண்டனர்.

ஒருநாள் வேட்டைக்குச் சென்ற அமண்ட்சன், கலை மான் தோலுடுத்து வில்லம்புடன் கூடிய குள்ளத் தோற்ற

முடைய மக்கள் சிலரைக் கண்டார். அவர்கள் அப்பனிப் படல நாட்டில் வாழ்மக்கள். அவர்களுடன் அமண்ட்சன் நட்புக்கொண்டாடி, அவர்களுக்குத் தம் ஆய்கூடம், கலம் முதலியவற்றைக் காட்டினார். அவர்கள் அவற்றை யெல்லாம் கண்டு வியப்புற்றனர்.

அந்த எஸ்கிமோ மக்கள், பனிப் பாறைகளை உடைத்து அடுக்கித் தங்களுக்கு இருப்பிடம் அமைத்திருந்தனர். குட்டையாக, அரை முட்டையைக் கவிழ்த்து வைத்த வகையில், குந்திச் செல்ல வழியுடைய வாயில் உடையனவாக, எஸ்கிமோக்களின் இல்லங்கள் அமைந்திருந்தன. கலைமான்—கரடிகளின் தோல்களை உரித்தே அவர்கள் உடையணிந்திருந்தனர். அவர்களின் உணவு அவ்விலங்குகளின் இறைச்சியும் மீனுமே. அவற்றின் கொழுப்பை அவர்கள் விளக்கெரிக்கப் பயன்படுத்தினர்; எலும்புகளைக்கொண்டு, வில், அம்பு போன்ற வேட்டைக் கருவிகள், ஆடை தைக்கும் ஊசிபோன்றவைகளைச் செய்து வைத்திருந்தனர். எஸ்கிமோ மக்கள் அமண்ட்சன் குழுவினருடன் நட்புரிமை பாராட்டினர்; வேண்டிய அளவு விலங்குகளை வேட்டையாடிவந்து கொடுத்து உதவினர்.

பிறகு கோடைக்காலம் வந்து, கடற்பனி கரைந்தவுடன், 1905-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் அமண்ட்சன் குழுவினர் மீண்டும் புறப்பட்டு வடக்கே சென்றனர். வழியிலே ஆழமற்ற பகுதிகளையும் பனிப்படலங்களையும் கடந்து நீண்ட பயணம் செய்தபிறகு, திமிங்கில வேட்டைக் கப்பல்கள் பலவற்றை ஒருநாள் கண்டு, தாம் வட அமெரிக்காவின் வடமேற்கிலிருக்கும் அலாஸ்காவின் வடகரையிலுள்ள வட கடலில் இருப்பதறிந்தார். வடமுனை காணவிடினும் வட மேற்குக் கடற் பாதையையேனும் கண்ட அளவில் அமண்ட்சன் மகிழ்ந்து, அதனுடன் தம் தாய்நாடு திரும்பினார்; தாம் கண்ட உண்மைகளைத் தம் நாட்டவர்க்கு அறிவித்தார்.

1910-ஆம் ஆண்டு அமண்ட்சன் உலகின் தென் முனை காணுவதென்னும் உறுதியுடன் முன்னைவிடத் தக்க முன்னேற்பாடுகளுடன், தென் முனை நோக்கிப் பயணமானர். முன்னைய பட்டறிவினால் பல இன்னல்களை எளிதில் கடந்து தென் விக்டோரியாலந்து அடைந்து, அதற்கு மேல் கலம் செல்ல முடியாதவாறு கடல் உறைந்திருந்ததால் தென் முனை நோக்கி விரைந்து நடந்து சென்றார். இவரைப் போலவே ஸ்காட் என்பாரும் தென் முனை காணப் பயணப் பட்டிருப்பதாக அறிந்த அமண்ட்சன், தென் முனையை முதலிற் காணுவது தாமாக இருத்தல் வேண்டும் எனும் அவா உந்தப் பெற்றவராக விரைந்தார். இம்முறை கோடையில் அமண்ட்சன் தெற்கு முனை நோக்கி நடந்தபடியால் இன்னல்கள் சற்றுக் குறைந்திருந்தன. எனினும் சில சமயம் அவர் நடந்து செல்லும் தரை ஓடுவதுபோலத் தோன்றியது. அதற்குக் காரணம் பெரும்பாறையாக உறைந்த கடல் நீர், அடிமட்டத்திலுள்ள நீரில் மிதப்பதனால் ஏற்பட்ட அசைவேயாகும். சில சமயங்களில் பனித் துகள் வாடைக் காற்றில் கலந்து வலித்து வீசும்போது கல்லாலடிப்பது போன்றிருந்தது. அக்காற்றாலெழுந்த ஓசை காது செவிடுபடச் செய்தது. பனிப் படலம் செறிந்துள்ள அப்பகுதியின் ஒளி கண்களை ஒளியிழக்கச் செய்தது. மேடு பள்ளமாக, கூரிய விளிம்புகளுடன் கூடிய பனிப் பாறைக் கற்களாகப் பாதை அமைந்திருந்தது, கால்களைக் கடுக்கச் செய்தது. அங்கு வீசிய கடுங்குளிர்க் காற்று உதிரத்தை உறையச் செய்தது.

இவற்றினையெல்லாம் பொருட்படுத்தாமல், அமண்ட்சன் தென் முனை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்; போகும் வழியில் ஆங்காங்கே தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சிறிது சிறிதாகப் புதைத்து வைத்து அவ்விடங்களில் அடையாளமாகக் கொடிகளை ஊன்றி வைத்தார். இவ்வண்ணம் எவ்வின்னலையும் பொருட்படுத்தாமல் தம் குறிக்கோள் ஒன்றனையே கருத்திற் கொண்டு,

தொடர்ந்து நடந்து 1911-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ஆம் நாள் அமண்ட்சன் தென் முனையைக் கண்டுபிடித்தார்; தம் முயற்சி வெற்றி பெற்றதறிந்து இறும்பூதெய்தினர். அங்குச் சுற்றுப் புறங்களில் காணப்பட்ட பொருள்கள், காற்றின் நிலை, தட்ப அளவு முதலியவற்றினை நன்கு ஆராய்ந்து குறித்தார். பிறகு கலம் நிறுத்திய விடத்திற்கு வந்து சேர்ந்து, தம் துணைவர்களுடன் நார்வே மீண்டார். முதன் முதலாக உலகின் தென் முனையைக் கண்ட அறிஞர் ரோவால்டு அமண்ட்சன் ஆவார். இம்முயற்சியில் இறங்கிய ஸ்காட் என்பார் 1912-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 17-ஆம் நாள் உலகின் தென் முனையைக் கண்டார். இவ்விருவருக்கிடையில் 33 நாட்கள் வேறுபாடு.

ரோவால்டு அமண்ட்சன் இடையறா ஊக்கமும், மன வன்மையும், சலியா துழைக்கும் ஆற்றலும், எவ்வின்னல்களையும் பொறுத்துக் கொள்ளும் குணமும் உடையவராக விளங்கினமையால்தான் இவ்வரும்பெருஞ் செயலை வெற்றியுடன் செய்து முடித்து உலகப் புகழ் பெறல் முடிந்தது.

தென்முனை கண்டு உலக அறிஞரின் பாராட்டுதலுக்குரியவரான ரோவால்டு அமண்ட்சன், தம் நாடு சென்றதும், வடமுனை காண மீண்டும் விழைந்தார். ஆனல் 1909-ஆம் ஆண்டு ஏப்ரில் மாதத்தில் கமாண்டர் பியரீ என்பார் வடமுனை கண்டுவிட்டார் என்றறிவிக்கப்பட்டும் அம்முனை காணும் ஆவல் உந்தப் பெற்ற அமண்ட்சன் வான ஊர்தியிற் சென்று வடமுனை கண்டு மீண்டார். பிறகு மூப்பின் பயனைத் தம் நாட்டில் ஓய்வு பெற்றிருக்கையில் வட முனைப் பகுதியில் சில ஆராய்ச்சிகளை நடத்தச் சென்ற தம் தோழர் ஒருவர், குறிப்பிட்ட காலத்துக்குள் வரவில்லை என அறிந்து அவரைத் தேட அமண்ட்சன் மீண்டும் வட முனை சென்ருர்; ஆனல் மீண்டாரிலர். அமண்ட்சனைத் தேடப் பல தேடு குழுவினர் சென்று பார்த்தும் பலனற்றுத் திரும்பினர். ரோவால்டு அமண்ட்சன் வட முனைப் பகுதியில் எங்கோ பனிப்படலத்தில் மறைந்தார்.

## 16. சேரமான் கணைக்கால் இரும்பொறை*

[திரு. வ. சுப. மாணிக்கம் அவர்கள், M. O. L.]

[காலந்தாழ்த்துப் பகைவர் கொண்டுவந்த தண்ணீரைக் குடியாமல் சேரமான் கணைக்கால் இரும்பொறை உயிர் நீத்த செய்தியை நாடகம் ஆக்கிக் காட்டுவது.]

| |
|---|
| களம் :—சிறைக்கோட்டம் |
| கூற்று :—காவலர்கள், அமைச்சர், மருத்துவர், சேரமான். |

இளையான் : அண்ணா, முன்பாவது 'தண்ணீர் தண்ணீர்' என்றார். இப்போது அந்தக் குரலுங் கேட்கவில்லையே! நாடி ஒடுங்கிவிட்டதோ, பாவம்! என் மனமும் வெண்ணெய் போல உருகுகின்றது.

கிழவன் : தம்பி, அப்படி எளிதாய் நினையாதே. நம்மைப் போலவா அரசர்கள் உடம்பு இருக்கும்? அடித்துப் போட்டாலும், உயிர் போவதற்கு ஆறு திங்கள் செல்லுமே! வாளைச் சுழற்றிச் சுழற்றி நாடி வலுப்பட்டிருக்கும். சிறு குழந்தைபோல உயிர் இழுத்துக்கொண்டிருக்கும்; அவ்வளவுதான். நாடகத்திற் செத்தவனைப்போலப் பிழைத்துக்கொள்வார்கள்.

இளையான் : எனக்கு எல்லாம் விளங்க நீதான் சொல்லவேண்டும். சிறைக்குள்ளே இருக்கிறவர் அரசர் தாமே?

கிழவன் : அதிலென்ன தம்பி, ஐயம்? ஆம்; இவர் ஒரு பெரிய வேந்தர். நாமெல்லாம் பிறந்த இந்தப் பூம்பொழில் நாட்டிற்குத் தமிழகம் என்பது பெயர். இது முப்புறமுங் கடல் முழங்கும் ஒரு பெரிய உலகம். இந்நாட்டில் மூன்றில் ஒரு பகுதிக்கு இவர் அரசர். நம் மன்

*இஃது 'இனிய சாவு' என்னும் நாடகத்தில் ஒரு பகுதி.

னர் ஆளுகின்ற வளநாட்டிலே நெல் மிகுதி. இவர் ஆளுகின்ற மலை நாட்டிலே கல் மிகுதி.

இளையான்: அப்படியா நிலைமை! அவ்வளவு பெரிய மனிதரா இவர்! இப்படித் தவித்த வாய்க்குத் தண்ணீரில்லாமல் உயிர் விடுகிறாரே! அடடா! இது நிரம்பக் கொடுமை! அரசராக நாமெல்லாம் பிறவாதது நல்லதென்று சொல்லு. நாடில்லாவிட்டாலும், நினைத்தபோதெல்லாம் நாம் வேண்டியவளவு தண்ணீராவது குடிக்கலாம். (கையிலிருந்த நீரைக் குடிக்கிறான்) அரசராகப் பிறந்தவருக்கு நாடிருப்பதாலே தண்ணீர்கூடக் கிடைக்கவில்லை. ஐயோ பாவம்! என்ன உலகம்!

கிழவன்: வேலா, நீ நாவிலே பேசுவதொன்று, நடப்பிலே செய்வதொன்று.

இளையான்: வில்லியண்ணே, அப்படி மலைவாக என்ன செய்கிறேன்? பேசுவது போலே செய்யத்தான் முடியுமா?

கிழவன்: அது முடியாவிட்டால், செய்வது போலப் பேசித் தொலையேன்; அதுவுமா முடியாது? செய்ய முடியாதவன் நாவை வெளியே நீட்டலாமா? உன் வீட்டிலே பச்சைப் பசுங்கிளியொன்றைக் கூண்டிலே அடைத்து வைத்திருக்கிறாயே! அது நல்லதா? பாவமல்லவா?

இளையான்: (வெடி சிரிப்புற்று) பாவமாவது சீவமாவது! இதிலென்ன பாவம் வந்துவிட்டது? கொன்றால் பாவம்; தின்றால் போகும். வெயிலிலே பறக்காமே, இரை தேட எங்கும் அலையாமே, இரை கொடுத்து, நிழலில், யாருங் கூட்டிப்போகாமே வைத்திருப்பதா பாவம்? இதைப்போல நல்ல காரியம் எங்கே பார்க்க முடியும்?

கிழவன்: ஒன்றும் தெரியாதென்று சொல்லி, என்னென்னவோ பேசுகிறாயே? அப்பாடேயென்று காவலை

விட்டுவிட்டு, வீட்டிற்கு எப்பொழுதடா போவதென நினைக்கிறாயே, ஏன்? இங்கு வெயிலிலேயா நிற்கிறாய்? அல்லது, பட்டினி கிடக்கிறாயா? அல்லது உறங்காமலாவது இருக்கிறாயா? ஏன் வீட்டை நினைக்கிறாய்?

இளையான்: (நாணமல்) அவள் காதலொடு எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். என் சின்ன மகள் 'அப்பா' என்று இனிமையாக மடிமேல் விழும். எங்கள் இனத்தாரெல்லாம் 'தம்பி, தம்பி' என்று வந்து கூடுவார்கள். வேறெதற்காக வீட்டிற்குப் போக நினைக்கிறேன்? தூங்குவதற்காகவா? மறந்திருந்தேன்! நினைவுபடுத்திவிட்டுவிட்டாய். அண்ணா, வீட்டுக்குப்போய் இதோ நொடியில் வந்துவிடுகிறேன்.

கிழவன்: நல்ல தம்பியப்பா, நீ. என்ன நடக்கிறதென்று பார்க்க வேண்டாவா? தனக்கு நல்லது தேடிக்கொள்ள ஒருவனுக்கு அறிவிருக்கிறது. இன்னொருவர்க்கு நல்லது செய்வதென்றால் அவனுக்கு எங்கிருந்துதான் அறியாமை வருகிறதோ, தெரியவில்லை. உனக்கு இனத்தோடே இருக்கவேண்டுமென்று ஆசையிருக்கிறதுபோலத் தானே அந்தக் கிளிக்கும் இருக்கும்? இருப்புக்கம்பி போட்ட இருட்டுச் சிறைக்குள் நடமாட முடியாதபடி சாகும் வரை உன்னைத் தனியாக அடைத்துவிட்டு, நூறாயிரம் பொற்காசுகள் தந்தால், ஆய் என்று இருப்பாயா? இருக்க முடியுமா? இனம் இனத்தோடிருப்பதுதான் உலக வாழ்வு. நீ அடைத்திருக்கும் அக்கிளிக்கு ஞாலமுழுதும் வீடு. வானமெல்லாம் அதன் அரச வீதி. சோலைப்பரப்பு அதன் குடை. பழமெல்லாம் அதன் உணவு. ஆறுகளெல்லாம் அதன் நீர்க்குடம். பார்! எவ்வளவு விடுதலையாக, யார்க்கும் தீங்கு செய்யாது, தன்னியற்கைப்படி சுற்றி மகிழ்ந்த கிள்ளையை, ஒரு சாண் கூண்டே உலகமாக அடிமைப்படுத்தி அடைத்திருக்கும் உனக்கு உரிமை என்றால் என்ன தெரியும்? 'அஃது ஒரு தூக்கு என்ன விலை?' என்று கேட்பாய். கொடுமை! கொடுமை! நீ இனத்தோடிருப்பது

போலக் கிளியும் தன்னினத்தோடு சேரவேண்டாவா? நீயும் உன் பெண்டுபிள்ளைகளும் கிளிக்கு இனமா? உன் னுசையால் அது அடைபட்டது. அது செய்த குற்றமிருந் தாற் சொல்லு. வீடு போய், அக்கிளியைப் பார்; 'எப் பக்கம் சிறிது இடைவழி இருக்கும்? அப்பக்கமாகப் பறந் தோடிப் போய்விடலாம்!' என்று சுற்றுமுற்றும் பார்த்து மறுகுவதைத் தெரிந்துகொள்வாய்.

**இளையான்** : என் வீட்டுக் கிளி முன்னைப்போலில்லை; என் சொற்படி இப்போது முற்றுங் கேட்கும். சொன்ன படி கேளாவிட்டால், உணவு கொடுக்கமாட்டேன், நீர் வைக்க மாட்டேனென்பது அதற்கு இப்போது விளங்கி விட்டது; எங்கள் வீட்டிலே எல்லாருஞ் சொன்னபடி கேட் டுப் பணிந்து நடக்கும். அடக்கமுடைமையின் அருமை தெரிந்த கிளி அது.

**கிழவன்** : காட்டுக் கிளியை வீட்டுக் கிளியாக்கிவிட் டாய் என்று சொல்லித் தொலை. நீ இப்போது வைத்து வளர்ப்பது கிளியன்று (கை தட்டிச் சிரிக்கிறுன்.)

**இளையான்** : (பதறி) ஐயையோ! அப்படியென்றுல் அது என்ன? கிளியென்று நினைத்தல்லவா பிடித்து வந்தேன்?

**கிழவன்** : உண்மையாகச் சொல்கிறேன். வேலா, நீ வைத்திருப்பது மனிதக் கிளி. அதனை உன்னைப்போல ஆக்கிவிட்டாய். அதனுலேதான், நீ தலையை ஆட்டிப் பேசு வதுபோல உன் கிளியும் ஆட்டிக்கொண்டு பேசுகின்றது. உன் மகனுக்கு, வே. கீரன் என்பது பெயரல்லவா? அதைப் போலவேதான் உன் கிளிக்கும், வே. கிளி என் பது பெயர்.

**இளையான்** : நீ இதுவரை சொன்னதைக் காட்டிலும், இப்பொழுது சொன்னுய், பாரு, அது நிரம்பப் பொருத்

தம்! என் மனைவிபோலச் சில சமயம் பேசுகிறது. அதி லும் பாரு அண்ணா, நான் வீட்டிற்கு நேரஞ்சென்று போனால், என் மனைவி என்ன கத்துக் கத்துவாள் என்பது உனக்குத் தெரியுமே! அதைப்போன்றுகூடக் கத்தத் தொடங்கிவிட்டது. எனக்குச் சினம் வந்தால், 'ஆய்! ஊய்!' என்று கூக்குரலிடுவேனென்பது யாருக்குத்தான் தெரியாது? அதையும் அந்தக் கிளி கற்றுக்கொண்டிருக் கிறது. எங்கள் வீட்டிலே கற்கவேண்டியவற்றையெல்லாங் கசடில்லாமல் கற்று, கண்ட ஆளுக்குத் தக்கபடி, கற்றபடி யும் நிற்கிறது. இரண்டு முறை சொல்ல வேண்டுமென்ப தில்லை; எதனையும் ஒரே முறையில் படித்துக்கொள்ளும் தெய்வத் தன்மையுடைய கிளி, அண்ணா, அது.

கிழவன் : (தன் தலையில் அடித்துக்கொண்டு) அட, அறிவறை! கிளி உங்களைப் போலப் பேச வேண்டுமென்றா பிடித்துக்கொண்டு வந்தாய்? உள்ளதைச் சொல்லு.

இளையான் : அது இல்லவேயில்லை; அதன் குக்கூ, கிக்கீ செவிகளுக்குத் தேன்போல இருந்தமையாலே, பக் கத்திலிருந்தால் நல்லதென்று பிடித்துவந்தேன்.

கிழவன் : மனைவிபோல அது பேசுகின்றது என்றால், அவள் அருகில் இருக்கும்போது கிளி உனக்கெதற்கு? உன்போல உளறுகிறதென்றால், நீ இருக்கும்போது அவ ளுக்குத்தான் கிளி எதற்கு?

இளையான் : நன்றாகப் பேசுகிறாயே! நீ சொல்வதைப் பார்த்தால், கிளி வேண்டுவதில்லையென்பது புலப்படுகின் றது. பழையபடி முன்போலவே பறக்க விட்டுவிடவா?

கிழவன் : நீ மிக நல்லவனாய் வந்துவிட்டாய். நான் சொல்லுவதைக் கேளு. நல்ல பிள்ளை! (முதுகில் தட்டிக் கொடுக்கிறான்.) கிளி உன்போலவும் உன் மனைவிபோல வும் வேறு யார்போலவும் பேசக்கூடாது; கத்தக்கூடாது. அது தன்னியற்கைப்படி கூவ வேண்டும். கிளியைக் கிளி

யோடு பழக்கவேண்டும். மணல்மேல் இரு குழந்தைகள் தம்முள் மழலை மிழற்றுவதைக் கேட்டின்புறுதல் போலச் சோலையிடைக் கிளிகள் தம்முள் கூவிக்கொள்வதைக் கேட்பதே சிறந்த இன்பம். கூண்டில் அடைபட்ட கிளியோசை, இதோ பார், சிறைக்குள் கிடக்கும் அரசர் குரலை ஒக்கும். இனியாவது நடப்பைத் தெரிந்துகொள். கிளியை நீ சொன்னபடி சொல்லச் செய்யவேண்டுமென்பது நின் னுசை. இவ்வரசரைத் தம் சொற்படி கேட்கச் செய்ய வேண்டுமென்பது நம் வேந்தர் ஆசை. அதனுலேதான், நீ கிளிக்குச் செய்வது போலச் சோறுந் தண்ணீருங் கொடுக்காதிருக்கிருர்கள்.

இளையான்: இவையெல்லாம் நீ எப்படி அண்ணு அறிந்திருக்கிருய்? நாமிருவரும் தொழிலாளிகள் தாமே? நீ மாத்திரம் எங்கே படித்துக்கொண்டாய்? பள்ளிப் படியிலே விளையாட்டிற்குக்கூட அடி வைத்தறியேனென்று வேறு சொல்லுகிருய்.

கிழவன்: நாலு பெரிய மக்கள் பேசுகின்ற பக்கம் செவியைச் சாய்த்தால், அறிவு நாய் மாதிரி ஓடி வருகின்றது. தெரிய வேண்டுமென்று மட்டும் நினைப்பிருந்தால், பிள்ளை முழுதும் இன்பம்போல, உலகமுழுதும் அறிவு தானே! எந்தத் தொழிலிலேயிருந்தாலும், நாலுந் தெரிந்துகொண்டாற்ருன், நம்மை விலங்கென்று நினைக்கமாட்டார்கள். என்னிடத்திலே நீ கேட்டறிந்தது போல, நானும் இப்படித்தான் நாளும் நாளும் பலர் பேசுவதைக் கேட்டு அறிந்திருக்கிறேன். 'படிக்காவிட்டாலும் நல்லவர் பேசுவதைக் கேளப்பா,' என்று ஒரு பெரியவர் சொல்லியிருக்கிருர் என்று, இன்னெரு பெரியவர் மூன்ருவது பேர்வழிக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். அந்த வழியிற் போன எனக்கு அச்சொற்கள் காதிலே விழுந்தன. அன்று முதல் நான், அந்தப்படியே, யார் சொன்னுலும் கேட்டு அறிவுச்

9

செல்வத்தைத் திரட்டிக்கொள்ளுகிறது பழக்கம். அதனாலே குடி முழுகிப் போகவில்லை. நல்லது நல்லதுதானே?

இளையான்: (பெருமூச்சு விட்டு) அண்ணா, நீ எவ்வளவோ கரைகண்டவன். அவர்களைப்போல எனக்கு நீதான் பெரியவன். நான் இதுவரை தெரிந்தும் தெரியாமலும் முரட்டுத்தனமாகவோ—சிறுபிள்ளைத்தனமாகவோ, ஏதுஞ் செய்திருந்தாலும் பொறுத்துக்கொள். வீட்டிற்குப்போனவுடன் முதல்வேலை என்ன தெரியுமா? கிளியைக் கூண்டிலிருந்து எடுத்துப் பிடித்தவிடத்திலேயே கொண்டுபோய் விட்டுவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன். அப்புறம் என்னைக் குற்றஞ் சொல்லமாட்டாயே? நம்மரசரும் நான் செய்ததுபோல இவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்வாரா என்று பார்க்கலாமே! என்ன அண்ணா, இன்னுந் தண்ணீர் வரவில்லை? கிணறு வெட்டித் தண்ணீர் எடுக்கிறார்களென்று நினைக்கிறேன்.

கிழவன்: (சிரித்துக்கொண்டு) நல்ல தம்பி, நீ சொல்வது பொருத்தம். சோழ நாட்டிலா கிணறு வெட்டித் தண்ணீர் எடுக்கிறார்கள்? தோண்டினாற் போதுமே! என்றாலும், 'தண்ணீர் கொடுக்கலாமா, கூடாதா?' என்று அரசர் அமைச்சர் எல்லாருமிருந்து ஒரு தீர்மானத்திற்கு வருவதற்குக் கிணறு வெட்டுகிற அளவு காலம் பிடிக்கும்.

இளையான்: அரசருடைய தேர் வருகிற ஓசை கிண் கிண் என்று கேட்கிறதே!

கிழவன்: என் கண்ணுக்கு வருகிறதே தெரிகிறது.

(அமைச்சரும் மருத்துவருந் தேரிலிருந்து இறங்கிச் சிறையகம் புகுகின்றனர். உள்ளே இரும்பொறை மூலையில் சாய்ந்தவண்ணங் கிடக்கிறான்.)

அமைச்சர்: (வருந்தி) என்ன இது! மெய்ம்மறந்து கிடக்கின்றாரே!

மருத்துவர் : (நாடியைப் பார்த்து) போர்ச் செய்கையாலும் குருதியொழுக்காலுஞ் சோர்ந்துகிடப்பதைத் தவிரப் பிறிதில்லை. அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. நாடியோட்டம் நன்றாக இருக்கின்றது.

[முகத்தில் பனி நீர் தெளிப்பவே, பொறைக்கு ஒரு தெளிவு பிறக்கிறது. நீர்வேட்கையைத் தணிக்கும் பொருட்டுச் சேரன் தானே ஏற்றுக் குடிக்கும் நிலையிலிலன் என்று கருதிக் குவளை நீரை உட்கொள்ளும்படி மருத்துவர் அக்குவளையை வாயில் சாய்வாகச் சார்த்துகிறார். இரும்பொறை வாய்க்குள் நீர் புகாதபடி இதழ்களை வைத்துக்கொண்டு, அக்குவளையைத் தன் கையில் வாங்கிக்கொள்ளுகிறான். அதன்கண் நீரைப் பார்த்த வண்ணமே குடியாமல் இருக்கிறான்.]

மருத்துவர் : அரசரே, நும் வல்லுடற்குச் சிறிதே அயர்ச்சி பிறந்திருக்கின்றது. ஒரு குவளை நீர் குடித்தாற் போதும்; தெளிவுண்டாகும். குடித்தருள்க. பிற பின்பு செய்வேன்.

அமைச்சர் : வேந்தரே, நும்மரசவுடலைப் பேணுதற்கென நட்பிற்குரிய எம் வேந்தரால் ஏவப்பட்டு வந்த முதலமைச்சன் யான். எம் வேந்தர் உம்பால் மதிப்பும் நட்பும் உடையர் என்று சொல்லப் பணித்தனர். ஈண்டு என்னோடு வந்திருப்பவர் நுமக்கு ஆவன செய்ய வந்த அரச மருத்துவர். முன்னரே அறிந்து நீரைக் கொண்டுவராத எம் பிழை பொறுத்து, இனியுங் கைக்கொண்டிருந்து காலந் தாழ்க்காது, இப்பனிநீர் அருந்துதல் வேண்டும். பின்னர், எம் வள்வர் விருந்தினராக அழைக்கும் அழைப்பினையும் ஏற்றுக்கொண்டு அரண்மனைக்கு இப்பொழுதே எங்கூட வந்தருளுதல் வேண்டும். எதிர்கொள்ள அவர் காத்திருப்பர், (கை கூப்புகிறார்.)

பொறை : (அமைச்சர், மருத்துவர் முகங்களைப் பாராது தன் கண்ணீர் குவளைத் தண்ணீரில் விழுந்து நிறைந்து

வழியும்படி அழுதவனுய்க் குவளை நீரையே பார்த்த வண்ணம்) ஆ! சேரர் குலம்! ஆ! என்னுயிர்ச் சேரர் குலம்! பெருந்தேவி உயிர்க்குங் கரு இறந்து பிறப்பினும், முற்ருக் கரு, பருவகாலத்திற்கு முன் உறுப்பற்ற ஊன்பிண்டமாகக் கருப்பையினின்று வீழினும், போரிற் பகைவரைக் கொன்று அவரால் கொல்லப்பெற்ற அரசர்க்கு ஒப்பாகவே மதித்து, இறந்த கருவையும் வீழ்ந்த பிண்டத்தையும் வாளால் வெட்டுவது சேரர் குலம்! நோய் தாக்கக் கண்மூடி வீட்டில் மடிந்து மண்ணிற்கு உணவாகாது, பகைவர் வாள் உடம்பொடு நட்பாடப் போரில் கண்மூடாது விண்ணிற்கு விருந்தாவது சேரர் குலம்! சான்ருேர் பலருந் தன்னேடு வடக்கிருக்கும்படி, மார்பு இறுதிப் புண்ணை முதுகின் முதற் புண்ணென்று நாணி, உயிர்காவாது மானங்காத்த சேரலாதன் பிறந்தது சேரர் குலம்! உடன்வந்த மலைநாட்டு மறவரெல்லாருந் தொகையாக மடியவும், அதனைப் பார்த்தும் மடியாது, வயிற்றுத் தீத் தணிய, நீர்கேட்டு மருத்துவரை வரவழைத்த யான் பிறந்ததுஞ் சேரர் குலமோ? வீரரெல்லாம் விண்ணிற்கு விருந்தாக மண்ணில் இப்பகைவனுக்கு விருந்தாகும் யான் பிறந்ததுஞ் சேரர் குலமோ? காவிரி நீர் குடிக்கக் கடறும் மலையுங் கடந்து நாற்படையோடு வந்த யான் பிறந்ததுஞ் சேரர் குலமோ? சீ! சீ! யானும் அக்குலமும் இமயமும் குமரியும் போல்வம்; மண்ணும் வானும் போல்வம். என்னுயிர் எனக்குப் பெரிதாயிற்று; போர் முரசு செவி கேட்க, வில்லைக் கண்பார்க்க, நாணிற் கைசெல்லும் குழவிகள் ஈனுஞ் சேரநாடு எனக்குச் சிறிதாயிற்று. என்னுயிர் எனக்குப் பெரிதாயிற்று; வயப் புலித் தாக்கிற்குப் பின்வாங்காது மருப்பினுற் குத்தும் மதயானை வாழுஞ் சேரநாடு எனக்குச் சிறிதாயிற்று; என்னுயிர் எனக்குப் பெரிதாயிற்று. புலவர் பப்பத்துப்பாடல் பாடுவதற்குப் பொருளாகிய மறம் பெருகுஞ் சேரநாடு எனக்குச் சிறிதாயிற்று. (பெரிதும் அழுகிருன். இருவரும், 'என்னுமோ!' என்றஞ்சுகின்றனர்.)

(வெகுளிச் சிரிப்போடு) 'இதோ, என் கையிலிருப்பது என்னுயிர் வாழ்விக்க வந்த தண்ணீர். அன்றன்று; என் உடம்பிலிருந்து எடுத்துச் சோழன் காட்டுஞ் செங்நிறப் புண்ணீர். இதோ, என் கண்முன் காண்பது, நிலையா வுயிரை நிறுத்த வந்த தண்ணீர். அன்றன்று; 'சேரா! இன்னுமா உயிர் உனக்குப் பனங்கட்டி; உயிர் விட்டு இனியாகிலும் எம்மொடு சேர்க!' என்று வானோர்க்கு விருந்தாய எம் முன்னோர் வடித்த குருதிக் கண்ணீர். இதோ, யான் பார்ப்பது என்னுவை நனைக்கத் தந்த தண்ணீர். அன்றன்று; மலை நாட்டுத் தேனினும் இனிதெனக் கருதிய என்னுடலத்தை நிலத்திலிட்டுத் தெளிக்க வந்த மண்ணீர். இதோ, என் ஐவிரல்கள் பற்றியிருப்பது, என் வேணவா நீங்கக் காவிரி நாடன் விடுத்த தண்ணீர். அன்றன்று; 'நாட்டினுங் குலத்தினும் மானத்தினுங் காட்டில் உயிர் சிறந்ததெனக் கருதிய கணைக்காலா! நிலத்திற்கு இரும்பொறையே! உன்னிலை சேரர்க்கேயன்றித் தமிழக வேந்தர்க்கே இழிவன்றோ?' என்று நாணிய என் அருமை சோழப் பகைஞன் என்னுயிர் உண்ண விடுத்த உண்ணீர்; என் உயிர் உண்ணும் நீர் (சேரன் மெய்த்துடிப்பையும் முக மாற்றத்தையும் கண் வெறுப்பையுங் கண்டு, இருவரும் மனம் குழம்புகின்றனர். மருத்துவர் சேரன் கையைப் பிடித்துக்கொள்ளுகிறார். அமைச்சர் அவனை அணைத்துக் கொள்கிறார்.)

(உணர்ச்சி பெருக்) 'படைமடியப் போரிற்றோற்ற பின்னும் போகா என்னுயிர், இருட்சிறையில் தலைகுனிய நுழைந்தபின்னும் போகா என்னுயிர், நா வறள நீர் இரந்த பின்னும் போகா என்னுயிர், அந்நீர் வரத் தாழ்ந்தபின்னும் போகா என்னுயிர், வந்த நீரைக் கைக்கண் ஏந்திய பின்னும் போகா என் தமிழ்ச் சிற்றுயிர், அதனைக் குடிக்கு முன் பாவது போ..............(குருதிக் கொதிப்பு மேலிட்டு, மார் படைத்து மாய்கின்றான்.)

மான வீரனை சேரன் பெயர் வாழ்க!

# குறிப்புரை

## I. கடவுள் வாழ்த்து

திருவருட்பாவினை இயற்றிய இராமலிங்க சுவாமிகள் சிதம்பரத்திற்கு அண்மையில் உள்ள மருதூர் என்னும் ஊரிற் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் இராமைய பிள்ளை; தாயார் பெயர் சின்னம்மை. 5-10-1823-இற் பிறந்த இராமலிங்க அடிகள், குருவாயிலாகக் கடவுளைக் கண்டு அன்பு முதிர்ந்து அருட்பாக்கள் பாடினர். நல்லார்க்கும் பொல்லார்க்கும், கற்றூர்க்கும் மற்றூர்க்கும் இறைவன் அருளுவன் என்ற கருத்தை வற்புறுத்திச் சமரச சன்மார்க்கத்தைப் பரப்பிய இப்பெரியார், வடலூரில் ஞான சபை ஒன்றினை நிறுவிவிட்டு, 1872-இல் (தைத்திங்கள் புனர்பூச நாளில்) மறைந்துவிட்டார். இவர் பாடியருளிய பாக்களிற் பல எல்லா மதத்தினரும் ஒக்கப் பாடும்படி சமரச எண்ணம் அமைந்தவை. அப்பாடல்கள் திருவருட்பா என்ற தலைப்பில் வெளிவந்துள. இப்பெரியார் இயற்றிய 'ஜீவகாருணிய ஒழுக்கம்' என்ற உரை நடை நூல் விரும்பிப் படிக்கற்பாலதாகும்.

இறையே - சிறிதேனும்; இறை' என்பது இவ்விடத்தில் அரசு என்று கொள்ள வேண்டா; அடுத்த அடியில் 'அரசே' என்று வருதலால். இரும்பொருள் - பெரிய பொருள். 'உணர்வால் ஆம் பயன்' என்பதனேடு 'கற்றதனுல் ஆய பயன்' என்ற திருக்குறட் பகுதியை ஒப்பு நோக்குக. வன்பர் - வலியர்; கொடுமையுடையார். பரஞ்சோதி வடிவு - மேலான ஒளியோடு கூடிய வடிவம். வடிவேல் மணியே - கூரிய ஆயுதத்தையுடைய மணிபோன்ற சிறப்புடையோய்! துன்பத்திடர் - துன்பத்திட்டு; பொடியாக்கி - தூள் ஆக்கி; அழித்து. 'துணியாய்' என்றதனுல், அடியானுடைய பொருத்தமின்மையும் சிறுமையும் உணர்த்தப்பட்டன. இப்பாடப் பகுதி 5-ஆந் திருமுறை 'திருவருட்பேற்று விழைவு' என்பதிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

## II. காதை

### 1. நளவெண்பா

நளன் என்ற அரசனுடைய சரித்திரத்தை வெண்பாவாற் கூறும் நூல் 'நளவெண்பா' எனப்பட்டது. இதனை இயற்றியவர் புகழேந்தி என்னும் புலவர். இவர் ஏறத் தாழ எண்ணூறு ஆண்டு

சட்கு முன்னிருந்தவர். நளன் மாவிந்தம் என்னும் நகரத்தே இருந்து அரசாண்டவன். அவன் விதர்ப்ப நாட்டரசன் மகள் தமயந்தியை மணந்தான். பன்னிரண்டு ஆண்டு கழித்து ஒரு நாள், புட்கரன் என்னும் ஓர் அரசன் நளன் முன்னிலையில் விருது கட்டி வந்தான். 'அக்கொடி என்ன கொடி?' எனக்கேட்ட நளன், 'சூதில் வெல்லுங்கொடி' என்னும் விடை பெற்றுச் சூதாடத் துணிந்தான்; சூதாடி நாட்டை இழந்தான்; மனைவியொடும் மக்களொடும் நாட்டை விட்டுப் பிரிந்து போகும் வழியில், மக்களை மாத்திரம் மனைவியின் தந்தை இல்லத்திற்கு அனுப்பினான்; தமயந்தியொடு காடு புகுந்து, அல்லலுற்று, ஒரு பாழ் மண்டபத்தில் தங்கினான். அதற்கிடையே, அவன் மாய அன்னம் ஒன்றைப் பிடிக்கும் எண்ணத்தால் விட்டெறிந்த ஆடை பறி போயிற்று. தமயந்தியும் நளனும் ஒரே ஆடையை உடுத்துப் படுத்திருந்தனர். நளன் நள்ளிரவில் அவளைப் பிரிந்து செல்லத் துணிந்தான். இந்நிலையில், பாடப் பகுதி தொடங்குகிறது.

1. கருமை + இருள் - காரிருள்: ஈறு போய், ஆதி நீண்டு, இடையுகரம் 'இ' ஆயிற்று. ஏதிலன் போல் - அயலான் போல; புதியவன் போல.

3. மறுகி - வருந்தி.

4. அமளி - படுக்கை, இனமேதி - எருமைக் கூட்டம்.

12. பொரு முக வேல் - போர் முகத்து வேல் போன்ற; கூரிய வேலைப் போன்ற.

13. குழல் - கூந்தல், கார் - மேகம்.

15. வெண்மை + தோடு - வெண்டோடு, வெண்டோடன் - வெள்ளிய சங்கினால் ஆன தோட்டை அணிந்தவன், செம்பங்கி - சிவந்த தலை மயிர்.

16. இருள் ஈரும் பூணாள் - இருட்டினைப் பிளக்கும் அளவு ஒளியை உடைய அணிகளை உடையவள்; தமயந்தி.

17. இதில் வந்துள்ள உவமையிற் கூறப்படும் சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசன், புகழேந்தியை ஆதரித்த வள்ளல்களுள் ஒருவன். அவன் ஆதரவால் நளவெண்பாப் பாடப்பட்டது என்பார்கள்.

18. பகை - சிங்கம் புலி முதலாய பகை விலங்குகள்; காம்பு - மூங்கில்.

## 2. வில்லி பாரதம்

1800 ஆண்டுகட்கு முன் தமிழில் இயற்றப்பட்ட பாரதம் ஒன்று உண்டு. அஃதல்லாமல், வேறு சில பாரதங்களும் தமிழ் நாட்டில் உள. அவற்றுள், அதிகமாக வழங்குவது வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதம். அப் பாரதம் கி. பி. பதினாறும் நூற்றாண்டில் எழுதப்பட்டது. பாரதம் பாண்டவர் ஐவர்க்கும் துரியோதனன் முதலான நூற்றுவருக்கும் நடந்த பூசலைப்பற்றிப் பேசுவது. இங்குப் பாடமாக வந்திருப்பவை ஐந்தாம் பருவமாகிய உத்தியோக பருவத்தில் உள்ள முதற்போர்ச் சருக்கப் பாடல்கள் சில. உத்தியோகம் - முயற்சி. உத்தியோக பருவம் - போருக்கு முயற்சி செய்துகொண்டிருக்கும் பகுதியைக் கூறுவது.

1. வாசி - குதிரை.

2. சாபம் - வில். வாளி - அம்பு.

4. வில் வாங்கினர் - வில்லை வளைத்தார்கள். வாளிகள் வாங்கி - அம்புகளை எடுத்து. மை இல் - குற்றமற்ற.

7. நாகங்கள் - யானைகள். கொய் உளை - கொய்யப்படுகிற பிடரி மயிரையுடைய குதிரைகள்.

8. ஒச்சினன் - உயர்த்தான்.

9. ஒளியாக - ஒழுங்காக.

## 3. குசேலோபாக்கியானம்

குசேலருடைய சரித்திரத்தைச் செய்யுள் வடிவில் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த தேவராசப்பிள்ளை பாடினர் என்பார்கள். அன்றி, அவருடைய ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடினர் என்பாரும் உண்டு. வறுமையைப் படம் பிடித்துக் காட்டுவதில் திறமுடையவராக அவ்வாசிரியர் காணப்படுகிறார்.

1. குசேலருடைய மனைவியின் திறம் கூறுவது. கொண்கன் - கணவன்.

2. பருவரல் - துன்பம்; வீட்டி - அழித்து.

3. ஒருவிய - நீக்கிய; நீவாரம் - குளநெல், தானே விளைவது.

4. அயின்று - மிசைந்து; உண்டு.

5-7. இச் செய்யுட்களில் வறிய சிறுவர் நிலை வருணிக்கப்படுகிறது.

6. நயக்கும் - விரும்பும்.

7. அட்டார் - சமைத்தார்; மடுத்த - கேள்வியுற்ற.

## 4. மனோன்மணீயம்

மனோன்மணீயம் என்னும் நாடகத்தைத் திரு. பி. சுந்தரம் பிள்ளை 1891-இல் இயற்றினர். லார்டு லிட்டன் என்பார் ஆங்கிலத்தில் எழுதிய 'இரகசிய வழி' (The Secret Way) என்பதைத் தழுவி இந்நாடகம் எழுதப்பட்டுளது. என்றாலும், தமிழ் நூலில் தமிழ் மணங் கமழுமாறு இயற்றி, கற்பவர், 'இது வழி நூலன்று;' எனக் கூறுமாறு செய்துவைத்த பெருமை பேராசிரியர் சுந்தரம் பிள்ளைக்கு உரியது. அவர் 1855-இல் திருவனந்தபுரத்தில் தோன்றி 1897 வரை வாழ்ந்தவர். அவர் இயற்றியுள்ள தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ் நாடு முழுதும் பரவியிருக்கிறது. நூற்றொகை விளக்கம், நாடக விளக்கம் முதலிய வேறு நூல்களும் அவரால் இயற்றப்பட்டன.

ஜீவகன் மகள், மனோன்மணி என்பவள் புருடோத்தமன் என்ற சேரதேசத்தரசனைக் காதலித்து மணக்குஞ்செய்தி நாடகத்துட் கூறப்படுகிறது. ஜீவகன் பாண்டி நாட்டரசன். அவனுடைய முதலமைச்சனாகிய குடிலன் செய்த சூழ்ச்சிகள் இறுதியில் நிறைவெய்தாமற்போனது காட்டப்படுகிறது. குடிலன் மகன் பலதேவனை மனோன்மணியின் தோழி வாணி மணக்க வேண்டும் என்று அரசன் அவளிடம் வற்புறுத்தும் பகுதி பாடமாய் உளது. வாணியோ, நடராஜன் என்பானைக் காதலிக்கிறவள்.

1. ஆய்ந்த - ஆராய்ந்த.
2. உகுத்து - நீக்கி.
5. நச்சியது - விரும்பியது.
8. புரந்து - காப்பாற்றி.
10. விநயமாய் - வணக்கமாய்.
13. வதுவை - மணம்.
23. மிஞ்சலே - மிஞ்சாதே.

## 5. இரட்சணிய யாத்திரிகம்

இந்நூலை இயற்றியவர் திரு. H. A. கிருஷ்ணப் பிள்ளை. இவர் 1827 முதல் 1900 வரை வாழ்ந்தவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் ரெட்டியார்பட்டி என்ற ஊரில் தோன்றி, சாயர்புரத்துக் கல்லூரியில் தமிழாசிரியராய்த் தொண்டாற்றியவர். ஜான் பனியன் என்பார் ஆங்கிலத்தில் இயற்றிய 'மோட்சப் பிரயாணம்' (Pilgrim's Progress) என்னும் கற்பனைக் கதையைத்

தழுவி இரட்சணிய யாத்திரிகம் என்ற இக்காவியம் செய்யப்பட்டுளது. பாவத்திலே அகப்பட்டுக்கொண்ட ஆன்மா, கவலை கொண்டு வாடி, இரட்சகராகிய கிறிஸ்து நாதரது துணையால் பேரானந்தம் அடையும் விதம் இதனுள் விரித்துரைக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து நாதரே இதிற் போற்றப்படும் தலைவர். அவர் செய்த பிரசாரங்களை வெறுத்த சிலர் கூக்குரலிட்டு அரசனைக்கொண்டு அவரைச் சிலுவையில் அறைவித்தனர். அதற்காக அவர் அழைத்துச் செல்லப்பட்ட காட்சி அமைந்த பாடல்களிற் சில இங்குப் பாடப் பகுதியாக வைக்கப்பட்டுள்ளன.

1. தெவ்வர் - பகைவர். கவ்வை நகர் - ஒலியோடு கூடிய நகரம். கொடுபோனர் - கொண்டு போனர் என்பதன் தொகுத்தல் விகாரம்.

2. காக்கை - காப்பாற்றுதல்.

3. பலி மறி - பலிக்காக அமைந்த ஆடு. ஊளூடு - ஊரிடையே.

5. அன்னை மரி - கிறிஸ்து நாதரின் தாய். காதலன் - புதல்வன்.

6. மண்டு துயர் - நெருங்கிய (மிக்க) துன்பம். கடி - காவல்.

8. கீண்டு - பிளந்து.

9. குருசு - சிலுவை.

10. இதில் அடங்கிய கருத்தினை உற்று நோக்குக. "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்க," என்ற திருவள்ளுவர் கருத்து இவ்விடத்து வருதலைக் காண்க.

## 6. ஆசிய ஜோதி

இஃது ஆசிய நாடுகளுள் ஒன்றான இந்தியாவின் ஞானக்கதிரவனாய்த் தோன்றி உலக முழுவதும் அறிவொளி பரப்பிய புத்தர் பெருமானது வரலாற்றின் சில பகுதிகளைக் குறித்துப் பாடிய இனிய எளிய செய்யுள் நூலாகும். இதனைப் பாடியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. வழி நடந்த இளைப்பால் சோர்ந்து கிடந்த புத்தரைக் கண்டு உபசரிக்க எண்ணிய இடைக்குலச் சிறுவன், தான் தாழ்ந்த குலத்தவன் என்ற எண்ணத்தால், தன் கலயத்திற் கறந்த பாலைப் புத்தருக்குக் கொடுக்கத் தயங்கி நின்ற போது, அவனை நோக்கிப் 'பிறப்பினல் உயர்வு தாழ்வு இல்லை,' எனப் புத்தர் அறிவுறுத்துவதாக அமைந்த பகுதி 'புத்தரும் ஏழைச் சிறுவனும்' என்பதாகும்.

1. ஆயர் - இடையர்.

2. கலம் - பாத்திரம்.

3. அண்ணல் - தலைவன்.

4. அலகு இல் கருணை - அளவு இல்லாத பேரருள்.

5. இடர் - துன்பம்.

6. உதிரம் - இரத்தம்.

7. உவர்ப்பு - உப்பின் சுவை.

8. சிறப்பு - பெருமையால் வரும் உயர்வு.

9. தின்மை - 'தீமை' என்பது பேச்சு வழக்கில் திரிந்து வழங்குவது.

10. இவை நிகழ்த்தி - இவ்வறிவுரைகளைச் சொல்லி.

11. தாயினும் இனியன் - எல்லா உயிர்களிடத்தும் பெற்ற தாயைவிடப் பேரன்பு செலுத்துபவன்; புத்தன்.

# III. வருணனை

## 1. இசைப் பயன்

இத்திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவர் என்பார். இவர் காலம் 300 ஆண்டுகட்கு முற்பட்டது. இங்கு வந்துள்ள செய்யுட்கள் நான்கும் சோமசுந்தரக்கடவுள் ஏமநாதனை அடைந்து பாடிய இசையினால் விளைந்த பயனை விளக்குவன ஆகும்.

1. பைத்தலை - படத்தோடு கூடிய தலை; பை - பாம்பின் படம். மஞ்ஞை - மயில். நால்வாய் - தொங்கும் வாயினையுடைய. மத்தமான் - மதயானை. அரிமான் - சிங்கம். புல்வாய் - மான். வல்லியம் - புலி. மருட்கை - வியப்பு. தத்தம் மாறு - தங்கள் தங்களுக்குள்ள பகைமை. தலைத்தலை - இடந்தோறும். மா - விலங்கு. புள் - பறவை.

2. வீழ் - விழுது. சினை - கிளை. ஒன்றறிமரங்கள் - தொட்டால் அறியும் ஓரறிவுடைய மரங்கள். செவியறிவு - கேட்டுணர்தலாகிய ஐந்தாவது அறிவு. 'கண்ணீர்' என்பது கள் + நீர் எனப் பிரிந்து 'தேன்' எனவும்; கண் + நீர் எனப் பிரிந்து 'கண்கள் சொரியும் நீர்' எனவும் இருபொருள் தரும். நகைமுகம் மலர்ந்த- அரும்புகள் முகம் அலர்ந்து விரிந்தன; மகிழ்ச்சியுடன் முகம் மலரப் பெற்றன.

நகை - அரும்பு; மகிழ்ச்சி.

3. கரணம் - மனம் முதலிய கருவிகள். ஊழி - உலகம் ஒடுங்கும் இறுதிக்காலம்.

4. கண் நிறை நுதலோன் - நெற்றிக் கண்ணையுடைய இறைவன், நுதல் - நெற்றி. சராசரவுயிரும் - சரம் அசரம் ஆகிய இரு வகை உயிர்களும்; சரம் - நடப்பன. அசரம் - நிற்பன. இறைவன் பாடிய தேவகீதம் இசை வல்லானாகிய ஏமநாதனை உருக்கியது.

## 2. ஆறு

ஆறு, தாமரைத்தடம்: இச் செய்யுட்களை இயற்றியவர் 'பரிதிமாற்கலைஞர்' என்னும் தமிழ்ப் பெயர் படைத்துக்கொண்ட வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார்; 1871 முதல் 1903 வரை வாழ்ந்து, சிறந்த தமிழ்த்தொண்டு ஆற்றி மறைந்தவர்.

ஓவாது - நீங்காமல். முகிற்குழாம் - மேகக் கூட்டம். நகம் - மலை. வேழம் - யானை. மருப்பு - தந்தம். காழ் - வைரம் பாய்ந்து முற்றின. அகில் துணி - அகிற்கட்டையின் துண்டு. எறிந்து-வீசி, தழங்கு - ஒலிக்கின்ற. கதி - வேகம். ஆற்றினை ஒரு பெண்ணாக உருவகித்தார் ஆதலின், 'நங்காய்' என விளித்தார். குயிற்றல் - செய்தல். சிறை செய்து - அணையிட்டுத் தடை செய்து. புரக்கும் - பாதுகாக்கும். சொல்கு - சொல்வேன்.

## 3. தாமரைத் தடம்

அவை கள்ளாகிய நீரை வடித்தன. நானும் கண்ணினின்று நீர் வடித்தேன். நேர் இல்லாத - ஒப்பில்லாத, உறுகண் - துன்பம். பெட்பின் - விருப்பத்தோடு; தாமரைக் கொடிகளின் இடையே அகப்பட்ட சில விலங்குகள்கூடத் தப்புவது கடினம் ஆதலால், 'கூடி வாழ்வாரே குறையாத வலிமையுடையவர்' என்பதை இது காட்டுகிறது.

## 4. மரங்கள்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசர் இயற்றிய குடும்ப விளக்கு இரண்டாம் பாகத்திலிருந்து எடுக்கப்பட்ட பாட்டுக்கள் மூன்றே, இப்பாடப் பகுதி.

# IV. நீதி

## 1. திருக்குறள்

மக்கள் வாழ்க்கை முறையினை அறம், பொருள், இன்பம் என முப்பால்களாகப் பகுத்துரைக்குந் தமிழ்நூல் திருக்குறள். இந் நூல் அழகிய குறள் வெண்பாவினால் இயற்றப்பெற்றதாதலின்

திருக்குறள் என்ற பெயரால் வழங்கப் பெறுகின்றது; 1330 குறள்களை உடையது. சாதி சமய வேறுபாடின்றி உலக மக்கள் எல்லார்க்கும் பொதுவான உண்மைகளை விரித்துரைக்கும் உலகப் பொது மறையாகிய இந்நூலினை ஆக்கியளித்த பெரியார் ஆசிரியர் திருவள்ளுவனார் ஆவர். திருவள்ளுவர் காலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. திருக்குறளுக்குப் பத்து உரைகள் எழுதப்பெற்றன. நூல் முழுவதுக்கும் அமைந்த உரைகளாக இப்பொழுது கிடைப்பன பரிமேலழகர் உரையும் மணக்குடவர் உரையும் ஆகிய இரண்டேயாகும்.

1. கடவுள் வாழ்த்து - உலகினை இயக்கியருளும் இறைவனை வாழ்த்தி வணங்குதல்.

வேண்டுதல் - விருப்பு. வேண்டாமை - வெறுப்பு. யாண்டும்- எவ்விடத்தும், எக்காலத்தும். இடும்பை - துன்பங்கள்.

2. வான் சிறப்பு - மழையின் இன்றியமையாமையை வற்புறுத்துதல்.

விசும்பு - மேகம்.

3. நீத்தார் பெருமை - 'யான், எனது' என்னும் இருவகைப் பற்றுக்களையும் விட்டொழித்த துறவிகளின் பெருமை கூறுதல்.

இருமை வகை - (பிறவியால் வருந் துன்பமும் பிறவி நோயிலிருந்து விடுபடுதலால் வரும் இன்பமும் ஆகிய) இரண்டின் தன்மைகளையும். அறம் பூண்டார் - துறவறத்தை மேற்கொண்டவர்கள். பிறங்கிற்று - உயர்ந்து விளங்கியது.

4. அறன் வலியுறுத்தல் - அறத்தின் இன்றியமையாமையினை எடுத்துரைத்து அதனையே செய்யும்படி வற்புறுத்தல்:

சிறப்பு - எல்லா இன்பங்களினும் சிறந்த வீடு பேற்றினை, ஈனும் - தரும், அறத்தின் ஊங்கு - அறத்தின் மேம்பட்ட, ஆக்கம் - செல்வம்.

5. ஒல்லும் வகையான் - (தம்மால்) இயலும் அளவு, செல்லும் வாய் - மனம் மொழி மெய் என்ற மூன்று கரணங்கள்.

6. இல்வாழ்க்கை - மனைவியுடன் கூடி நிகழ்த்தும் மனையறம்.

புறத்தாறு - இல்லறத்திற்குப் புறம்பாகிய தவநெறி, எவன் - யாது?

7. வாழ்க்கைத் துணை நலம் - ஒருவன் வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியின் நற்குண நற்செய்கைகள்.

கற்பு என்னும் திண்மை - கற்பு என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற கலங்காத உள்ள வலிமை.

8. சிறை காக்கும் காப்பு - மதில் முதலியவற்றால் காக்கும் காவல், சிறை - மதில் முதலியன, நிறை காக்கும் காப்பு - பெண்கள் நிறை என்னுங் குணத்தால் தம்மைத் தாமே காத்துக் கொள்ளுதல், நிறை - மனத்தைக் கற்பு வழியில் நிறுத்தல், என்ன் செய்யும் - என்ன பயனைத் தரும்? தலை - மேலானது.

9. மக்கட்பேறு - நல்ல பிள்ளைகளைப் பெறுதல்.

தம்மின் - தங்களைக்காட்டிலும்.

10. அன்புடைமை - மனைவி மக்கள் முதலிய சுற்றத்தாரிடத்தே அன்பு செலுத்துதல்.

அறத்திற்கே - அறத்தைச் செய்வதற்கு மட்டுமே, சார்பு - துணை, மறத்திற்கும் - பாவத்தை நீக்குதற்கும்.

11. விருந்து ஓம்பல் - புதியராய் வந்தவர்களை உணவு முதலியன கொடுத்து உபசரித்தல்.

இல் - மனை, ஓம்பி-(பொருளைப்) பாதுகாத்து, வேளாண்மை-உபகாரம்.

12. இனியவை கூறல் - உள்ளத்தின் மகிழ்ச்சியைப் புலப்படுத்தும் இன்சொற்களைச் சொல்லுதல்.

இன்சொலால் - இன்சொல்லாவது, ஆல் - அசை. ஈரம் - அன்பு, அளைஇ - கலந்து, படிறு - வஞ்சனை, செம்பொருள் கண்டார் - அறத்தினையுணர்ந்த பெரியோர்.

13. அல்லவை - அறமல்லாத பாவங்கள், நல்லவை - (பிறர்க்கு) நன்மை தரும் சொற்கள், நாடி - ஆராய்ந்து.

14. செய்ந்நன்றி அறிதல் - ஒருவர் செய்த நன்றியை மறவாது போற்றுதல், செய்யாமல் - ஒருவன் தனக்கு எந்த உதவியும் செய்யாதிருக்க, செய்த உதவிக்கு - தான் அவனுக்குச் செய்த உபகாரத்திற்கு, வையகமும் - இவ்வுலகத்தையும், வானகமும் - தேவவுலகத்தையும், மாற்றல் அரிது - ஈடாகக் கொடுத்தாலும் ஒப்பாகாது.

15. நடுவு நிலைமை - யாவரிடத்தும் விருப்பு வெறுப்பின்றி நடுவு நிலையில் நடத்தல்.

நடுவு ஒரீஇ - நடுவு நிலைமையின் நீங்கி, அல்ல செயின் - அறமல்லாத செயல்களைச் செய்தால், கெடுவல் - கெடுவேன்.

16. அடக்கமுடைமை - தீய வழியிற் செல்லாது அடங்கி நடத்தலையுடையராதல்.

17. பணிதல் - செருக்கின்றி அடங்கி நடத்தல், செல்வந் தகைத்து - செல்வமாகிய சிறப்பினையுடையது.

18. பொறையுடைமை - அறியாமையாற் குற்றஞ் செய்தாரைப் பொறுத்த லுடையராதல்.

ஒறுத்தார் - (தமக்குத் தீமை செய்தவர்களைக் கோபத்தால்) தண்டித்தவர்கள், ஒன்றாக - ஒரு பொருளாக, பொதிந்து வைப்பர் - மனத்தில் வைத்து இடை விடாது நினைப்பர்.

19. அழுக்காறு - பிறர் செல்வத்தைக் கண்டு மனம் புழுங்குதல், அழுக்காறாமை - பொறாமை கொள்ளாதிருத்தல்.

அழுக்காற்றின் - பொறாமை காரணமாக, இழுக்குஆற்றின் - தீய வழியில், ஏதம் - துன்பம், படுபாக்கு - உண்டாதலை.

20. வெஃகாமை - பிறர் பொருளைக் கவர்ந்துகொள்ள விரும்பாமை, வெஃகல் - கவர்ந்துகொள்ள விரும்புதல்.

அஃகாமை - (பொருள்) குறையாமைக்குக் காரணம். அஃகுதல் - சுருங்குதல்.

21. ஒப்புரவு - உலகத்தாருடன் ஒத்து நடத்தல்; ஒருவர்க்கொருவர் உதவி செய்து ஒழுகுதல்.

விற்றுக்கோள் தக்கது - தன்னை விற்றாயினும் வாங்கிக்கொள்ளத்தக்கது.

22. ஈகை - வறுமையால் வருந்துவார்க்கு இல்லையென்னாது கொடுத்தல்.

குறியெதிர்ப்பை - ஒருவரிடம் ஒரு பொருளைக் கைம்மாறாக வாங்கி, வாங்கிய அளவுக்குத் திருப்பிக் கொடுத்தல். நீரது உடைத்து - தன்மையையுடையது.

23. இலன் என்னும் எவ்வம் - 'யான் பொருளில்லாதவன்' என்று இரப்பவன் சொல்லும் இழிவுரையை, உரையாமை - தான் பிறரிடம் சொல்லாதிருத்தலும், ஈதல் - இரப்போர்க்குத் தவறாது கொடுத்தலும், குலன் உடையான் கண்ணே - நற்குடியிற் பிறந்தான் கண்ணே, உள - (இவை யிரண்டும்) உளவாவன.

24. அற்றார் - பொருளற்றவரது, அழிபசி - (எல்லாக் குணங்களையும்) அழிக்கும் பசி நோயினை, தீர்த்தல் - நீக்குக, பொருள் வைப்புழி - செல்வத்தைச் சேமித்து வைக்கும் இடம்.

25. ஒன்றா உயர்ந்த புகழ் - (தனக்கு) ஒப்பில்லாமல் உயர்ந்த புகழ், பொன்றுது - அழியாமல்.

26. வசை - பழிச்சொல், இசை - புகழ், எச்சம் - மிஞ்சியிருப்பதாகிய புகழ்; ஒருவர் இறந்த பின்னரும் அழியாது எஞ்சி இருப்பது அவர் பெற்ற புகழாதலின், எச்சம் எனப்பட்டது.

27. புலால் மறுத்தல் - ஊன் உண்ணுதலை நீக்குதல்.

தன் ஊன் - தனது உடம்பினை, பெருக்கற்கு - வளர்ப்பதற்காக, பிறிது ஊன் - மற்றோர் உயிரின் உடம்பினை.

28. தவம் - தமக்கு வருந் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு பிற உயிர்களைப் பாதுகாத்தல்.

வேண்டிய - விரும்பிய பயன்களை, வேண்டியாங்கு - விரும்பியபடியே.

29. கூடாவொழுக்கம் - தவத்தோடு பொருந்தாத தீய செயல், மழித்தல் - (துறவு நிலை கருதி) மொட்டையடித்துக் கொள்ளுதல், நீட்டல் - சடை வளர்த்தல், உலகம் - உயர்ந்தோர்.

30. வாய்மை - உண்மையே பேசுதல், யாதொன்றும் - ஒரு சிறிதும், தீமை இலாத சொலல் - (பிறர்க்குத்) துன்பம் தாராத சொற்களைச் சொல்லுதல்.

31. வெகுளாமை - கோபத்தை மேற்கொள்ளாதிருத்தல், சினம் - கோபம்.

32. இன்னா செய்யாமை - பிறர்க்குத் துன்பந்தரும் செயல்களைச் செய்யாதிருத்தல், நோய் - துன்பம்.

33. நிலையாமை - இளமை, உடம்பு, செல்வம் என்பன ஒரு நிலையிலில்லாது அழியுந்தன்மை.

நெருநல் - நேற்று, பெருமை உடைத்து - (நிலையாமையை) மிகுதியும் உடையது.

34. மெய்யுணர்தல் - 'பிறப்பு, வீடு' என்பவற்றின் இயல்பினை உள்ளபடியே உணருந் தன்மை.

காமம் - ஆசை, வெகுளி - கோபம், மயக்கம் - அறியாமை, நாமம் கெட - பெயர் கூட இல்லையாகி அழிய.

35. ஊழ் - இருவினைப் பயன்களை வினை செய்தாரிடம் சேர்ப்பிக்கும் இறைவனது முறைமை.

நன்று - நல்வினை, ஆம் கால் - பயன் கொடுக்கும்பொழுது, நல்லவாக் காண்பவர் - நல்லனவென்று விரும்பி அனுபவிப்பவர், அன்று - (நல்லது அல்லாததாகிய) தீவினை, ஆம் கால் - விளையும்

பொழுது, அல்லற்படுவது - துன்புற்று வருந்துவது, எவன் - யாது கருதி?

36. இறை மாட்சி - அரசனுடைய நற்குணநற்செய்கைகள், மீக்கூறும் - உயர்த்துக் கூறும்.

37. கல்வி - கற்கத் தகுந்த நூல்களைக் கற்றல்.

எண் - கணிதம், எழுத்து - இலக்கிய இலக்கணம்.

38. உவப்ப - மகிழும்படி, தலைக்கூடி - (நட்பினால்) சேர்ந்திருந்து, உள்ள - ('இப்பெரியாரை எப்பொழுது காண்பேம்!' என) நினைக்கும்படி, அனைத்து - அத்தன்மையது.

39. கல்லாமை - கற்றற்குரிய நூல்களைக் கல்லாது சோம்பியிருத்தலால் வரும் தாழ்வு கூறுதல்.

சொல்லாட - (பிறருடன்) பேசிய அளவில், சோர்வுபடும் - அழிந்துவிடும்.

40. விலங்கு - மிருகங்கள், இலங்கு நூல் - அறிவு விளங்குதற்குக் காரணமாகிய நூல்.

41. கேள்வி - நூற்பொருளை அறிந்தார் சொல்லக் கேட்டுணர்தல்.

நுணங்கிய கேள்வியர் - நுட்பமான பொருளினைக் கேட்டுணரும் ஆற்றலுடையார், வணங்கிய வாயினர் ஆதல் - பணிவோடு கூடிய மொழியினையுடையராதல், 'வாய்' என்னும் பெயர் அதனாற் பேசப்படும் மொழிக்கு ஆயினமையால் ஆகுபெயர்.

42. அறிவுடைமை - கல்வி கேள்விகளால் உண்டாகிய அறிவுடன் இயற்கையறிவு உடையராதல்.

43. உலகம் எவ்வது உறைவது - உலகத்தார் எவ்வழியொழுகுகின்றார்களோ, அவ்வது உறைவது அறிவு - தானும் அவ்வழியில் ஒழுகுவது ஒருவனுக்கு அறிவாகும்.

44. பெரியாரைத் துணைக்கோடல் - (நல்வழியில் ஒழுகும்) பெரியார்களைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல்.

தம்மின் பெரியார் - தம்மைவிட உயர்ந்த பெரியார்கள், தமரா(க) - தமக்குச் சுற்றத்தாராக, ஒழுகுதல் - அவர்கள் வழி அடங்கி நடத்தல்.

45. இடிப்பார் - தவறு கண்டால் கண்டித்துத் திருத்த வல்ல பெரியவர்கள், ஏமரா - (ஏமம் மருவாத) காவல் அற்ற.

46. தெரிந்து செயல் வகை - அரசன் தான் செய்யும் காரியங்களை ஆராய்ந்து செய்யும் முறை.

ஆக்கம் கருதி - இலாபத்தை விரும்பி, முதல் இழக்கும் செய்வினை - முதற்பொருளையே இழந்துவிடும் தொழிலை, ஊக்கார் - (மேற்கொண்டு) முயலார்.

47. நன்று ஆற்றலுள்ளும் - நன்மையைச் செய்வதிலும், ஆற்றுக்கடை - செய்யாத இடத்து.

48. நுனிக்கொம்பர் - கிளையின் நுனியில். கொம்பு - கொம்பர் - போலி.

49. காலம் அறிதல் - தான் எடுத்துக்கொண்ட காரியத்தைத் தொடங்கிச் செய்தற்குரிய காலத்தினை அறிந்துகொள்ளுதல்.

கருவியால் - (ஒரு வினையைச் செய்தற்கு ஏற்ற) கருவிகளுடனே, காலம் அறிந்து செயின் - (அதற்குரிய) காலத்தையும் அறிந்து செய்தால், அருவினை என்ப உளவோ - செய்தற்கரிய செயல்கள் எவையேனும் உண்டோ (ஒன்றுமில்லை என்பதாம்.)

50. கூம்பும் பருவத்து - அடங்கியிருக்க வேண்டிய சமயத்தில், கொக்கு ஒக்க - (மீனை நாடிய) கொக்கு அசைவற்றிருப்பது போல அடங்கியிருந்திடுக, சீர்த்த இடத்து - காலம் வாய்த்த பொழுது, அதன் குத்து ஒக்க - அக்கொக்கு விரைந்து குத்துமாறு போலத் தன் தொழிலைச் செய்து முடிக்க.

51. இடன் அறிதல் - தனக்கு வெற்றி தரும் இடத்தை அறிந்துகொள்ளுதல்.

எஞ்சாமை எண்ணி - (ஒன்றையும்) விடாது ஆராய்ந்து, இடத்தால் செயின் - இடத்திற்கு ஏற்பச் செய்தால்.

53. தெரிந்து வினை ஆள்தல் - வினை செய்வாரை ஆராய்ந்து அவரவர்க்கு ஏற்ற தொழில்களில் அவர்களை ஆளும் திறம்.

தேற்றம் - தெளிந்து துணிதல், அவா இன்மை - ஆசை இல்லாமை.

54. சுற்றம் தழால் - சுற்றத்தாரைத் தழுவி ஆதரித்தல்.

பற்று - செல்வம், அற்ற கண்ணும் - ஒழிந்த வறுமைக் காலத்தும், பழமை - பழைய உறவு.

55. பொச்சாவாமை - செய்ய வேண்டிய கடமைகளில் மறதி இல்லாமை. பொச்சாப்பு - மறதி.

அரண் - கோட்டை மதில் முதலியவற்றால் உண்டாகும் பாதுகாவல்.

56. செங்கோன்மை - அரசனது நீதியின் வழிப்பட்ட ஆட்சி முறை.

ஒறுத்தல் - தண்டித்தல், பைங்கூழ் - பயிர்.

57. வெருவந்த செய்யாமை - அஞ்சுதற்குரிய கொடிய செயல்களை அரசன் செய்யாது தவிர்தல்.

அருஞ்செவ்வி - (தன்பால் முறை வேண்டி வருகின்றவர்களால்) காணுதற்கு அரியனாதல்.

இன்னாமுகத்தான் - கடுகடுத்த முகமுடையவன்.

58. கண்ணோட்டம் - தன்னுடன் பழகியவர்கள் சொல்லியதை மறுக்காது உடன்படுதல். இது 'தாட்சணியம்' எனப்படும்.

உலகியல் - உலக நிகழ்ச்சி, நிலக்குப் பொறை - பூமிக்குப் பாரம்.

59. ஊக்கம் - உள்ளக் கிளர்ச்சி, உரம் - அறிவு, உள்ள வெறுக்கை - ஊக்கமாகிய செல்வம்.

60. ஆள்வினை - இடைவிடாத உழைப்பு, தெய்வத்தால் - ஊழ் வலியால், கூலி - பயன்.

61. அமைச்சு - (அரசியலை நடத்தும்) அமைச்சனது தன்மை, அறிகொன்று - (பெரியோர் சொல்லும்) அறிவுரையை அழித்து, அறியான் எனினும் - (அரசன் தானும்) அறியாதவன் ஆயினும், உழை இருந்தான் - (அரசன்) பக்கத்தே இருக்கும் அமைச்சன்.

62. வினைத்தூய்மை - செய்யப்படும் தொழில் தீமையொடு கலவாது தூய்மையுடையதாதல்.

ஈன்றாள் - தாய், சான்றோர் - நற்குணங்களால் நிறைந்த பெரியார்.

64. வினைத்திட்பம் - எடுத்த காரியத்தை முடித்தற்கு வேண்டிய மன வல்லமை.

65. குறிப்பறிதல் - (பிறர் கருதியதனை அவர் சொல்லாமலே) குறிப்பினால் அறிந்துகொள்ளுதல்.

அடுத்தது - தன்னைச் சேர்ந்த பொருளின் நிறத்தை, காட்டும் - அறிவிக்கின்ற, பளிங்கு - கண்ணாடி, நெஞ்சம் கடுத்தது - மனத்தில் மிகுந்து தோன்றிய எண்ணத்தை.

66. படைச் செருக்கு - படை வீரர்களின் வீரப்பண்பு.

விழுப்புண் - வீரர்கள் புறங்காட்டாது போர் செய்யும் பொழுது அவர்கள் முகத்திலும் மார்பிலும் பட்ட புண்கள்.

67. பண்புடையாளர் தொடர்பு - நற்குணமுடைய பெரியாரது நட்பு, பயில்தொறும் - (அவர்களுடன்) பழகுந்தோறும்.

68. நட்பு ஆராய்தல் - நண்பர்களை ஆராய்ந்து அறிதல்.

ஊதியம் - இலாபம், பேதையார்-அறிவில்லாதார், கேண்மை-நட்பு, ஒரீஇவிடல் - நீக்கிவிடுதல்.

69. நண்பர்களின் பழைமை கருதி அவர்கள் செய்த பிழைகளைப் பொறுத்துக்கொள்ளுதல் பழைமை எனப்படும்.

பெருங்கிழமை - மிகுந்த உரிமை, நோதக்க - வெறுக்கத்தக்க செயல்கள், நட்டார் - நண்பினர்.

70. சிறுமை - துன்பம், சீரழித்தல் - புகழைக் கெடுத்தல்.

71. மானம் - எப்பொழுதும் தம் நிலையிலிருந்து குறையாமையும் ஊழ் வசத்தால் குறைவு வந்தால் உயிர் வாழாமையும் ஆகிய இயல்பு.

புத்தேள் நாடு - தேவருலகு, உய்யாது - செலுத்தாது, இகழ்வார் - தம்மை அவமதிப்பார், நிலை - நிற்றல்.

72. சான்று - (பல குணங்களாலும்) நிறைந்து, ஆண்மை - (அக்குணங்களை) ஆளுதலாகிய தன்மை.

நோன்மை - தவம். தவத்திற்கு எல்லா அறங்களைக்காட்டிலும் கொல்லாமையாகிய அறம் சிறப்புடையதுபோல, சால்புக்குப் பிறர் குற்றஞ் சொல்லாமையாகிய குணம் சிறப்புடையதாம்.

73. இன்னா - துன்பந்தருவன (தீமை), இனிய - இன்பந்தருவன (நற்செயல்கள்), என்ன பயத்தது - என்ன பயனுடையது?

74. நாணுடைமை - பழிபாவங்களுக்கு அஞ்சி ஒதுங்குதல். அணி - ஆபரணம், பிணி - நோய், பீடுநடை - (தலைநிமிர்ந்து நடக்கும்) பெருமித நடை.

75. குடிசெயல்வகை - தன் குடும்பத்தைத் தாழாது உயர்த்தும் வகை, குற்றம் - அறத்திற்கும் நீதிக்கும் மாறுபட்ட தீச்செயல்கள்.

76. உழவு - உழுதற்றொழில்.

இலம் - வறுமையுடையேம்; அசைஇ - சோம்பி, நகும் - (இகழ்ந்து) சிரிப்பாள்.

77. நல்குரவு - வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் இல்லாத வறுமை.

நல்கூர்ந்தார் - வறுமையுற்றவர், சோர்வுபடும் - பயனில்லாது ஒழியும்.

78. இரவு அச்சம் - யாசித்தற்கு அஞ்சுதல்.

இரவு உள்ள - இரந்து நிற்றலின் கொடுமையை நினைக்க, உள்ளம் உருகும் - மனம் கரையும், கரவு - (இரப்பார்க்கு இல்லை யென்று) மறைக்கும் கொடுமை.

79. கயமை - கீழ்மக்களது தன்மை, கயவர் - கீழ் மக்கள்.

தாங்கள் விரும்பியவற்றைச் செய்தொழுகும் தேவர்போலக் கீழ்மக்களும் வரையறையின்றித் தாங்கள் விரும்பியவாறே நடப்பார்கள் எனப் புகழ்வது போலப் பழித்தார் திருவள்ளுவர்.

80. அறைபறை - அடிக்கப்படும் தோற்பறை; தம்பட்டம். மறை - இரகசியம், உய்த்து உரைத்தல் - ஆராய்ந்து உரைத்தல்.

## 2. நாலடியார்

நான்கு அடிகளால் ஆய வெண்பாக்களால் அமைந்த ஒரு நூலிற்கு 'நாலடி' என்பது பெயர். அதன் பெருமை நோக்கி, 'நாலடியார்' எனச் சிறப்பிக்கப்பட்டது. ஆர் - சிறப்பினைக் காட்டும் விகுதி. இதிலுள்ள பாக்களைச் சமண முனிவர் பலர் இயற்றினர் என்று சொல்லுவார்கள். இதன் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முந்தியதாய் இருக்கலாம். இஃது ஒரு நீதி நூல். இது 'பதினெண் கீழ்க்கணக்கு' என்னும் நூல் வரிசையில் முதலாவதாக எண்ணப்படுவது. திருக்குறளும் இவ்வரிசையைச் சேர்ந்ததே.

2. உறுபுலி - (வலிமை) மிக்க புலி.

3. முத்தரையர் - இவர் முத்தரசர் எனவுங் கூறப்படுவர். தஞ்சாவூரையடுத்த வல்லத்தில், விசயாலயசோழன் காலத்திற்கு முன்னதாக முத்தரசர் என்ற குறுநிலமன்னர் வாழ்ந்ததாக அறிகிறோம். விசயால்யன் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். முத்தரையர் பெருஞ்செல்வர்.

கருனை - பொறிக்கறி. தாளாண்மை - முயற்சியை ஆளுந் தன்மை; முயற்சி நிரம்பவுடைமை.

5. உளை அலரி - பிடரி மயிரைப் போன்ற மலர், பொறித்தல் - எழுதுதல்.

6. ஊக்கி - முயன்று.

7. கேண்மை - நட்பு. பிறைபோல - வளர்பிறைபோல. வான் - ஆகாயம். மதியம் - சந்திரன். வைகலும் - நாடோறும்.

8. நளிகடல் - பரந்த கடல். சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன். நாள் நிழல் - காலை நிழல்.

9. நல்லார் - நல்லறிவுடையவர். அல்லார் - நல்லறிவில்லாதவர்.

## 3. சிறுபஞ்சமூலம்

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதனைப் பாடியவர் காரியாசான் என்பவர். செவ்வியம், சித்திர மூலம், கண்டுபரங்கி, பேரத்தை, சுக்கு ஆகிய ஐந்தும் கொண்டு இறக்கிய கஷாயம்போல இந்நூலில் ஒவ்வொரு பாட்டிலும் கூறப்படும் ஐந்து பொருள்களும் நன்மை செய்வன ஆதலின், இந் நூல் இப் பெயர் பெற்றது.

1. பூதர் - பூத பைசாசங்கள், மூன் - மூப்பு வருதற்கு முன்பு (இளமையிலேயே), ஆதரே - அறிவில்லாதவரே, என்பார் - என்று தற்பெருமை பேசுபவர்.

2. வான்குருவி - தூக்கணாங்குருவி, அரக்கு - (ஒருவகை எறும்புகளால் செய்யப்படும்) செம்மெழுகு, வால் - வெண்மை, உலண்டு - புழுக்கள் நூற்ற நூல், கோல்தருதல் - கோல் புழுவால் செய்யும் கூடு, வாய்ப்பன - செய்ய முடிவன, ஒல்காது - குறைவு படாமல்.

3. வருவாய் - பொருள் வரும் வழி, வழக்கு அறிந்து - செலவை உணர்ந்து, வீழ்ந்து - விரும்பித் தழுவி, தெய்வதையும் - தெய்வத்தையும்.

4. இல் - வம்ச உயர்வு, தன்னை - தன் கொள்கையை, கருதற்பாடு - மதிக்கப்படுதலை, வாழான் - வாழாதவனாய், முற்று எச்சம்.

5. மூவார் - எதிர்மறைப் பலர்பால் வினைமுற்று.

| மூ | + | வ் | + | ஆ | + | ஆர் |
|---|---|---|---|---|---|---|
| ↓ | | ↓ | | ↓ | | ↓ |
| பகுதி | | எதிர்கால இடைநிலை | | எதிர்மறை இடைநிலை புணர்ந்துகெட்டது | | பலர்பால் வினைமுற்று விகுதி |

## 4. ஆசாரக் கோவை

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதனைப் பாடியவர் பெருவாயின் முள்ளியார். ஆசாரக் கோவை - நல்லொழுக்க முறைகளைத் திரட்டிக் கோத்துவைத்துள்ள நூல்.

1. வைகறை - விடியல், செய்யும் - அடுத்த நாளில் செய்யப் போகும், ஒண்மை - ஒளிர்மை, பொருள் - பொருள் வருவாய்க்குரிய செயல், வாய்வது - உண்மை, முந்தையோர் - (நம்) முன்னோர்.

2. நெறிப்பட்டார் - நல்ல ஒழுக்கம் உடையவர், வினையால் அணையும் பெயர் ; ஆய்ந்த - நூல் ஆராய்ச்சி உள்ள, காய்தல் - எண்ணெய் பெறுது தலைவற்றுதல், தலைஒழிய - தலையை நீக்கி (கழுத்தளவு).

3. கிடவார் - துயில்கொள்ளார், விளக்கு இகழல் - விளக்கு ஏற்றுதிருத்தல், முன் அந்தி - அந்திமுன் - முன் மாலைப்பொழுது, அல்கு - அல்கல், இரவு.

4. சுடர் இடை - விளக்கிற்கும் விளக்கின்முன் இருப்பவர்க்கும் இடையில், இடர் - குளிரான துன்பம், மாசுணி - (மாசு + உணி) - அழுக்குடைய உடை, கீழ்தம்மேல் - தம் கீழும்மேலும், உரைத்தல் - பிறர் மேல் படுதல், உதிரார் - உதறுர், காட்சி - அறிவு.

போகார் - போ + கு + ஆ + ஆர். கு - சாரியை, ஆ - எதிர் மறை இடைநிலை.

5. நடை - நடத்தை, தொழிற்பெயர் ; சொற்சோர்வு - வாய்விட்டுச் சொல்லும் சொல், குடிமை - குடிப்பிறப்பு.

# V. புகழ்ப்பாக்கள்

## 1. திருநாவுக்கரசர் தேவாரம்

(7-ஆம் நூற்றுண்டு)

1. இஃது ஒரு திருத்தாண்டகம். 'தாண்டகம்' என்பது ஒருவகைப் பா. நடலை - குற்றம், ஏமாப்போம் - செருக்குறுவோம்.

2. திருவாவடுதுறையைப்பற்றிய திருத்தாண்டகம்.

3. திருவலிவலத்தைப் பற்றிய திருத்தாண்டகம். ஏயவன் - பொருந்தினவன்.

## 2. குலசேகராழ்வார்—பெருமாள் திருமொழி

(தொள்ளாயிரம் ஆண்டுகட்கு முந்தியது)

1. விற்றுவக்கோடு - மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று ; கொச்சி - திருச்சூர்த் தொடர்வண்டி வரிசையில் உள்ள இடப் பள்ளியிலிருந்து 10 மைல் தூரத்தில் உள்ளது.

2. அறுத்துச் சுடுதல் - இரணச் சிகிச்சை.

3. பைங்கூழ் - பயிர், மைத்து - கருமையுற்று, வீட்டுதல் - அழித்தல்.

### 3. திருப்புகழ்

அருணகிரிநாதர் முருகப்பெருமானைப் புகழ்ந்து பாடிய இசைப் பாடல்களின் தொகுதி ‘திருப்புகழ்’ என வழங்கப் பெறுவதாகும். அருணகிரிநாதர் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தவராவர்.

1. காமியம் - ஆசைத் தொடர்பு. தூமம் - நறும்புகை. கடிந்த - நீக்கிய, கொன்ற. ஏரகம் - சுவாமி மலை.

### 4. இராமலிங்க சுவாமிகள் விண்ணப்பம் (1823—76)

திருவருட்பாப் பாடிய இராமலிங்க அடிகளார் கடவுளிடத்துப் பல விண்ணப்பங்கள் செய்துகொண்டுள்ளார். அவை பிள்ளைப் பெருவிண்ணப்பம், பிள்ளைச் சிறு விண்ணப்பம், நாடக விண்ணப்பம் முதலியன. இங்கே பாடமாக வந்திருப்பவை (இரண்டாம் திருமுறை) நாடக விண்ணப்பத்தில் உள்ளவை ஆகும்.

2. அரந்தை - துன்பம்.

## VI. சிறு பிரபந்தங்கள்

### 1. அற்புதத் திருவந்தாதி

இந்நூல் காரைக்கால் அம்மையாரால் இயற்றப் பெற்றது. அம்மையார் வாழ்ந்த காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு என்பர். அம்மையார் பாடிய வேறு நூல்கள் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள், திருவிரட்டை மணிமாலை என்பன. ஒரு பாட்டின் இறுதியிலுள்ள எழுத்து, அசை, சீர், அடி என்பவற்றுள் ஒன்று அடுத்த பாட்டின் முதலாக அமைந்து வருவது ‘அந்தாதி’ என்னும் பிரபந்தமாகும்.

1. காதல் சிறந்து - அன்பு பெருகி, மைஞான்ற - நஞ்சக் கறை பொருந்திய, எஞ்ஞான்று - எப்பொழுது.

2. படரும் நெறி - செல்லுதற்குரிய நல்வழி, என்பு - எலும்பு, எரி ஆடும் - ஈமத் தீயில் நின்று ஆடும், ஆள் ஆவோம் - அடிமை ஆவோம்.

3. பவர்ச்சடை - கொடிபோன்று நெருங்கிய சடை, பகா - பகுக்கப்படாத, போழ் - துண்டமாகிய பிறை.

4. அல்லல் - துன்பம், நீள் ஆகம் - நீண்டு உயர்ந்த திரு மேனி.

5. தோற்றுவிப்பான் - படைத்தலாகிய தொழிலைச் செய்வான், இறக்கஞ் செய்வான் - ஒடுக்குதலாகிய அழித்தற்றொழிலைச் செய்வான், அது மாற்றுவான் - அத்துன்பத்தை நீக்கிக் காத்தருளுவான்.

## 2. நால்வர் நான்மணி மாலை

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்னும் சைவ சமய ஆசிரியர் நால்வரையும் போற்றுவது இந்நூல். நால்வகைப்பட்ட மணிகளால் தொடுக்கப்பட்ட மாலை போல, வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நால்வகைச் செய்யுட்களால் தொடுக்கப் பட்டமையால், 'நான்மணி மாலை' என்னும் பெயருடைத்தாயிற்று. இந்நூலாசிரியர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளாவர். இவர் வாழ்ந்த காலம் 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும்.

1. திருஞான சம்பந்தரைப் பற்றிய பாட்டு வெண்பாவில் அமைந்துளது.

புகலி - சம்பந்தர் பிறந்த சீகாழி என்னும் பதியின் பெயர்களுள் ஒன்று. பால் கொடுத்த தாய் - உமாதேவி. சந்தை - பதிகம் முதலியவற்றுள் செய்யுள்தோறும் திரும்பத் திரும்ப வரும் சொல். "'நமச்சிவாய' எனும் சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்" என வருதல் காண்க.

2. இது திருநாவுக்கரசரைப்பற்றியது. சொல்லிறை-சொல் அரசன், திருநாவுக்கரசன். தாயிலி - தனக்குத் தாய் இல்லாதவன் (பிறப்பற்றவன்).

3. இது சுந்தரரைப்பற்றியது. நோக்கு - பார்வை (யையுடைய கண்); நுதலோன் - நெற்றியன்; நெற்றியிற் கண்ணுடைய சிவபெருமான். நூற்பகவு - நூற்பிளவு, மிகமெல்லிய. மருங்குல் - இடை, புலவி - கணவனுடன் மனைவி கொண்ட சிறு பூசல் (சண்டை), மாற்றுவான் - மாற்ற, கலிக்காமன் - ஏயர்கோன் கலிக்காம நாயனர் என்பவர். அவர் சுந்தரரைக் காணப்பொறாது கத்தியால் தம் வயிற்றிற் குத்திக்கொண்டார். கான்றிட - கக்கிட, நாவலன் சுந்தரன்.

4. இது மாணிக்கவாசகரைப் பற்றியது. உருவகம்.

சிவன் - கருணைக்கடல்
மாணிக்கவாசகர் - மழை
திருவாசகம் - பெருநீர்
ஓதுவார் மனம் - குளம்
ஓதுவார் நா - மதகு.
கேட்போர் செவி - மடை
கேட்போர் உளம் - நிலம்
அன்பு - வித்து
சிவம் - மென்முளை
கருணை - மலர்
முக்தி - மெய்ப்பயன்

## 3. தேசீய கீதங்கள்

### விடுதலை

தேசீய கீதங்கள் முதலிய பல பாக்களைப் பாடிய காலஞ் சென்ற சுப்பிரமணிய பாரதியாரை அறியாதார் இலர். இவர் பாக்கள் பாடப்படாத இல்லம் தமிழகத்தில் இல்லை. இவர் ஏறத் தாழ 25 ஆண்டுகளுக்கு முன் இருந்தவர்.

1. தீயர், புலையர் - மலையாள நாட்டுத் தாழ்த்தப்பட்டவர் பெயர்கள். பரவர் - நெய்தல் நிலத்தார், மீன் பிடிப்பவர். மறவர்- வீரர். வீரர் மரபினர் 'மறவர்' எனப்படுகின்றனர்; பாண்டி நாட்டில் இருப்பவர்.

3. மடமை - அறியாமை. தாதர் - அடிமைகள்;

## 4. சங்கோலி

### புது வாழ்வு

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கள் இயற்றிய 'சங்கோலி' என்னும் நூலிலிருந்து இப்பகுதி எடுக்கப்பட்டதாகும்.

1. அகிலத்தில் - எல்லா நாடுகளிலும், கோணாத பணி - முரண்படாத தொண்டு.

2. குறி - குறிக்கோள், இலட்சியம்.

# VII. சிலேடை முதலியன

1, 2. இவை முறையே பாம்புக்கும் வாழைப் பழத்துக்கும், பாம்புக்கும் எள்ளிற்கும் சிலேடையாக அமைந்தனவாகும். இச் செய்யுட்களை இயற்றியவர் காளமேகப் புலவர்.

1. நஞ்சு இருக்கும் - நஞ்சினையுடையதாயிருக்கும் (பாம்பு); நைந்து இருக்கும் (கனிந்திருக்கும்) வாழைப்பழம். தோல் உரிக்கும் - பாம்பு தோல் உரிக்கும்; வாழைப்பழம் தோல் உரிக்கப்படும்.

பல் பட்டால் மீளாது - பாம்பின் பல் தீண்டினால் உயிர் பிழைத்தல் அரிது; பழந்தின்பார் பல் பட்டால் பழம் மீண்டும் பழைய வடிவை யடைதல் இயலாது.

2. ஆடிக் குடத்து அடையும் - ஆடிய பின் குடத்தின் கண்ணே சென்று அடங்கும் (பாம்பு); செக்கிலிட்டு ஆடிய பின் எண்ணெயாகக் குடத்தில் வைக்கப்பெறும் (எள்). ஆடும்போதே இரையும் - படமெடுத்து ஆடும்பொழுதே சீறும் (பாம்பு); செக்கிலிட்டு ஆடும்பொழுது இரைச்சலுண்டாகும் (எள்). மூடித் திறக்கின் முகம் காட்டும் - பெட்டியில் வைத்து மூடிப் பின் திறந்தால் படத்தினைக் காட்டியெழும் (பாம்பு); குடத்தில் வைத்துப் பின் திறந்து பார்த்தால் பார்ப்பவர்களது முகத்தின் நிழலைத் தன்னிடத்தே காண்பிக்கும் (எண்ணெய்). மண்டை பற்றின் பரபரெனும் - (பாம்பு) தலையில் தீண்டினால் பரபரப்பு (மயக்கம்) உண்டாகும்; எண்ணெயைத் தலையில் வைத்துத் தேய்க்குங்கால் பரபர என்னும் சத்தமுண்டாகும்; பிண்ணாக்கும் உண்டாம் - பாம்பு பிள் நாக்கு (பிளவுபட்ட நாக்கு) உடையதாகும்; எள்ளிலிருந்து பிண்ணாக்கு உண்டாகும்.

3. இச்செய்யுளைப் பாடியவர் சீகாழி அருணாசலக் கவிராயர். தம் வயலில் நடுதற்குரிய கரும்புகளை அனுப்பிவைக்கும்படி குளத்தூர் முத்து வீரப்பப் பிள்ளைக்கு இச்சீட்டுக் கவியினை எழுதி அனுப்பினர். இவர் கம்பர் இயற்றிய இராமாயணத்தை முதல் நூலாகக் கொண்டு இராம நாடகக் கீர்த்தனை என்ற நூலைப் பாடியுள்ளார்.

வித்துவ சனம் - புலவர் பெருமக்கள். 87020

4. இஃது என்ன?

இந்தப் பாட்டினைப் பாடியவர் அழகிய சோக்கநாதப் பிள்ளை என்பவர். இவர் திருநெல்வேலியில் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர். முற்பாதி - புதை, இருட்டு - அல், தையல் - பெண், ஏவற்சொல் - புதை, புயல் - மேகம், மிருகத்தீனி - புல், மாதத்தில் ஒன்று - தை. இதற்கு வேண்டும் விடை கடைசி அடியிலேயே இருக்கிறது.

---

ATB/150

# TAMIZH ILAKKIYA MANI MALAI

(Tamil Selections for Higher Forms)

**BOOK I**

By

A. CHIDAMBARANATHA CHETTIAR, M.A., Ph. D.

THE NATIONAL PUBLISHING CO.

6, KONDI CHETTY STREET, MADRAS-1

Copyright] 1949 [Price Re. 1-8-0